COVIYAT

# சோவியத்

KALVI MURAI

# கல்வி முறை

4 - JUL 1978

நெ. து. சுந்தரவடிவேலு

CUNTARAVAṬIVĒLU
(NETU)

18613

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட்,
சென்னை—600 098.

முதல் பதிப்பு : டிசம்பர், 1977
உரிமைப் பதிவு

2160/78

49

விலை: ரூ. 4-00 251049

T.577
31L7

அச்சிட்டவர் :
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை — 600 098.

NEMARA PUBLIC LIBRARY
4 - JUL 1978
MADRAS 8

## உள்ளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 5 |
| 2. | பொதுக் குறிப்புகள் | 10 |
| 3. | பறவைப் பார்வை | 18 |
| 4. | எல்லோரும் எழுத்தறிவு பெற்ற நாடு | 27 |
| 5. | கல்விக் கோட்பாடுகளும் நிலைகளும் | 34 |
| 6. | பள்ளிக்கு முந்திய கல்வி | 45 |
| 7. | பொதுவான உயர்நிலைப் பள்ளிப் படிப்பு | 60 |
| 8. | தொழிற் கல்வியும் சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் | 70 |
| 9. | உயர் கல்வி | 75 |
| 10. | தேர்வுகள் | 84 |
| 11. | பாட நூல்களும் பிற படிப்புச் சாதனங்களும் | 89 |
| 12. | ஆசிரியர் பயிற்சி | 95 |
| 13. | மதி நுட்பம் மிகுந்தோர்க்கான கல்வி | 103 |
| 14. | நூலகப் பணி | 112 |
| 15. | கல்வி நிர்வாகம்—கல்விக்கு நிதி | 118 |
| 16. | நம்பிக்கையோடு முன்னேற | 127 |

# அறிமுகம்

சோவியத் ஒன்றியம். இது, படித்தவர் அனைவரும் அறிந்த பெயர். இந்நில உலகில் மிகப் பெரிய நாடு, சோவியத் சமதர்மக் குடியரசுகளின் ஒன்றியம் — சோ.ச.கு.ஒ — ஆகும். இதன் பரப்பு எவ்வளவு? இதன் பரப்பு, 2 கோடி 24 இலட்சம் சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இவ்வளவு பெரிய பரப்பு, உலக அளவில் ஆறில் ஒரு பங்காக உள்ளது. சோவியத் ஒன்றியம் ஒரே கண்டத்தில் அடங்கியுள்ளதா? இல்லை; இரு கண்டங்களில் விரிந்துள்ளது. இது ஐரோப்பாவில் பாதியளவும் ஆசியாவில் மூன்றிலொரு பாகத்திற்கும் பரவியுள்ளது.

சம ஆட்சியுரிமையுடைய, பதினைந்து குடியரசுகளின் விருப்ப பூர்வமான ஒன்றிப்பே, இரு கண்டங்களிலும் வியாபித்துள்ள, சோவியத் ஒன்றிய அரசாகும். இது நூற்றுக்கு மேற்பட்ட, தேசிய இனங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வினங்களில், பெரியனவும் சிறியனவும் உள்ளன. இரஷ்ஷியர்கள், மொத்த மக்கள் எண்ணிக்கையில், நூற்றுக்கு ஐம்பத்து மூன்று விழுக்காட்டினராக உள்ளார்கள். உக்ரேனியர்கள், நூற்றுக்குப் பதினேழு விழுக்காட்டில் இருக்கிறார்கள். கோடிக் கணக்கில் உள்ள இப்பெரிய இனங்களோடு, ஆயிரம் மக்களே உள்ள ஒரோச்சி, ஞானசானி முதலிய சின்னஞ்சிறு இனங்களும் இருக்கின்றன. அனைவரும் அமைதியோடும் நட்போடும் வாழ்கிறார்கள். மொத்தத்தில், 1973 ஆம் ஆண்டின் மையத்தில், சோவியத் நாட்டின் மக்கள் எண்ணிக்கை 25 கோடியாக இருந்தது. மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும்போது, சீனாவிற்கும் இந்தியாவிற்கும் அடுத்த, மூன்றும் இடத்தை சோவியத் ஒன்றியம் பெற்றுள்ளது.

1917 ஆம்ஆண்டில் ஏற்பட்ட, மகத்தான அக்டோபர் புரட்சிக்கு முன், இந்நாட்டின் மக்கட் தொகை எவ்வளவு? உலகத்தை உலுக்கிய அப்பெரும் புரட்சிக்கு முன்னர், இன்றைய சோவியத் ஒன்றியப் பரப்பில் பதினாறு கோடியே முப்பது இலட்சம் மக்கள் வாழ்ந்தார்கள்.

இரஷ்ஷிய முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் கட்டவிழ்த்துவிட்ட உள்நாட்டுப் போர், பதினான்கு வெளி நாடுகளின் படையெடுப்பு, பொருளாதாரக் கதவடைப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட பஞ்சம், பட்டினி, நோய், நொடிகள், மக்கட் தொகையைக் குறைத்தன. மீண்டும் 1941 - 45 இல் நடைபெற்ற தேசபக்திப் போர், இரண்டு கோடி சோவியத் மக்களின் உயிர்களைக் கொள்ளை கொண்டது. இத்தனை இழப்புகளையும் மிஞ்சி, சென்ற ஐம்பது ஆண்டுகளில், சோவியத் மக்களின் எண்ணிக்கை நூற்றுக்கு ஐம்பது விழுக்காட்டில் உயர்ந்துள்ளது. சோவியத் மக்கட் பெருக்கம் இயற்கையாகவே, உயர் நிலையில் உள்ளது. எவ்வளவு உயர் நிலையில்? ஆண்டுக்கு ஆண்டு, ஆயிரத்திற்கு 9.3 அளவில், மக்கட் பெருக்கம் தொடர்கிறது. தொடர்ந்து வளர்ந்து வரும் மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதில், சோவியத் அரசும் சோவியத் சமுதாயமும் வெற்றி பெற்றுள்ளன. அது மட்டுமா? மக்கட் பெருக்கத்தை ஊக்குவிப்பதிலும் நாட்டங் கொண்டுள்ளன.

வளர்ந்த, வளர்முக நாடுகள் பலவற்றில், மக்கட் பெருக்கம், பெருஞ் சிக்கலாக, பொல்லாத, மிரட்டும் கனவாக உள்ளது. ஆனால், சோவியத் ஒன்றியத்தில் மக்கட் பெருக்கம், அத்தகைய சிக்கலை உண்டாக்கவில்லை. மாறாக, மக்கள் பெருகுவதை, சோவியத் சமுதாயம் வரவேற்கிறது. நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு பெரிதானாலும் சமதர்ம முறை, எல்லோர்க்கும் வாழ்வளிக்கும். மனிதனை மனிதனும் பிரிவுகளைப் பிரிவுகளும் சுரண்டும் பழைய முறையைவிட, எல்லோருடைய எல்லா நலன்களையும் சமதர்ம அமைப்பு சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கும் என்பது தெளிவாகிறது.

சோவியத் ஒன்றியத்தின் மகத்தான சாதனைகள் பலவாகும். சோவியத் மக்களிடையே, கல்வியின்பால், மேலும் மேலும் கற்பதன்பால், ஏற்பட்டிருக்கும் நாடு தழுவிய ஆர்வம், இச் சாதனைகளில் சிறந்ததாகும். சோவியத் ஒன்றியத்தில் எங்கு சென்றாலும் இத்துடிப்பைக் காணலாம்.

எவ்வித பாரபட்சமும் காட்டாமல், எல்லோர்க்கும் கல்வி வாய்ப்புகள் வெள்ளமெனப் பெருகச் செய்துள்ளது, சோவியத் ஆட்சி. இந்தக் குடும்பத்தில் பிறந்து விட்டோம், இந்தப் பட்டிக்காட்டில் பிறந்து விட்டோமென்பது போன்ற, பிறப்பு விபத்துகள், எவருக்கும் தடைகளாக நிற்கவில்லை. அந்த மாபெரும் நாட்டில் வாழும் எல்லா தேசிய இனங்களுக்கும் கல்வி வெள்ளம் சமமாகப் பாய்கிறது. ஆணும் பெண்ணும் ஒன்றாக இருந்து படிக்கும் முறை, சோவியத் கல்வியின் உறுதியான அடிப்படையாகும். இதனால், கல்வியில், ஆண் பெண் சமத்துவம் என்பது, சட்டத்தில் இடம் பெற்றிருப்பதைப் போல், வாழ்க்கையிலும் செயல்படுகிறது. 'தாய்மொழி வழியாகக் கல்வி' என்பது சோவியத் நாட்டின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக இருக்கிறது. சோவியத் ஒன்றியத்தில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் இவ்வுரிமையைப் பயன்படுத்துகின்றன.

எல்லோர்க்கும் கல்வி என்பது, வெறும் முழக்கமல்ல; இன்றைய சோவியத் சமுதாயம் பெற்றுள்ள ஒளிவீசும் சிறப்பாகும். பல, பிற நாடுகளில், 'எல்லோர்க்கும் கல்வி' என்பதற்குக் கொண்டுள்ள பொருளைக் காட்டிலும் விரிந்த பொருளில் சோவியத் நாட்டில், இது செயல் படுகிறது.

ஐந்து முதல் பத்து வயது வரை, ஆறு முதல் பதினான்கு வயது வரை, என்னும் குறிப்பிட்ட வயதுக்குள் அடங்கியவர்களை மட்டுமே கணக்கில் கொண்டு, 'எல்லோர்க்கும் கல்வி' என்று பல நாடுகள் திட்டமிடுகின்றன. அப்பிரிவுகளுக்கு அப்பாற்பட்டவர்களை ஒதுக்கி விட்டே பேசுவது, அந்நாடுகளின் பழக்கம். சோவியத் நாட்டிலோ, 'எல்லோர்க்கும்' என்னும் சொல்லில், சிசு, குழந்தை,

இளைஞன், வாலிபன், முதிர்ந்தவர் ஆகிய அனைவரும் அடங்குகின்றார்கள். ஆண்களும் பெண்களும் அச்சொல்லால் குறிக்கப்படுகிறார்கள்.

மாமேதை லெனினுடைய தலைமையில் வெற்றி பெற்ற, 1917 ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சி, பொருளியல் - அரசியல் துறைகளில் மட்டுமா, பழைய முறையினை அறுத்து விட்டது? அதற்கு மேலும் சாதித்தது. சமுதாய — கலாசாரத் துறைகளிலும் பழமையிலிருந்து முழுமையாக விடுவித்தது.

அரசியல் துறையில், ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை ஒழித்துக் கட்டியது; பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்தது. பொருளியல் துறையில் மனிதனை மனிதன் சுரண்டும், பழைய, கொடிய முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. உற்பத்தி, வாணிக, சாதனங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கும் புதிய பொருளியல் முறையை வெற்றிபெறச் செய்தது. சோவியத் சமுதாயம் முடுக்கிவிட்ட, சமுதாய-கலாசாரப் புரட்சியும் இத்தகைய நிலையான, தலைகீழான மாற்றத்தை உண்டாக்கி உள்ளது. ஜார் ஆட்சிக் காலத்தில் வெறும் எழுத்தறிவைப் பற்றிக்கூட கனவு காண முடியாதிருந்த கோடிக்கணக்கான ஆண்களும் பெண்களும், பையன்களும் சிறுமிகளும், தங்கள் வீடு தேடி வந்து, கல்வி வாய்ப்புகள் கதவைத் தட்டுவதை முதன் முறையாகக் கண்டார்கள்.

பொதுக் கல்வித்துறையில், சோவியத் நாட்டின் சாதனை, அளவிலும் தரத்திலும் உயர்ந்தது; முன்னறியாத அளவு உயர்ந்தது.

பதினைந்து வயதுக்குட்பட்ட எல்லாப் பையன்களையும் சிறுமிகளையும் பள்ளிக்குக் கொண்டு வருவதில் சோவியத் ஒன்றியம் வெற்றி பெற்றுள்ளது. பத்தாம் வகுப்பு முடிய எல்லோர்க்கும் கட்டாயக் கல்வி என்னும் கொள்கையைத் திட்டமாக்கி, நிறைவேற்றுவதில், விரைந்து முன்னேறி வருகிறது. உலகத்தின் முதல் சமதர்ம நாடு, சோவியத் நாடாகும். எல்லார்க்கும் எல்லா நிலைக் கல்வியையும் இலவசமாக்கிய முதல்நாடு, சோவியத் ஒன்றியமே.

மக்களிடையே மறைந்துள்ள சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி, நவீன விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பங்களிலும் பயிற்சி கொடுப்பதில், சோவியத் கல்வி முறை வெற்றி பெற்று விட்டது. எந்த அளவு? மானிட வரலாற்றில், முதன் முதலாக, வான வெளியில் பயணஞ் செய்து வந்தவர், புதிய சோவியத் குடிமகன் என்னும் அளவிற்கு வெற்றி கிட்டிற்று.

இது மனித வரலாற்றில் மகத்தான நிகழ்ச்சி. வான வெளி ஆய்வில், சோவியத் ஒன்றியமே முன்னோடி. இது, உலக நாடுகளின் கவனத்தை, சோவியத் கல்வி முறையின் மேல் திருப்பிற்று.

இந்திய அரசின், கல்வி அமைச்சகம், 1961 ஆம் ஆண்டில், மூன்று கல்வியாளர்கள் அடங்கிய இந்திய தூதுக்குழுவை, சோவியத் நாட்டிற்கு அனுப்பிற்று. அக்குழு அந்நாட்டில், நான்கு வாரங்கள் பயணஞ் செய்தது; பல நிலைக் கல்விக்கூடங்களைக் கண்டது; சோவியத் கல்வி முறை பற்றித் தெரிந்துகொண்டு வந்தது; நீண்ட, விவரமான. அறிக்கையொன்றை இந்திய அரசிடம் கொடுத்தது. சோவியத் பொது மக்களிடையே, கல்வித் தாகம் என்னும் உந்தாற்றலை வெற்றிகரமாக உருவாக்கியிருப்பதைக் கோடிட்டுக் காட்டிற்று.

''கற்றுக் கொள்ள வேண்டுமென்னும் உந்துதலை எங்கெங்கும் கண்டோம். இதனால், இளையோரும் முதியோரும் கல்விக்கூடங்களை மொய்த்திருப்பதையும் கண்டோம். இது, சோவியத் ஒன்றியம், கல்வி, கலைத் துறைகளில் ஆற்றியுள்ள மகத்தான சாதனைகளை மிகைப்படுத்திக் கூறுவதாகாது.'' இவ்வாறு, இந்தியக் கல்வியாளர் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டிற்று.

# பொதுக் குறிப்புகள்

குழந்தை, இளைஞன், முதியோர் ஆகியோரிடம் மறைந்துள்ள ஆற்றல்கள், திறமைகள், மனிதப் பண்பு ஆகியவற்றை வளர்க்கும் வழி, கல்வி என்பதாகும். கல்வி தனி மனிதனுடைய முழுமையான ஆளுமையை வளர்ப்பதற்குக் கருவியாக இருப்பதைப்போல், இவ்வளர்ச்சியையும் சமுதாயத்தின் தேவைகளையும் இணைக்கும் கருவியாகவும் உள்ளது. சமுதாயத்தின் தேவைகளையும் தனி மனிதர்களின் வளர்ச்சிகளையும் பொருத்தி வைப்பதில் வெற்றி பெறும் அளவிற்கே, ஒரு கல்வி முறை, பயனுள்ள கல்வி முறையாக விளங்கும். சோவியத் கல்வி முறை, இந்தக் 'காலத்தின் சோதனை'யில் வெற்றி பெற்றுள்ளது.

கல்வியின் மதிப்பையும் பயனையும் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் அறிஞர்கள் உணர்ந்து வந்துள்ளார்கள். ஆனால், கெட்ட வாய்ப்பாக, பொது மக்கள், குறிப்பாக, பாடுபடும் பாட்டாளிகளும் குடியானவர்களும் கல்வியின் முக்கியத்துவத்தை உணரவில்லை. அநேக நாடுகளில், நாடு தழுவிய கல்லாமையும் அறியாமையும் தாண்டவமாடின. அவ்வக்கால அமைப்புகளின் நலனுக்கும் பிரபுத்துவ முதலாளித்துவ தன்னலத்திற்கும் கல்லாமை உதவியாக இருந்தது. பல நூற்றாண்டுகளாக, பல நாடுகளில், எல்லா அரசுகளுமே, பொது மக்களுக்குக் கல்வி தேவை என்பதை பொருட்படுத்தவில்லை. இரஷ்யாவை முன்னர் ஆண்ட ஜார் ஆட்சி, இதற்கு விதிவிலக்கு அல்ல.

ஜாரின் பேரரசு, எல்லா வித வறுமைகளுக்கும் உறைவிடமான பெரும் நாடாக இருந்தது. வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களுக்குப் பஞ்சம்; கல்வி, கலையுணர்விற்கும் பஞ்சம்.

1897 ஆம் ஆண்டின் இரஷ்ஷியக் குடிக்கணக்கின் படி, ஒன்பது வயதிற்கு மேற்பட்டவர்களில், நூற்றுக்கு 28.4 பேர்களுக்கே, எழுதப் படிக்கத் தெரியும். இரஷ்ஷியப் பேரரசின் கோடியில் வாழ்ந்த, இரஷ்ஷியரல்லாதாரின் நிலை, இதைவிட மோசமாக இருந்தது. இரஷ்ஷியரல்லாதார், அநேகமாக, எல்லோருமே தற்குறிகள். தாஜிக் மக்களில், நூற்றுக்கு 0.5 பேரும், கிர்கிஸ் மக்களில், நூற்றுக்கு 0.6 பேரும், துருக்குமேனியர்களில் நூற்றுக்கு 0.7 பேரும், உஸ்பெக்கியர்களில் 1.6 பேர்களும், கஸக் மக்களில் நூற்றுக்கு இருவரும் மட்டுமே எழுத்தறிவு பெற்றிருந்தார்கள். இக்கோர அவலத்தை, மேற்படி குடிக் கணக்கு எடுத்துக் காட்டிற்று. நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் ஒன்றிணைந்த பொதுத் தொடக்கப் பள்ளிகள் இல்லாமை, இத்தகைய இருண்ட சூழ்நிலைக்குக் காரணமாக இருந்தது. இரஷ்ஷியரல்லாத தேசிய இனங்களை, இரஷ்ஷியர்களாக மாற்றும் கொள்கையை, ஜாராட்சி பின்பற்றியது. இதனால், இரஷ்ஷியர்கள் பெற்ற அளவு குறைவான கல்வியையும் அறிவொளியையும்கூட பெற முடியாது இரஷ்ஷியரல்லாதார் அவதிப்பட்டார்கள்.

ஆண், பெண் இருபாலாருக்குமிடையே இருந்த வேறுபாடு மேலும் மோசமாக இருந்தது. ஆண்களுக்கு எட்டிய அளவு எழுத்தறிவுத் துளிகள் கூட பெண்களுக்கு எட்டவில்லை. சோவியத் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு, வாழ்நாள் முழுவதும், கல்லாமையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த ஆண்கள் விழுக்காட்டை விட, பெண்கள் விழுக்காடு அதிகமாக இருந்தது.

தொழிலாளிகள், குடியானவர்கள், கைவினைஞர்கள், பெட்டிக் கடைக்காரர்கள், ஆகியோரின் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்படவில்லை. அவர்கள் தொடக்கப் பள்ளிகளில் படிக்க முடிந்தாலே பெரிய காரியம். அப்பள்ளிகள், பண்ணைப் பணிகளுக்கும் சிறு கைத்தொழில்களுக்கும் தேவையான பயிற்சிகளைக் கொடுத்தன.

பள்ளிச் சம்பளமோ அதிகம்; வறுமையோ வாட்டிற்று; சிறுவர்களுக்குக் குறைவான கூலி கொடுத்து,

வேலை வாங்கிச் சுரண்டும் முறை பரவலாக இருந்தது. இத்தகைய சூழ்நிலையால், பள்ளிக்குச் செல்லத் தொடங்கிய ஏழைப் பிள்ளைகளில் எண்ணற்றோர், பாதியில் படிப்பை விட்டு விட்டார்கள்; பண்ணைகளுக்கும் ஆலைகளுக்கும் கூலிகளாகச் சென்று விட்டார்கள்.

மக்களில் பெரும்பாலோருக்கு எழுத்தறிவு கூட இல்லாத கேவலத்தைப் பற்றி அப்போதைய ஆட்சி கவலைப் படவே இல்லை. வறுமையும் வாட்டமும் தவிர்க்க முடியாதவை என்று ஜார் ஆட்சி ஏற்றுக்கொண்டது போலவே, மக்கள் கல்லாமையும் தவிர்க்க முடியாத ஒன்று என்று கருதிற்று.

1866ஆம் ஆண்டில் ஜாரின் அதிகாரிகளின் மதிப்பீடு என்ன தெரியுமா? இரஷ்ஷிய ஆண்களிடையே கல்லாமையை ஒழிக்க 180 ஆண்டுகள் பிடிக்கும். இரஷ்ஷியப் பெண்களிடையே 300 ஆண்டுகளுக்குப் பிறகே, கல்லாமையைப் போக்க முடியும். இரஷ்ஷியாவின் விளிம்புகளில் வாழும் பிற தேசிய இனங்கள், முழு எழுத்தறிவு பெற ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும். இவை திகைப்பையோ அதிர்ச்சியையோ உண்டாக்கவில்லை. சுரண்டல் முறைச் சமுதாயத்திலே — கல்வியை அடிப்படை உரிமைகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளாத சமுதாயத்திலே— வேறெதை எதிர்பார்க்கக் கூடும்!

பட்டாளத்தில் சேர்க்கப்பட்ட எல்லாக் குடியானவர்களும் தற்குறிகள் என்று கேள்விப்பட்ட ஜார் ஒருவன், 'கடவுளைப் போற்றுதும்' என்று முழங்கினானாம். அரசர்கள் போக்கு இப்படி இருந்தது.

ஜாரின் மிகப் பெரிய அதிகாரியின் காட்டுக் கால போக்கைக் கவனிப்போம். அவ்வதிகாரி, ஓரென்பர்க், இராணுவ ஆளுநருக்கு எழுதிய கடிதமொன்று பாதுகாக்கப் பட்டிருக்கிறது. அக்கால ஆட்சியாளர்களின் சிந்தனைக்குச் சுவையான சான்றல்லவா?

''கிர்கிஸ் மக்களுடைய நிலையை உயர்த்த வேண்டுமென்னும் பரோபகார எண்ணம் என்னை ஆட்டி வைக்க

வில்லை. அவர்களுக்கு அறிவொளியைக் கொடுத்து, ஐரோப்பிய இனங்களுக்குச் சமமாக வளர்க்க வேண்டுமென்பது என் நோக்கமல்ல. கிர்கிஸ் மக்கள், கால காலத்திற்கும் இடையர்களாகவும் நாடோடிகளாகவும் இருக்க வேண்டும், நிலமுடைய விவசாயிகளாக மாறக் கூடாது, என்பதே என் ஆழ்ந்த விருப்பம். அவர்கள், விஞ்ஞான அறிவும் ஏன் கைத்தொழில் அறிவும் பெறுதிருப்பதையே நான் விரும்புகிறேன்.''

மிகப் பெரிய அதிகாரியின் காட்டுக் கால நினைப்பு எவ்வளவு வெறுக்கத்தக்கது! சோவியத் ஆட்சி ஏற்படும் வரை, இத்தகைய போக்கே ஆட்சி செய்து வந்தது.

பரந்த கல்லாமை, அறியாமைக் கருமேகங்களிடையே, சில ஒளிக் கீற்றுகளைக் காண முடிந்தது.

1908 ஆம் ஆண்டில், பள்ளிக்குப் போன பிள்ளைகளைப் பற்றிய தகவல்களை அலசிப் பார்த்த லெனின், ''மொத்த மக்களில், பள்ளி வயதுடையவர்கள், நூற்றுக்கு இருபத்திரெண்டு விழுக்காட்டில் உள்ளார்கள். பள்ளிக்குச் செல்வோரோ, நூற்றுக்கு 4.7 ஆக உள்ளார்கள். அதாவது, படிக்க வேண்டியவர்களில் ஐந்துக்கு ஒருவரே படிக்கிறார்; மற்ற நால்வருக்கு பொதுக் கல்வி கிட்டவில்லை'' என்று கோடிட்டுக் காட்டினார்.

பரவலான மக்கள் எழுத்தறியாமையைப் பற்றி, லெனினின் நுண்ணிய மனம் கொதிப்படைந்தது. தனக்கே உரிய, கன்னத்தில் அறைந்தார் போன்ற, நடையில், வேதனையோடு,

''பொது மக்களுடைய கல்வியையும் அறிவையும் ஞானத்தையும் இந்த அளவுக்கு பறித்துக்கொண்ட காட்டுமிராண்டி நாடு, வேறெதுவும் இல்லை—ஐரோப்பாவில் அத்தகைய நாடே இல்லை. இரஷ்ஷியாவே விதிவிலக்கு'' என்று லெனின் எழுதினார்.

கல்விக் கண் பெற்றுவிட்ட பொது மக்கள் அடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடுவார்கள் என்று அஞ்சிய ஜார் ஆட்சி, மக்களை அறியாமையில் ஆழ்த்தி வைத்திருந்தது. ஜார் ஆட்சியின் போது, ஆண்டுக்கு, ஆளுக்கு, 80 கோபெக்கு

களே—ரூபிளில் ஐந்தில் நான்கு பங்கே—அவ்வளவு சொற்ப மாகவே—கல்விக்குச் செலவிடப்பட்டது.

லெனினுடைய சிந்தனை இதற்கு நேர்மாருக இருந்தது. சோவியத் ஒன்றியத்தில், சமதர்மத்தை உருவாக்கும் பெருந் திட்டத்தின் முக்கிய கூறுக, கலாசாரப் புரட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று, லெனின் கருதினர்.

இதோ லெனினின் கூற்று!

''மகத்தான புரட்சி நடக்க வேண்டும். மக்கள் அனைவருமே, கலாசார வளர்ச்சிப் பருவத்தைக் கடக்க வேண்டும்.''

பொது மக்களுடைய கலாசார நிலையை உயர்த்தும் முயற்சியும், நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் பணியும் இணைந்தவை என்பது லெனினின் முடிவு. பொது மக்கள் எழுத்தறிவு பெறுதல், நாட்டின் பொருளியல் வளர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாத திட்டமாகும் என்பது இவருடைய கருத்து.

''பொது மக்களிடம் உள்ள கல்லாமையை வேரோடு கெல்லி எறியாமல், அரசியல் சிக்கல்களையோ பொருளியல் சிக்கல்களையோ தீர்த்து வைக்க முடியாது'' என்று லெனின் அறிவுறுத்தினர். சோவியத் மக்களுக்குப் பகையானவற்றுள், எழுத்தறியாமை, மிக முக்கியமான ஒன்று என்று லெனின் குறிப்பிட்டார்.

பொது மக்களுக்கு உடனடியாகத் தேவையானவற்றை சட்ட மூலமாக்கும், ஒவ்வொரு படித்தவரும் பல படிக்காதவர்களுக்கு எழுத்தறிவு ஊட்டும்படி கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பது முக்கியம் என்று அக்டோபர் புரட்சியின் தலைவரான மாமேதை லெனின் வலியுறுத்தினர். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை அணி திரட்டி, கல்லாமையின் மேல் போர் தொடுக்கும் சாதாரண — ஆனல் அவசரமான — செயலில் முனைய வேண்டும். இச் சிறு விஷயத்திலேயே, புரட்சியின் முக்கிய வேலை அடங்கியுள்ளது என்பது லெனினுடைய முடிவு.

கல்லாமை நிறைந்த நாட்டில் பொது உடைமைச் சமுதாயத்தை அமைக்க முடியாது என்பதை லெனின் தெளிவாக எடுத்துரைத்தார். பொது மக்கள், ஒவ்வொன்றையும் தெரிந்துகொண்டு, ஒவ்வொன்றையும் மதிப்பிட்டு, முடிவுகளை அவர்களே அறிவு பூர்வமாக எடுக்கும்போதே, அரசு வலிமையுடையதாக இருக்கும் என்பது லெனினுடைய கருத்து.

. எனவே, இளம் சோவியத் ஆட்சி, முதல் முதல் ஆற்றிய செயல்களில் ஒன்று கல்வி நிலையங்களின் கதவுகளை எல்லா மக்களுக்கும் திறந்து விட்டதாகும். புரட்சிக்குப் பின் உடனடியாக பழைய கல்வி அமைச்சகம் கலைக்கப்பட்டது. லெனின் ஆணைப்படி, மக்கள் அறியாமை அமைச்சகத்திற்குப் பதில், பொதுக் கல்வி ஆணையகம் அமைக்கப்பட்டது. இது வெறும் பெயர் மாற்றமல்ல. நோக்கிலும் கொள்கையிலும் மாற்றத்தை இது காட்டிற்று.

ஜார் ஆட்சிக்கால கல்வி அமைச்சகம், தொழிலாளி, குடியானவர் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கல்வியை கொடுப்பதைக் காட்டிலும், சுரண்டும் மக்களுக்குத் துணையாகும் வகையில் இளைஞர்களுக்கு பயிற்சி கொடுப்பதிலேயே நாட்டஞ் செலுத்திற்று. சுரண்டும் வர்க்கங்களுக்கு நல்ல ஊழியர்களாக இருந்து, அவர்களுடைய அமைதிக்கும் ஓய்வுக்கும் கேடு விளைவிக்காது, இலாபம் தேடித் தருவதற்காக, அக்கால ஏழைக் குழந்தைகள் பயிற்சி பெற்றன.

சோவியத் கல்வியின் நோக்கம் இதற்கு நேர் மாறானது. சோவியத் குடி மக்கள் எல்லோருக்கும்—சிறுவருக்கும் முதியவருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் தொழிலாளிக்கும் குடியானவருக்கும்—அறிவைப் பெறவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் இக்கால உற்பத்தி முறைகளில் பயிற்சி பெறவும் அதிக பட்ச வாய்ப்புகளைக் கொடுப்பதே, சோவியத் கல்வியின் நோக்கம்.

இளைஞர்களுடைய கல்வியின்பால் தனி ஆர்வமுடைய லெனின், சோவியத் பொதுக் கல்வி முறையை உருவாக்குவதில், நேரடியாக ஈடுபட்டார்.

''வாழ்க்கைக்குப் புறம்பான, அரசியலுக்கு வெளியான, கல்விக்கூடம்' என்பது, பொய், மாயம்'' என்று லெனின் தெளிவாகக் கூறினார்.

புதிய சமுதாயத்தில் பொது மக்கள் பெறும் கல்வியையும் வளர்ப்பையும் ஒட்டியே அவர்களுடைய மனப்பாங்கும் போக்குகளும் அமையும். இதைக் காட்டிய லெனின், தொழில் பற்றிய கம்யூனிஸ்டுப் போக்கினை இளைஞர்களிடையே வளர்ப்பது தேவை என்றுரைத்தார்.

பழைய கல்வி முறையில், பள்ளிக்கூடங்கள் ஏட்டறிவைக் கொடுத்தன. அது, செயலோடு தொடர்பற்று இருந்தது. லெனின் இக்குறையைச் சுட்டிக் காட்டினார். பணிப் பயிற்சியைக் கொடாத—பள்ளி ஏன் பல்கலைக் கழகமும்—மதிப்பு இழந்தது என்று லெனின் கூறினார்.

''வாழ்க்கைப் பொங்கலோடு தொடர்பு இல்லாத, வகுப்பு அறைகளோடு முடங்கி விடும், பாடம், பயிற்சி, கல்வி ஆகியவற்றில் நம்பிக்கை கொள்ள முடியாது'' என்பது லெனினுடைய கூற்றாகும்.

இதனால்தான், சோவியத் கல்வி நிலையங்கள், வாழ்க்கைச் சிக்கல்களை சமாளிக்க மாணாக்கர்களை ஆயத்தஞ் செய்வதோடு, செயல் திறன்களையும் கற்றுக் கொடுக்கின்றன; சமுதாயத்தின் முழு நலனுக்காகவும் பாடுபடும் ஆற்றலை மாணாக்கரிடையே வளர்க்கின்றன.

எதிர்கால நுட்பத் தொழில் வல்லாரை ஆயத்தஞ் செய்வதோடு புதிய சோஷலிச சமுதாயத்தின் எதிர்கால மனிதனை உருவாக்குவதும் சோவியத் கல்வி நிலையங்களின் நோக்கமாகும். எனவே, காலத்திற்கு முந்தி, தனிப் பயிற்சி கொடுக்கக் கூடாதென்று லெனின் எச்சரித்தார். எல்லாத் தொழிற் பள்ளிகளிலும் தொழில் நுட்பம், அரசியல் பாடங்களுக்கு நேரம் ஒதுக்குவதோடு பொதுப் பாடங்களுக்கும் முன்பிருந்ததை விட அதிக நேரம் ஒதுக்கும்படி லெனின் ஆலோசனை கூறினார்.

பூர்ஷுவா வர்க்கத்தின் கலாசாரச் செல்வத்தை முழுமையாக ஒதுக்கிவிட வேண்டுமா? வேண்டாமென்

பதே, சோவியத் கல்வி முறையின் பதில் ஆகும். லெனி னுடைய திசைகாட்டலைப் பார்ப்போம். லெனின், "கலாச்சாரத் துறையில் மக்கள் இனம் உருவாக்கி யுள்ளதில் சிறந்தவைகளை கற்றுக் கொள்வதில் ஈடுபடுவது, இளைஞர்களுக்கு முக்கியமாகும்" என்றார்.

1917ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சி, பொது மக்கள் கல்வி யுகத்தைத் தொடங்கி வைத்தது. எல்லோர்க் கும் கல்வி உரிமை உத்தரவாதம் செய்யப்பட்டது. அதோடு பல்வேறு வயதினருக்கும் பயன்படக்கூடிய வெவ்வேறு வகை கல்வி வாய்ப்புகள் ஏற்பட்டன. மக்கட் கல்வி சாதிக்கக்கூடியவை பற்றி, மகத்தான கண்ணோட்டத்தை, இளம் சோவியத் ஆட்சி கொண்டிருந்தது. நோன்பும் விறுவிறுப்பும், விழிப்பும் சுறுசுறுப்பும் முயற்சியும் ஆர்வ மும் வெள்ளமென பெருகச் செய்து, மக்கட் கல்வியி லுள்ள சிக்கல்களை சமாளித்தது.

மனித வரலாற்றில், முதன் முதலாக, மிகக் குறுகிய காலத்தில், பின்தங்கிய, முந்தைய, ஜாரின் இரஷ்ஷியா, மிக வளர்ந்த நாடாக மாற்றப்பட்டது. மெய்யாகவே, கல்வி, மக்களுடைமையாகியது; எல்லோரும் எழுத்தறிவு பெற்றதோடு, விரைந்து, விஞ்ஞான, தொழில் நுட்பங் களில் முன்னேறி விட்டார்கள். புதிய நாகரிகமாகிய சமதர்ம சமுதாயம் பிறந்த, அறுபது ஆண்டுகளுக்குள் வாழ்நாள் முழுதும் கல்வி என்னும் கனவு, நனவாகி விட்டது.

# பறவைப் பார்வை

பொதுக் கல்வியின் நிலை, சமுதாயத்தின் பொதுக் கலாசார நிலையை முடிவு செய்கிறது. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை, தரம், சாதாரண மக்களுக்கு அவை எட்டும் தன்மை, மாணுக்கருடைய சமுதாய நிலை, பாட திட்டத்தின் குறிக்கோள், உள்ளடக்கம் ஆகியவை பொதுக் கல்வியின் நிலையை எடுத்துக்காட்டும்.

எல்லாப் பிள்ளைகளையும் சேர்ப்பதற்குப் போதுமான எண்ணிக்கையில், ஜார் ஆண்ட இரஷ்ஷியாவில், கல்விக் கூடங்கள் இருந்தனவா? இல்லை. அன்றிருந்த பள்ளிகள் போதா. ஏதாவது ஒருவகைக் கல்வி, அன்றைய இரஷ்ஷியாவில் வாழ்ந்த எல்லா தேசிய இனங்களுக்கும் எட்டிற்று? இல்லை யென்பதே பதில். ஜார் காலத்து மாணுக்கர்களில் மிகப் பெரும்பாலானவர்கள், பூர்ஷுவா குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; இரஷ்ஷிய சமுதாயத்தின் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களைக் காண்பது அருமை.

நாட்டிலுள்ள அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பதில், ஜார் ஆண்ட இரஷ்ஷியாவிற்கு நம்பிக்கை இல்லை. எல்லா ஊர்களிலும் பொதுப் பள்ளிகளைத் திறக்கவும் அது நடவடிக்கை எடுக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான சிற்றூர்கள் தொடக்கப் பள்ளியும் இல்லாமல் அவதிப்பட்டன. அப்போதிருந்த பள்ளிகளில் அநேகம், தனியாரால் நடத்தப்பட்டன. அவை வாங்கிய சம்பளமோ, ஏழைகள் கட்டமுடியாத அளவு உயர்ந்தவை; எனவே, அவை ஏழைப் பிள்ளைகளுக்கு எட்டவில்லை.

மக்களுடைய, நெடுங்கால, கல்விப் பிற்போக்கு நிலையைப் புறங்காண்பதற்கான சூழ்நிலையை 1917 ஆம் ஆண்டின், சோஷலிசப் புரட்சியின் வெற்றி உருவாக்கியது.

பாடுபடும் பாட்டாளிகளையும் இளைய தலைமுறையினர் அனைவரையும் கல்விபெறச் செய்யும் நோக்கோடு, மிகக் குறுகிய காலத்தில், கடலென விரிந்த பணி செய்து முடிக் கப்பட்டது.

அக்டோபர் புரட்சி நடந்த சூட்டிலேயே, கல்லாமை யையும் கலையின்மையையும் எதிர்த்துக் கடும் போர் நடத் துமாறு லெனின் கட்டளையிட்டார். சமதர்மத்தின் பொரு ளியல், கலையியல், அடிப்படைகளை, பதக்கத்தின் இரு பக் கங்களாகவே லெனின் கருதினார்.

சமதர்ம நாடு ஒன்று தோன்றுவதை, அப்போதே, உலகம் முதன் முதல் கண்டது. புதிய சமதர்ம சமுதா யத்தைக் கட்டியமைக்கும் வரலாற்றுப் பொறுப்பு, இளைய சோவியத் ஆட்சியின் தோள்களில் வீழ்ந்தது. உறுப்பினர் கள், பொது அறிவும் தொழில் நுட்ப அறிவும் பெறுவிட் டால், புதிய சமதர்ம சமுதாயத்தை உருவாக்க இயலாது.

புதிய சமுதாயத்தின் பணிகள் எவ்வளவு சிக்கலா கின்றனவோ, அவ்வளவிற்கு, உழைக்கும் மக்களின் புரிந்து கொள்ளும் ஆற்றலும் சுய சிந்தனையும் வளர வேண்டும். இது கல்வி, மேலும் கல்வி, எல்லார்க்கும் முக்கியமானது, மதிப்பானது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

பின்வரும் அதிகாரமொன்றில், நாம் விரிவாகக் காணப் போவதைப் போல், முதியோர் எழுத்தறிவைப் பரப்ப நாடு தழுவிய பேரியக்கம் ஒன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதே நேரத்தில், எல்லா தேசிய இனப் பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்புகள் மும்முரமாகப் பெருக் கப்பட்டன. உள்நாட்டுப் போர் நடந்த ஆண்டுகள் கடின மான காலம். பொருளாதாரச் சீரமைப்பு, சமதர்மத் தொழில் மாற்றம், சிக்கனத்தின் இன்றியமையாமை ஆகிய வற்றிற்கு இடையிலும், கடைக் கோடிகளிலும் பள்ளிகள் திறக்கப்பட்டன. சிறுவர் சிறுமியர் அவற்றை மொய்த்துக் கொண்டனர். எல்லார்க்கும் தொடக்கக் கல்வி கொடுக்க வும் உயர் நிலைப் பள்ளிக் கல்வியை வளர்க்கவும் ஆன சூழ் நிலை இவ்விதம் உருவாக்கப்பட்டது.

1930 ஆம் ஆண்டில், கட்டாயத் தொடக்கக் கல்வி பற்றி சட்டமொன்று இயற்றப்பட்டது. இச் சட்டத் தின்படி, 1930 ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி யன்று எட்டு வயதடைந்த எல்லாப் பிள்ளைகளும் நான் காண்டு தொடக்கப் பள்ளிகளில் கட்டாயம் சேர வேண் டும். இக் குறிக்கோளை 1933 இல் எட்டி விட்டார்கள்.

நாட்டின் பொருளாதாரம் விரைந்து முன்னேறியதும் கல்விச் சீரமைப்பு பெருமளவு நடந்ததும் பல் வகையான பொதுக் கல்வி நிலையங்கள் வளரத் துணை நின்றன. நக ரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகியது. தொழில் நுட்பப் பள்ளிகள் நாடு முழுவதும் பின்னின. நாட்டின் பல்வேறு பகுதி களில், பல்கலைக் கழக கல்வி நிலையங்கள் தோன்றின. இப்பரந்த நாட்டில் வாழ்ந்த எல்லா தேசிய இனங்களுக் கும் கல்வி வாய்ப்புப் பெருக்கம் எட்டிற்று.

முப்பதுகளின் கடைசியில், எல்லா நகரங்களிலும் ஏழாண்டுக் கல்வி கட்டாயமானது. இக் கட்டாயக் கல்வியை நாட்டுப்புறங்களுக்கு விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. 1938-க்கும் 1942-க்கும் இடையில், நகரங் களில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரையிலும் கிராமப் புறங்களில் ஏழாவது வரையிலும் கல்வியைக் கட்டாய மாக்கத் திட்டமிட்டிருந்தார்கள். 1941இல், நாஜி ஜெர்மனி, துரோகத்தனமாக சோவியத் ஒன்றியத்தின் மேல் படையெடுத்து விட்டதால் இவை, திட்டமிட்டபடி நடக்கவில்லை. நாஜிப் படையெடுப்பு, சோவியத் கல்வி முறை மேல் வீழ்ந்த பெரிய இடியாகும்.

அந்த மாபெரும் தேச பக்திப் போர் நடந்த ஆண்டு களில், எல்லாத் துறைகளிலும் பெருமளவு நாசத்தை நாடு சந்தித்தது. நாஜிப் படைகளின் கைகளில் தற்காலிக மாகச் சிக்கிய பகுதிகளில், 1 கோடி 50 இலட்சம் மாணக் கர்களுக்கு இடங்கொடுத்த 82,000 பள்ளிகள் அழிக்கப் பட்டன. 334 உயர்மட்டக் கல்வி நிலையங்களும் நாசஞ் செய்யப்பட்டன. சாம்பலாக்கப்பட்ட, பொது நூலகங்

களை கணக்கற்றவை. எண்ணற்ற ஆசிரியர்கள் போராடி மடிந்தனர். போர்க் காலத்தில், தொழிற் சாலைகளை நடத்தும் பொருட்டு, பல நூறாயிரம் இளம் பையன்களும் பெண்களும் படிப்பை விட்டு விட்டார்கள். போருக்குப் பிந்திய ஆண்டுகளில், சோவியத் நாட்டவரின் பகீரதப் பிரயத்தனங்களால், அத்தனை கல்வி நிலையங்களும் மீண்டும் எழும்பின. கல்வி புத்துயிர் பெற்று, விரைந்து, மீண்டும் வளரத் தலைப்பட்டது.

நாடு முழுவதிலும் ஏழாண்டுக் கல்வியை கட்டாயமாக்கும் பணி 1950இல் தொடங்கிற்று; 1952இல் முடிந்தது. 1959இல் எட்டாம் வகுப்பு வரை படிப்பை கட்டாயமாக்கியது, அடுத்த பெரிய நடவடிக்கையாகும். 1961இன் இறுதிக்குள், இக் குறிக்கோளும் நிறைவேறி விட்டது. எல்லோரையும் பத்தாவது வகுப்பு வரை படிக்க வைக்கும் குறிக்கோளை நோக்கி, சோவியத் ஒன்றியம் பெருநடை போடுகிறது.

சோவியத் ஆட்சி, கல்வியின் பால் மகத்தான கவனத்தைத் தொடர்ந்து செலுத்தி வருகிறது. இப்போது, சோவியத் ஒன்றியத்தில், எட்டுக் கோடி மக்கள் பலவகையான கல்வி பெறுவதில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் நாலு கோடியே தொண்ணூறு இலட்சம் பேர்கள், பொதுக் கல்வி கற்பிக்கும் கல்வி நிலைய மாணவர்கள். இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுக் கல்விப் பள்ளிகள் உள்ளன.

அக்டோபர் புரட்சி வரை, தங்கள் மொழிகளுக்கு வரி வடிவம் பெறாதிருந்தவர்களுக்காக, எழுத்துகளை, பாட நூல்களை, அகராதிகளை, பிற நூல்களை உருவாக்க சோவியத் ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நாட்டின் வளர்ந்த பகுதியினர், குறிப்பாக, இரஷ்ஷிய மக்களும் இரஷ்ஷியத் தொழிலாளி வர்க்கமும், முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த மக்களுக்கும் இனங்களுக்கும் எல்லாவித உதவிகளையும் செய்தார்கள்.

கல்வித் துறையில், சோவியத் அரசின் சாதனைகளைச் சுருக்கிச் சொல்வதென்றால், பள்ளிகளில் படித்தவர்கள்

எண்ணிக்கை ஜார் காலத்தில் எண்பது இலட்சமாக இருந்தது மாறி, 1970-இல் நான்கு கோடியே தொண்ணூறு இலட்சமாக உயர்ந்துள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுவோம். பல்கலைக் கழகங்களிலும் அவற்றிற்குச் சமமான கல்வி நிலையங்களிலும் கற்போர் எண்ணிக்கை ஜாரின் ஆட்சியில் இலட்சத்து இருபத்து ஏழாயிரமாக இருந்தது; 1970இல் இவ்வெண்ணிக்கை, நாற்பத்தாறு இலட்சமாக உயர்ந்து விட்டது.

தொழிற் கல்வி, கைத் தொழிற் பயிற்சிகளுக்கான நிலையங்களும், சோவியத் நாட்டில், விரைவாக, நாலு பக்கங்களிலும் வளர்ந்தன. புரட்சிக்கு முந்திய இரஷ்யாவில், அரசின் சார்பில் தொழிலாளர் திறன்களை வளர்க்கும் பயிற்சி நிலையங்கள் இல்லை. ஆனால் 1970 இலோ, 16 இலட்சம் பேர்கள் தொழிற் திறன்களில் பயிற்சி பெற்று தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றனர்கள்.

ஒன்றியத்திலுள்ள குடியரசுகளின் கல்விச் சாதனைகள் சிலவற்றைக் கவனிப்போம். அவற்றின் சாதனைகளும் இதே மாதிரி பரவச மூட்டுவன.

புரட்சிக்கு முன்பு, கிர்கிஸியா பள்ளிகளில் சேர்ந்திருந்தவர்களின் எண்ணிக்கை ஏழாயிரமே. 1969 இல், அங்கே படித்துக் கொண்டிருந்தவர் எண்ணிக்கை, ஏழு இலட்சத்து இருபத்து மூன்று ஆயிரமாகும்.

தாஜிகிஸ்தானில் புரட்சிக்கு முன்பு நானூறு பேர்கள் மட்டுமே படித்தார்கள். 1969-இலோ, படிப்போர் எண்ணிக்கை ஆறு இலட்சத்து பதின்மூன்று ஆயிரமாக மிக உயர்ந்து விட்டது.

உஸ்பெக்கிஸ்தான் நிலை என்ன? புரட்சிக்கு முன், அப்பகுதியில் நூற்று அறுபது பள்ளிகளே இருந்தன. அவற்றில், மொத்தமாக, ஏழாயிரத்து முந்நூறு பேர்களே சேர்ந்திருந்தார்கள். நாட்டுப்புறங்களில் உயர்நிலைப் பள்ளியே இல்லை. பல்கலைக் கழகமோ எங்கும் இல்லை. இன்றோ, தாஷ்கண்டில் ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது.

மொத்தம், முப்பது உயர்மட்ட தொழில் கல்வி நிலையங்கள் உள்ளன. இவற்றில் பதின்மூன்று ஆசிரியப் பயிற்சி நிலையங்கள் ஆகும்.

உஸ்பெக்கிஸ்தானில், இரண்டாயிரத்து ஐந்நூறு கிண்டர்கார்டன் (பாலர்) பள்ளிகளும் ஆயிரத்துத் தொள்ளாயிரம் நான்காண்டு பள்ளிகளும் மூவாயிரம் எட்டாண்டு பள்ளிகளும் ஆயிரத்து ஐநூறு பொது உயர்நிலைப் பள்ளிகளும் எழுபத்து ஏழு சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகளும் நூறு தொழிற் பள்ளிகளும் நடக்கின்றன. இவற்றில் எல்லாமாக, தொண்ணூறு ஆயிரம் ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள். எல்லாவித கல்விப் பணியாளர்களையும் கணக்கெடுத்தால், அவர்கள் எண்ணிக்கை இலட்சத்து நாற்பத்தைந்தாயிரமாக உள்ளது. எல்லாக் கல்வி நிலையங்களிலுமாக பதினாறு இலட்சம் பேர்கள் சேர்ந்துள்ளார்கள்.

சோவியத் ஒன்றியத்தின் சில பகுதிகளில், புரட்சிக்கு முன்னரே, சரியாக வளர்க்கப்பட்ட, தொடக்கப்பள்ளித் தொடர்கள் இயங்கி வந்தன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். எஸ்தோனியா குடியரசில் 1913இல் தொண்ணூற்று இரண்டாயிரம் பேர்கள், தொடக்கப் பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எண்ணிக்கை இப்போது இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரமாகப் பெருகி விட்டது. லிதுவேனியாவில் படிப்போர் எண்ணிக்கை இலட்சத்துப் பதினெட்டாயிரத்தில் இருந்து, ஐந்து இலட்சம் அறுபத்து இரண்டு ஆயிரத்துக்கு உயர்ந்து விட்டது. சோவியத் ஆட்சிக் காலத்தில், கல்வியின் தரமும் பெருமளவு மாறிவிட்டது.

புரட்சிக்கு முன்னர், பாட்டாளிகளின் குழந்தைகள் அதிக பட்சம், தொடக்கக் கல்வியை மட்டுமே சிந்திக்க முடியும். சோவியத் ஆட்சியிலோ, உயர்நிலைப் பள்ளி, பல்கலைக் கழகப் படிப்பு ஆகியவற்றையும் எல்லோருக்கும் இலவசமாகத் திறந்து விட்டார்கள். இது சட்டப் புத்தகத்தில் மட்டும் காணும் உரிமையல்ல; அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சியாக உள்ளது.

சமுதாயத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் சோவியத் பெண்கள், ஆண்களோடு சரி நிகரான உரிமைகளைப் பெற்றுள்ளார்கள். சோவியத் நாட்டில், பெண்கள் அடைந்துள்ள அளவு விடுதலையை வேறு எந்த நாட்டுப் பெண்களும் பெறவில்லை. சம உரிமையைப் பறை சாற்றுவதோடு நிற்கவில்லை; இது, சட்டத்தில் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது. சமுதாயத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவம் இருப்பதற்கு அடிப்படையான கல்வி பெறுவதில் சம வாய்ப்பே வாழ்க்கையில் சமத்துவத்திற்கு உத்தரவாதம். சோவியத் சமுதாயம் இடைவிடாது பாடுபட்டதின் விளைவாக, உழைக்கும் ஆண்களும் பெண்களும் அநேகமாக ஒரே நிலைக் கல்வியைப் பெற்றவர்களாக உள்ளார்கள். சோவியத் ஒன்றியத்தில் நூற்றுக்கு 99.7 விழுக்காடு பெண்கள் எழுத்தறிவு பெற்றவர்கள். 1970-இல் வேலைகளில் அமர்ந்திருந்த பெண்களில், ஆயிரத்திற்கு அறுநூற்று ஐம்பத்தோர் பேர்கள் உயர் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெற்றவர்களாக இருந்தார்கள். புரட்சிக்கு முன்பு இரஷ்ஷிய மக்களில் நூற்றுக்கு 75 விழுக்காட்டுக்கு மேற்பட்டோர், மத்திய ஆசியாவில் நூற்றுக்கு 99 விழுக்காடு மக்கள் கல்வி வாசனையற்றிருந்தனர். பெண்களின் நிலைமை உண்மையிலேயே துயரம் நிறைந்தது.

சோவியத் நாட்டில் ஏற்பட்டுள்ள சமுதாய, கலையியல் மாற்றங்களைச் சரியாகக் காட்டுவது எது? கீழைப் பகுதிகளில் வாழும் பெண்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றமே, பசுமரத்தாணி போல் பதிய வைக்கும். இயந்திர மயமாக்கப்பட்ட வேளாண்மையிலும் தொழில்களிலும் அக்குடியரசுகளைச் சேர்ந்த லட்சோப லட்சக் கணக்கான பெண்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களில், அநேகர் முக்கியமான பகுதிகளுக்குப் பொறுப்பேற்றுள்ளனர். புரட்சிக்கு முன்போ, கஸாக், உஸ்பெக், பெண்களில் நூற்றுக்கு ஒருவருக்கே எழுதப் படிக்கத் தெரியாது. இன்றோ, எல்லா கஸாக், உஸ்பெக் மாதருக்கும் எழுதப் படிக்கத் தெரியும்; அவ்வளவுதானா? அதற்கு

மேலும் படித்திருக்கிறார்கள். மேற்பட்ட படிப்புப் பெற்றுள்ள கஸாக், உஸ்பெக் பெண்கள் ஏராளம்.

சோவியத் ஆட்சி இதோடு நிறைவு கொள்ளவில்லை. கூட்டுப் பண்ணைகளிலும் தொழிற் சாலைகளிலும் பணி புரியும் எல்லோரையும் முழுமையாகவே அறிவாளிகளாக ஆக்கும் பொருட்டு சோவியத் ஒன்றியம் எல்லாவற்றையும் செய்து வருகிறது. மக்கள் அனைவரும் தத்தம் அறிவு, ஆற்றல், திறன்களையும் உச்ச மட்டத்திற்கு வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவான ஒவ்வொன்றும் செய்யப்படுகிறது.

1913இல், இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் பேர்களே சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகள், அதற்கு மேற்பட்ட கல்வி நிலையங்கள், முதலியவற்றில் முழுமை யாகவோ அரை குறையாகவோ படித்தவர்கள். 1970இல் அத்தகையோரின் எண்ணிக்கை இரண்டு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சமாக உயர்ந்து விட்டது. சோவியத் நாட்டில் நிகழ்ந்த இத்தகைய கல்வி வளர்ச்சி யால் கிராமப்புற மக்களும் நன்மையடைந்தார்கள். நாட்டுப் புறங்களில் உழைத்துக் கொண்டிருக்கும் பாட்டாளி களில் பாதிக்கு மேற்பட்டவர்கள், உயர் கல்வியோ, உயர்நிலைப் பள்ளிக் கல்வியோ பெற்றவர்கள்.

''சோவியத் ஒன்றியத்திலுள்ளவர்களில், மூவருக்கு ஒருவர் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்; உலகத்தில் வெளியாகும் நூல்களில் மூன்றில் ஒன்று, சோவியத் நாட்டில் வெளியாகிறது; உலக மாணுக்கரில், நால்வரில் ஒரு வர் சோவியத் மாணுக்கர்; உலகில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களில் நால்வரில் ஒருவர், சோவியத் ஆய் வாளர்; உலகத்திலுள்ள மருத்துவர்களில் நால்வரில் ஒரு வர் சோவியத் மருத்துவர்.'' இக்கூற்று உண்மையான தகவல்களின் படப்பிடிப்பு. சோவியத் கல்வி முறை, குறிக்கோள் உடையது; தரமானது; மிகப் பரந்தது என் பதற்கு இவை சிறந்த சான்றுகளாகும்.

அறுபது ஆண்டுகள் என்னும் குறுகிய கால கட்டத்தில் இத்தகைய அற்புதம் எப்படி நிகழ்ந்தது? 'மக்களுக்

[illegible] அவர்களுடைய நலன்களுக்குமே எல்லாம்' என்னும் [illegible] கோட்பாட்டை உண்மையாகவே நடைமுறைப் [illegible] இது சாத்தியமாயிற்று. அக்டோபர் [illegible] அடுத்து. உடனே குடி மக்கள் அனைவரும் [illegible], [illegible], தேசிய, சொத்து வேறுபாடுகளைப் பொருட் [illegible]. [illegible] கல்வி உட்பட, எல்லாக் கல்வியையும் [illegible] சம வாய்ப்பு உடையவர்கள் என்று அறி [illegible]. இக் கோட்பாட்டை, விழிப்போடும் [illegible]டும் செயல்படுத்தி வருகிறார்கள்.

# எல்லோரும் எழுத்தறிவு பெற்ற நாடு

சோவியத் ஒன்றியம், கல்வித் துறையில் பெற்றுள்ள சாதனைகளை 1970 ஆம் ஆண்டின் குடிக்கணக்கு காட்டுகிறது. ஆண்கள் நூற்றுக்கு 99.8 விழுக்காட்டிலும் பெண்கள் நூற்றுக்கு 99.7 விழுக்காட்டிலும் எழுத்தறிவு பெற்று விட்டார்கள். சோவியத் நாடு, எல்லோரும் எழுத்தறிவு பெற்ற நாடாகியதோடு, பரவலான கல்வியுடைய நாடாகவும் காட்சியளிக்கிறது. இதில், உலகத்தின் பல நாடுகளைப் பின்னடையச் செய்து விட்டது.

ஒன்பது வயதுக்கு மேல் ஐம்பதுக்குள் இருந்தவர்களில் முக்கால் பகுதியினர் தற்குறிகளாகவும் பள்ளி வயதுப் பிள்ளைகளில் ஐந்தில் நான்கு பங்கினர் பள்ளிக்குச் செல்லாமலும் இருந்த இருண்ட நிலையிலிருந்து எல்லோரும் படித்தவர்களாகவும் பள்ளி வயதினர் அனைவரும் படிப்பவர்களாகவும் உள்ள நிலைக்கு விரைந்து செல்லுதல், எந்த நாட்டிற்குமே செயற்கரிய பெருஞ் செயலாகும். எண்ணற்ற தேசிய இனங்களையும் மக்கட் பெருக்கத்தையும் கொண்ட பெரிய சோவியத் நாட்டில், இப்பணி, பெரும்பலைப் பணியாகிறது. இத்தனை பெரிய, இவ்வளவு சிக்கல்களைக் கொண்ட காரியமொன்றை, சோவியத் நாட்டிற்கு, முன்பு, வேறெந்த நாடும் வெற்றிகரமாக நிறைவேற்றியதில்லை. வரி வடிவம் கூட இல்லாத மொழிகள் பலவற்றிற்கு உரிய பல தேசிய இனங்கள் குடியிருந்தது, சிக்கலை அதிகமாக்கிற்று. உள்நாட்டுப் போராலும் வெளிநாடுகளின் தாக்குதல்களாலும் ஏற்கனவே வறுமை வாய்ப்பட்டிருந்த குடியானவர்களும் தொழிலாளிகளும் சொல்ல முடியாத துன்பத்திற்கும் அவதிக்கும் ஆளானார்கள். பஞ்சமும் தொத்து நோய்களும் சேர்ந்து கொண்டு, நாட்டின் பரந்த பகுதிகளை அலைக்கழித்தன.

அக்டோபர் புரட்சியின் போது, எண்ணற்ற ஊர் களுக்குத் தொடக்கப் பள்ளியும் இல்லை. பாட நூல் களுக்குப் பஞ்சம்; காகிதம், பென்சில், பேனு போன்ற எழுது பொருள்களும் கிடைப்பது அரிது. பாட துணைக் கருவிகளுக்கும் பஞ்சம். எல்லாப் பிள்ளைகளுக்கும் சொல் லிக் கொடுப்பதற்குப் போதுமான ஆசிரியர்களும் இல்லை. இரஷ்ஷியர் அல்லாத பிற இனத்து ஆசிரியர்கள் கிடைப் பது மேலும் அருமை. பேச்சு மொழிகளாகவே இருந்த பல மொழிகளில் கல்விக் கருவிகள் கிடைக்கவில்லை. எனவே, அவ்வினங்களின் கல்வி வளர்ச்சி எதிர் நீச்சலாக இருந்தது.

இத்தனைத் தடைகளையும் தாண்டி, இளம் சோவி யத் அரசு, முதியோர் கல்லாமைக்கு எதிராக, நாடு தழு விய இயக்கமொன்றை உறுதியாகத் தொடங்கிற்று. கிடைத்த ஒவ்வொரு சாதனத்தையும் இம் முயற்சியில் ஈடுபடுத்தியது. சோவியத் நாட்டில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் கல்வியுரிமை உண்டு என்று அறிவித்ததோடு, அது, உடனடியாக, உருவாகப் போதிய நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்தது.

1919ஆம் ஆண்டு 26ஆம் நாள், மக்கள் ஆணைக் குழு (அமைச்சர் அவை) லெனினுடைய ஆலோசனையின் பேரில், கல்லாமையைக் கெல்லி எறிவதற்கான ஆணை யொன்றை பிறப்பித்தது. இது, நாட்டில் எட்டு வயது முதல் ஐம்பது வயது வரை உள்ள அனைவரும் தத்தம் தாய் மொழியிலோ இரஷ்ஷிய மொழியிலோ எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிட் டது. எம்மொழியில் படிப்பது என்பதை மக்கள் விருப் பத்திற்கு விட்டு விட்டது. ஏற்கனவே உள்ள பள்ளிகளில் 'முதியோர் எழுத்தறிவுப் பள்ளி'களைத் தொடங்கினர்கள். எழுத்தறிவு மையங்கள் எல்லாப் பக்கங்களிலும் முளைத் தன. கல்லாமையைப் போக்கும் எழுத்தறிவுப் பள்ளி களும் மையங்களும், ஆலைகளிலும் தொழிற் கூடங்களிலும் இராணுவக் கூடங்களிலும் படிப்பகங்களிலும் தோன்றின.

சிறுவர்களும் முதியவர்களும் ஒரே பெஞ்சில் அமர்ந்து படிக்கத் தொடங்கினார்கள். நாடு முழுவதுமே பெரிய பள்ளியாகி விட்டது.

எழுத்தறியாமையை வெல்லும் முயற்சிகளை லெனின் கூர்ந்து கவனித்து வந்தார். மகத்தான அக்டோபர் புரட்சிக்கு அடுத்த நாளே, புதிதாக அமைக்கப்பட்ட, மக்கள் கல்வி ஆணையகத்தின் புதிய ஆணையர், ஏ.வி. லூனா சார்ஸ்கியிடம் இரஷ்ஷியாவில் எழுத்தறியாமையை ஒழித்தாக வேண்டுமென்று தலைவர் லெனின் கட்டளையிட்டார்.

மக்கள் கல்வி ஆணையகம் அனுப்பிய முதல் சுற்றறிக்கை, எழுத்தறியாமையை ஒழிப்பதில் அறிவாளிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அழைத்தது.

"கல்லாமையும் அறியாமையும் ஆட்சி செய்யும் இந்நாட்டில், கல்வித் துறையில் இயங்கும் எல்லா ஜனநாயக அமைப்புகளும், இவ்விருளைப் போக்கப் போராடுவதையே தங்கள் முதல் குறிக்கோளாகக் கருத வேண்டும். இக்காலத்திற்குப் பொருத்தமான பள்ளிகளை நாடு முழுவதும் திறப்பதன் மூலமும் கட்டாய இலவசக் கல்வியைக் கொண்டு வருவதன் மூலமும் இக் குறிக்கோளை, முடிந்த அளவு குறைந்த காலத்தில், அடைய வேண்டும். சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் பள்ளிகளைத் திறப்பதோடு, கல்லாமைக்கும் அறியாமைக்கும் எதிரான போராட்டம் முடிந்து விடாது. எழுதவும் படிக்கவும் தெரியாது என்னும் இழிவிலிருந்து, முதியோரும் விடுபட விரும்புவர், பொதுக் கல்வித் திட்டத்தில், முதியோர் பள்ளிகளுக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும்."

முதியோர் எழுத்தறிவுப் பணிக்கு வாருங்கள் என்றழைத்த போது, ஏராளமான தொண்டர்கள் முன் வந்தார்கள். எழுத்தறிவிக்கும் பேரணியில், பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள், மாணுக்கர்கள், அலுவலர்கள் ஆகியோர் விருப்பத்தோடு சேர்ந்தார்கள். நாடு தழுவிய எழுத்தறிவுப் பெரும் பணியில் இளம் கம்யூனிஸ்டுக் கழகம், தனி அக்கறையும் முயற்சியும் செலுத்திற்று. 'அவர்

கள். கல்லாமை ஒழிப்பிற்கு மக்களைத் திரட்டினார்கள். பள்ளிகளைக் கட்டித் தந்து உதவினார்கள்; முதியோர் பள்ளிகளில் ஆசிரியர் தொண்டும் ஆற்றினார்கள்.

எங்கெங்கு முடியுமோ, அங்கெல்லாம் எழுத்தறிவு வகுப்புகள் தோன்றின. மூன்று முதல் முப்பது மாணாக்கர்கள் வரை அவ்வகுப்புகளில் இருந்தார்கள். ஒரே முதியவரே வந்த வகுப்புகளும் இருந்தன. அவையும் தொடர்ந்து செயல்பட்டன.

'எழுத்தறியாமை ஒழிப்புச் சங்கம்' என்னும் பெயரில் ஒரு சங்கம் 1923இல் நிறுவப்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் முதல் தலைவராக விளங்கிய, மிக்கையீல் கலினின், அதன் தலைவராகத் தொண்டாற்றினார். அவருடைய முன்முயற்சியால், நாடு தழுவிய இவ்வியக்கம் மேலும் முடுக்கி விடப்பட்டது. அறிவுத் தாகம் எல்லாரிடமும் வளர்க்கப்பட்டது. பாட்டாளிகள் விவசாயிகள் இடையே எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொள்ளும் அவா தூண்டப்பட்டது. இந்த அவா, பெண்களிடமும் எழுந்தது.

புதிய வாழ்வை உருவாக்குவதில் பெண்களும் சுறுசுறுப்பான பங்கு கொள்ளச் செய்வதற்கு முக்கிய வழி, பெண்களுக்கு எழுத்தறிவு அளிப்பதே என்று உணர்ந்த லெனின், பெண்கள் எழுத்தறிவு பெறுவதற்கு மிக முக்கியத்துவம் அளித்தார். இப்பணி அவசரமானது, நிறை பலன் உடையது என்பதை அறிவுறுத்த, எவ் வாய்ப்பையும் லெனின் தவற விடவில்லை.

கல்விக்காக நிதி திரட்டும் பரவலான, பெரிய இயக்கம் செயல்பட்டது. நாடு முழுவதிலும் விடுமுறை நாட்களில் ஊதியம் பெறாமல், பொதுப் பணிகளைச் செய்யும் முறையும் பள்ளிக்கு உதவும் வாரங்களும் நடத்தப்பட்டன. தொழிற் சாலைகளும் இயந்திரக்கூடங்களும் பிற அமைப்புகளும் பொதுக் கல்விக் கூடங்களுக்கும் முதியோர் எழுத்தறிவுப் பள்ளிகளுக்கும் ஆதரவு கொடுக்க முன்வந்தன.

கடுமையான வர்க்கப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நிலையில்தான், எல்லாப் பக்கங்களிலும் எழுத்தறியாமை ஒழிப்புப் பணி நடந்தது. பொது மக்களிடையே அரசியல் அறிவும் கலையொளியும் பரவி விடாதபடி தடுக்க, சோவியத்திற்கு எதிர் சக்திகள்—குறிப்பாக நாட்டுப்புறங்களில்—எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்தன.

தொடக்கத்திலிருந்தே, முந்திய அனைத்துக் கல்வி முயற்சிகளைக் காட்டிலும் பெருமளவு விரிந்த அடிப்படையில், சோஷலிசக் கலைப் புரட்சி அமைந்தது. முன்னறியாத அளவு பெரிய, மக்கள் இயக்கமாக, இது இருந்தது. மேலிடத்திலிருந்து வீழ்ந்த கல்விப் பிச்சையை, கையேந்தி ஏற்றுக் கொள்பவர்களாக இருப்பதற்குப் பதில், புதிய பண்பாட்டிற்கு வாதிடுபவர்களாகவும் அதை அமைப்பவர்களாகவும் தொழிலாளிகளும் குடியானவர்களும் செயல்பட்டார்கள்.

பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக, 1925-26 ஆம் ஆண்டிற்குள் 30 இலட்சம் முதியோர்கள் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்வதில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் நாட்டுப்புற மக்கள் ஆவார்கள். காலஞ் செல்லச் செல்ல, முதியோர் எழுத்தறிவு இயக்கம் மேலும் வீறு கொண்டது.

மத்திய ஆசியக் குடியரசுகளில் வாழ்ந்த மாதர்கள், கோஷா முறையைப் பின்பற்றினார்கள். அவர்கள் ஆண்கள் கூடும் முதியோர் எழுத்தறிவு வகுப்புகளுக்குச் செல்ல மறுத்தார்கள். அம் மனப்போக்கு மாறும் வரை, எழுத்தறிவு ஊட்டுவதைத் தள்ளிப் போடவில்லை. எழுத்தறிவு வகுப்புகளை நாடி, பெண்கள் போகாத இடங்களில், பெண்களை நாடி அவ்வகுப்புகள் சென்றன. அக்கம் பக்கத்து மாதர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களின் வீடுகளில் எழுத்தறிவு மையங்கள் தோன்றின. மாதர்களுக்காக குழந்தை வளர்ப்பு, மனையியல் திறன் பற்றிய பாடங்களைக் கொண்ட தனிவகுப்புகள் நடந்தன.

பொது மக்களுடைய எழுத்தறியாமைக்கு எதிரா
நடந்த பலமுனைத் தாக்குதல் பலன் கொடுத்தது. மு
பதுகளில் இத்தாக்குதல் உச்ச கட்டத்தை அடைந்தது
ஓய்வு நேரங்களில் எழுத்தறிவு பெருத எல்லா முதியோ
களும்—ஆண்களும் பெண்களும்—எழுதப் படிக்கக் கண
டைக் கற்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

நல்ல உடல் நிலையில் இருந்த முதியோர் அனைவ
டமும் எழுத்தறியாமையை ஒழிப்பதில், முப்பதுகளின்
பாதியில், சோவியத் ஒன்றியம் வெற்றி பெற்றது. உ
கத்தின் முதல் சமதர்ம நாடு இப்பெரிய அற்புதத்தை
நடத்திக் காட்டிற்று. பலனைப் பொறுத்தமட்டில், சோவ
யத் நாட்டின் புதிய சமுதாய, பொருளியல் அமைப்புக்கு
இதை ஈடாகச் சொல்லலாம்.

''நம்முடைய முதல் பணியும் முக்கிய பணியும் எ
லோர்க்கும் எழுத்தறிவு கொடுப்பதாகும்; ஆனால், எ
நிலையிலும், இக் குறிக்கோளோடு நின்றுவிடக் கூடாது
என்ன விலை கொடுக்க நேரிட்டாலும் இதற்கு மேலு
செல்ல வேண்டும். ஐரோப்பிய, அமெரிக்க விஞ்ஞான
களில் மெய்யான மதிப்புடையவற்றை நாம் தழுவி
கொள்ள வேண்டும்'' என்று லெனின் எழுதினர். இ
நோக்கம் நிறைவேறி விட்டது. முதியோர்களின் கல்வ
கலை, நிலைகளை உயர்த்தும் வேலை, மேலும் மேலும் அதி
மாகிக் கொண்டிருக்கிறது.

சோவியத் ஒன்றியத்தில், புதிதாக எழுத்தறிவு பெ
றவர்கள் அதுவே போதுமென்று இருந்தார்களா? இ
லவே இல்லை. மக்களிடையே ஏற்பட்ட விழிப்பு, அவர்க
மேலும் கற்கத் தூண்டிற்று. தொழிலாளிகளுக்காகவு
விவசாயிகளுக்காகவும் பல்கலைக் கழகங்களும் உயர் கல்
நிலையங்களும் எழுந்தன. அவர்கள் அடைந்துள்ள, ப
வேறு கல்வி நிலையங்களுக்கேற்ப, பல் வகையான பாட
திட்டங்களை வகுத்தார்கள். முழு நேரக் கல்வி என்னு
ஒரே வாய்க்காலை நம்பியிருப்பதைக் கைவிட்டார்க
பகுதி நேரக் கல்வியும் அஞ்சல் வழிக் கல்வியும் (ஓய்

(போது படித்தல்) வளர்ந்தன. இவை தெளிவான நோக்கங்களோடும் விஞ்ஞான அடிப்படையிலும் உருவாயின. இவ்விரு புதிய வழிகளில் கல்வி பெறுவோரை ஊக்கும் பொருட்டு, கூடுதல் விடுமுறை நாட்கள், படிக்கவும் சோதனை நடத்தவும் நீடிக்கப்பட்ட விடுப்புகள், பயணச் சலுகைகள், ஆகியவற்றை வழங்குகிறார்கள்.

எல்லோர்க்கும் எழுத்தறிவு அளித்து விட்ட சோவியத் ஒன்றியம், தனது பரந்த பூமியில் வாழும் எல்லா தேசிய இனங்களுக்கும் வாழ்நாள் முழுவதும் கல்வி என்னும் சிகரங்களை எட்டிப்பிடித்து விட்டது.

# கல்விக் கோட்பாடுகளும் நிலைகளும்

சோவியத் ஒன்றியத்தில், பொருளியல் முன்னேற்றத்திற்கும், சமுதாய ஒருமைப் பாட்டிற்கும், கலைப் புரட்சிக்கும் முக்கிய கருவியாகக் கல்வி பயன்படுகிறது. ஜார் கால இரஷ்ஷியா பின் தங்கியது. இதுவே, சோவியத் ஆட்சியில் பெரிதும் தொழில் மயமாகி விட்டது. சோவியத் வேளாண்மை, விஞ்ஞான தொழில் நுட்ப அடிப்படையில் நடத்தப்படுகிறது. பயிர் வேலைகளை, இயந்திரங்களைக் கொண்டு நடத்துகிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட எல்லா தேசிய இனங்களும் அமைதியோடும் ஒற்றுமையோடும் வாழ்கின்றன. சோவியத் சமுதாயம், மேட்டுக் குடிகள், சாதாரண பாமரர்கள் என்று பிளவு பட்டு இல்லை. சோவியத் ஒன்றியத்தில் கலையுணர்வு பரவலாக உள்ளது. அது, என்றும் தேங்கிக் கிடக்கவில்லை. அது, எப்போதும் உயிர்த் துடிப்போடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. சோவியத் கல்வி முறையின் வெற்றிகரமான செயல்பாடே, இத்தனைக்கும் காரணம் ஆகும். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அறுபது ஆண்டு காலம் குறுகியதே. இக்குறுகிய காலத்தில், விரிந்த இந்நாட்டின் இருபத்தைந்து கோடி மக்களும் ஒளி பெற்று விட்டார்கள். நாடு தழுவிய கலைப் புரட்சியை உருவாக்கியவர்கள் குடி மக்களே. அதன் பலன்களைத் துய்ப்பவர்களும் அவர்களே.

மற்ற துறைகளைப் போலவே, சோவியத் நாட்டின் பொதுக் கல்வியும், சமுதாயத்தின் தேவைகள், விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி, பொது மக்களின் கலை உயர்வு, தொழில் பற்றி கம்யூனிசப் போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் வளர்கிறது. பண்டைய முற்போக்கு, ஜன நாயக மரபுகள், அக்டோபர் புரட்சி தொடங்கியுள்ள

புதிய சமுதாய 'மாற்றங்கள், இரண்டையும் இணைக்கும் வகையில் சோவியத் கல்வி முறை அமைந்துள்ளது.

கலைப் புரட்சியின் முடிவான விளைவு, புதிய மனிதனை உருவாக்குவதே. அம்மனிதன், உயர்ந்த ஒழுக்க நெறிகளும், உள வளமும், உடலிலும் அறிவிலும் சீரான வளர்ச்சியும் பெற்றவர் ஆவார். புரட்சி நடந்த பிறகு, பதின்மூன்றும் ஆண்டில், இரவீந்திரநாத தாகூர் சோவியத் ஒன்றியத்திற்குச் சென்றார். சோவியத் கல்வி முறையைத் துருவிப் பார்த்தார். பார்த்த பிறகு ''அந்நாட்டில் மக்கள் சிந்தனை உயர்ந்து ஓடுவதை உணர்ந்தேன். அங்கு ஒவ்வொருவருடைய படிப்பும் எல்லோருடைய படிப்பிற்கும் துணை நிற்கிறது. எவர் ஒருவருடைய குறைவான படிப்பும் மற்றவர்களுடைய மனதில் தைக்கிறது'' என்று எழுதினார்.

எல்லோர்க்கும் கல்வி கொடுப்பதன் மூலம், சோவியத் மக்கள், 'கூட்டறிவை' நாடு முழுவதிலும் வளர்த்து விட்டார்கள். தாகூர் கண்ட, உயர் சிந்தனையோட்டம் இன்றும் தொடர்கிறது. இதனால், சென்ற அறுபது ஆண்டுகளில், சோவியத் நாட்டு மக்களின் வாழ்க்கையில் எல்லாக் கூறுகளும் மாறியுள்ளன.

அக்டோபர் புரட்சியின் ஐம்பதாவது நிறைவு விழாவில் பேசிய சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலராகிய எல்.ஐ.பிரெஷ்னேவ், ''நாம் முழுமையும் புதிய உலகை அமைத்து விட்டோம்; புதிய சமதர்ம உறவுகள், புதிய சோவியத் மனிதன் உள்ள உலகைக் கட்டியுள்ளோம். சோவியத் மக்களின் உணர்வு மண்டலம் நெடுந்தூரம் விரிந்து விட்டது. அவர்களுடைய ஒழுக்க முறைகள், தொழில் பற்றிய அவர்களுடைய போக்கு, சமுதாயத்தைப் பற்றிய, ஒருவருக்கொருவரைப் பற்றிய கண்ணோட்டம் ஆகியவை மாறி விட்டன'' என்று கூறினார்.

எந்தக் கோடியில் வாழ்ந்தாலும் எத் தொழிலில் இருந்தாலும் ஒவ்வொருவருடைய பொருளியல், அறிவியல், நிலையையும் வளர்க்கும் வகையில், சோவியத் நாடு

முழுவதும் கற்பதிலும் உழைப்பதிலும், சிந்திப்பதிலும் வாழ்க்கையை சீரமைப்பதிலும் ஈடுபட்டிருக்கிறதென்ருல் மிகையாகாது. சோவியத் கல்வி முறையின் சிறந்த பயனுக்கு இதை விட உயர்ந்த பாராட்டு ஏது?

இவ் வெற்றியின் இரகசியம் என்ன?

சோவியத் கல்வி முறை, கண்டபடி முளைத்து வளர்ந்ததல்ல. இது, சிறந்த தொலை நோக்கில் கருவுற்றது. இது, செம்மையான சிந்தனையில் முளைத்தது; விஞ்ஞான அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற காலத்து கற்பிக்கும் இயலின் கருவூலங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டது.

சோவியத் கல்வி, பன்முகங் கொண்ட, பெரும் மாளிகையாகும். மனிதன் எல்லையற்றுக் கற்கும் ஆற்றல் உடையவன் என்னும் நம்பிக்கையின்மேல் இது எழுப்பப் பட்டிருக்கிறது. சென்ற நூற்ருண்டில், ஐ.எம்.செசனெவ் என்னும் இரஷ்ஷிய உடலியல் அறிஞர் வாழ்ந்தார். மனித அறிவில், ஆயிரத்துக்கு ஒரு பங்கே இயற்கையில் பெற்றது; மற்ற தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பங்கும் கல்வியால்—மிக விரிந்த பொருளில்—விளைந்தது என்பது இவருடைய முடிவு. சோவியத் கல்வியாளர்கள் இதை ஏற்றுக்கொண்டு, எடுத்துக் காட்டுகிருர்கள். மனிதனுடைய ஆளுமை வளர்ச்சியை ஊக்கவோ, தாக்கவோ செய்யும் எல்லாச் சமுதாயக் கூறுகளும் 'கல்வி' என்பதின் விரிந்த பொருளில் அடங்கும்.

மனிதனுடைய கற்கும் ஆற்றலுக்கு எல்லையில்லை என்பதை நம்புகிற சோவியத் அரசு, நாட்டிலுள்ள எல்லா ஆண்களையும் பெண்களையும் முடிந்த அளவு உயர்ந்த கல்வியைப் பெற்றவர்களாக்குவதில், அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. ஆசிரியர்கள், கட்டடங்கள், தளவாடங்கள், துணைக் கருவிகள், நிதி ஆகியவை மலையளவு தேவைப்பட்ட போதும் மலைக்கவில்லை; சுணங்கவில்லை.

சோவியத் ஒன்றிய அரசியல் சட்டம், உயிருக்கு, வேலைக்கு, மருத்துவ வசதிக்கு, ஓய்வு பெறுதலுக்கு,

வயோதிகத்தில் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் செய்வது போல, எல்லோருக்கும் கல்வி உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. புதிய சோவியத் அரசியல் சட்டத்தின் 45வது விதி' இவ்வாறு கூறுகிறது: ''சோவியத் ஒன்றியப் பிரஜைகள் கல்வி கற்க உரிமை பெற்றிருக்கிறார்கள். கல்வியின் எல்லா வடிவங்களையும் இலவசமாக அளிப்பதன் மூலமும்; சர்வ ஜன கட்டாய செகண்டரிக் கல்வியை ஏற்படுத்துவதன் மூலமும்; செயல்முறை நடவடிக்கையையும் உற்பத்தியையும் நோக்கமாய்க் கொண்டு போதனை அளிக்கப்படும் தொழிற் கல்வியையும், விசேஷ செகண்டரி மற்றும் உயர் கல்வியையும் விரிவாக அபிவிருத்தி செய்வதன் மூலமும்; பள்ளிக்கு அப்பாற்பட்ட, தபால் கல்வி மற்றும் மாலை நேரக் கல்வி முறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலமும்; மாணவர்களுக்கு அரசாங்க உபகாரச் சம்பளங்களும், மானியத் தொகைகளும், சலுகைகளும் வழங்கப்படுவதன் மூலமும்; பள்ளிப் பாடப் புத்தகங்களை இலவசமாக அளிப்பதன் மூலமும்; தாய் மொழியில் போதிக்கப்படும் பள்ளிக் கூடத்திற்குச் செல்ல வாய்ப்பு அளிப்பதன் மூலமும்; சுயமாகக் கல்வி கற்றுக் கொள்வதற்கான வசதிகளை அளிப்பதன் மூலமும் இந்த உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.'' இவ்வுரிமை, சட்டத்தில் இடம் பெற்றதோடு நிற்கவில்லை; எல்லோரும் வாழ்க்கையில் துய்க்கிற உரிமையாகவும் விளங்குகிறது.

திட்டமான கோட்பாடுகளின் மேல், சோவியத் கல்வி முறை கட்டப்பட்டு இருக்கிறது. சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சியில், பல கால கட்டத்தில், புதுப் புது வகை பள்ளிகள் தோன்றியிருக்கலாம்; ஆயினும் பொதுக் கல்வியை சமதர்ம முறையில் உருவாக்கும் அடிப்படைக் கோட்பாடோ அப்படியே இருக்கின்றது. 1973ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சோவியத் ஒன்றிய சுப்ரீம் சோவியத் (நாடாளுமன்றம்) ஏற்றுக்கொண்ட, பொதுக் கல்வி பற்றிய அடிப்படைச் சட்டங்களில் இக்கோட்பாடு

இடம் பெற்றுள்ளது. ஒன்றியக் குடியரசுகளின் சட்டங்களிலும் இது சேர்ந்துள்ளது.

பொதுக் கல்வித் துறையில் எய்திய சாதனைகளின் சட்ட உருவமாக இச்சட்டம் அமைந்துள்ளது. வருங்காலத்தில் எந்தப் பாதைகளில் பொதுக் கல்வி தொடர்ந்து வளரும் என்பதையும் இது காட்டுகிறது.

சோவியத் ஒன்றியத்தில் பொதுக் கல்வி பற்றிய அடிப்படைக் கொள்கைகள் எவை? அவை வருமாறு:

(1) இனம், தேசியம், பால், சமயச் சார்பு, சொத்து அல்லது சமூகநிலை ஆகிய எதையும் பாராமல், சோவியத் குடிமக்கள் அனைவருக்கும் கல்வி வாய்ப்புகளில் சமத்துவம்.

(2) எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் இளைஞர்களுக்கும் கட்டாயக் கல்வி.

பள்ளிக்கூடங்களுக்கு நெடுந்தொலைவில் இருக்கும் குடியிருப்புகளில் வாழும் பிள்ளைகளுக்குப் பள்ளிக்குச் சென்று வர, இலவச வாகன வசதி உண்டு; பகல் உணவு முழுமையும் இலவசமாகவோ, ஓரளவு உதவியோடோ அளிக்கப்படும். சில பகுதிகளில் குடி மக்கள் குறைவு. தூர வடக்கு போன்ற பிரதேசங்களில் தட்ப வெப்ப நிலை கொடுமையானது; மலைப் பகுதிகளிலும் மக்கள் குறைவு. இத்தகைய இடங்களில் இருக்கும் குழந்தைகள் உறையுள் பள்ளிகளில் தங்கிப் படிக்கிறார்கள். இதற்கான செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளுகிறது.

(3) எல்லாக் கல்வி நிலையங்களும் பொதுவானவை; அரசுக்குச் சொந்தம்.

சோவியத் ஒன்றியத்தில் எல்லாக் கல்வி நிலையங்களையும் அரசே நடத்துகிறது. அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்தே இதற்கான நிதி கிடைக்கிறது. இவை, நாட்டின் பொருளியல் திட்டங்களின் கூறுகளாகவே வளர்க்கப்படுகின்றன. அப்படி வளர்க்கப்படும் போது, நாட்டுப் பொருளியலின் தேவைகளையும் மக்களின் தேவைகளையும் கூடிய அளவு முழுமையாகக் கருத்தில் கொள்ளுகிறார்கள்.

(4) பாட மொழியைத் தேர்ந்தெடுக்க உரிமையுண்டு.

இது தாய் மொழியாக இருக்கலாம்; அல்லது சோவியத் நாட்டின் பிற மொழிகளில் ஒன்ருகவும் இருக்கலாம்.

தத்தம் தாய் மொழிகளிலேயே கற்பதற்கு உரிமை கோரி, இரஷ்ஷியரல்லாத மக்கள், நெடுங் காலம் போரிட்டார்கள்; ஆனல் வெற்றி கிட்டவில்லை. அக்டோபர் புரட்சியே இவ்வுரிமையை சோவியத் நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் வழங்கிற்று.

சோவியத் மக்களுக்குச் சொந்தமான ஐம்பத்தேழு மொழிகளின் வழியாக, சோவியத் பள்ளிகளில் பயில்வோர், கற்பிக்கப்படுகிருர்கள். சோவியத் ஆட்சிக் காலத்தில் தான், நாற்பதற்கு மேற்பட்ட இனங்கள் தங்கள் மொழிகளுக்கு வரி வடிவத்தையே பெற்றன. 'இதைப் பாட மொழியாக எடுக்கக் கூடாது; இதை எடுக்க வேண்டும்; இன்னென்றை எடுத்தால், சலுகைகள்' என்பன இந்நாட்டில் இல்லை. சோவியத் ஒன்றியத்தில், மக்களிடையே சகோதர வாஞ்சையும் ஒருவருக் கொருவர் நம்பிக்கையும் நிலவுவதால், தேசிய மொழிகள் சமத்துவத்தோடும் ஒன்றையொன்று வளப்படுத்தும் வகையிலும் வளர்கின்றன.

(5) தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரையில் எல்லாக் கல்வியும் இலவசம். எல்லோருக்கும் கல்வி உரிமை என்னும் கோட்பாட்டை, இலவசக் கல்வி முறையே, உறுதிப்படுத்துகிறது.

கல்வி சம்பளமின்றி கிடைப்பதோடு, அரசால் உதவித் தொகை வழங்கும் முறையும் செயல்படுகிறது. தொழிற் பயிற்சிப் பள்ளிகள், தனிப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகள், உயர் கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பயில்வோருக்கு உபகாரச் சம்பளம் உண்டு. இம்முறை நாடு முழுவதிலும் நிலவுகிறது.

(6) ஒருங்கிணைந்த பொதுக் கல்வி; எல்லா வகைக் கல்வி நிலையங்களும் ஒன்ருேடொன்று தொடர்தல்; இவற்ருல் எளிதாகக் கீழ்நிலைக் கல்வி நிலையத்திலிருந்து அடுத்த மேல் நிலைக் கல்விக் கூடத்திற்கு மாறுதல்.

நாடு முழுமைக்கும் ஒரே வகையான, தொடக்கப் பள்ளி, உயர்பள்ளி, தனிப் ப்யிற்சி உயர் பள்ளி, பல்கலைக் கழகம் ஆகியவை இயங்குகின்றன. 'முட்டுச் சந்தில்' மோதிக் கொண்டு, அடுத்து முன்னேற முடியாத வகையில், செயல்படும் பள்ளிகள் இங்கு 'இல்லை.

இதிலிருந்து, நாட்டிலுள்ள, எல்லாப் பொது உயர் நிலைப் பள்ளிப் பாட திட்டங்களும் முழுக்க முழுக்க ஒன்ருக இருப்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது. தேசிய மொழி, இலக்கியம், குடியரசுகளின் பூகோளம், வரலாறு ஆகியவற்றிற்கு ஒவ்வொரு குடியரசும் தனித்தனி பாட திட்டங்களை உருவாக்கிக் கொள்ளுகின்றன.

பொது உயர்நிலைப் பள்ளியின் கால அளவையிலும் சில வேறுபாடுகள் இருப்பதை, இங்கே கவனிப்பது சுவையுள்ளதாகும். பால்டிக் சமதர்மக் குடியரசுகளான, லாத்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா ஆகியவற்றில் உயர் நிலைப் பள்ளிகள், மற்ற குடியரசுகளில் இருப்பது போன்று, பத்தாண்டுப் பள்ளிகள் அல்ல; அவை பதினெரு ஆண்டுப் பள்ளிகள் ஆகும்.

ஒருங்கிணைந்த பொதுக் கல்வி என்னும் போது எவ்வகைக் கல்வி நிலையங்களிலும் சேர்க்கைத் தகுதி ஒரே சீராக உள்ளது; வேலை பெறும் தகுதியும் அப்படியே இருக்கிறது என்பதே பொருள்.

(7) ஒருங்கிணைத்து கற்பித்தல்; கம்யூனிச சிந்தனையோடு வளர்த்தல்.

சோவியத் பள்ளிகள் ஒதுங்கியிருந்து செயல்படவில்லை. குடும்பத்தோடும் சமுதாயத்தோடும் இணைந்தே, சிறுவர்களையும் இளைஞர்களையும் வளர்ப்பதில் ஈடுபடுகின்றன. வீடொன்று கற்பிக்க, பள்ளியொன்று கற்பிக்க, இரண்டிற்குமிடையே போட்டி ஏற்படும் நிலை இல்லை. ஒன்றின் முயற்சிக்கு மற்றதின் முயற்சி துணையாகிறது. கல்விபற்றிய கேள்விகளைப் பொது மக்கள் பரவலாக விவாதிக்கிருர்கள்.

ஒவ்வொரு சோவியத் பள்ளியிலும் சுறுசுறுப்பாகச் செயல்படும் பெற்ருேர் குழு உண்டு. ஆசிரியர்கள், தங்

கள பாடங்களை வெற்றிகரமாக முடிக்க, பெற்ரேர் குழுக் கள் துணையாகின்றன. வளர்ந்து வரும் தலைமுறையை, அனைத்துலக உணர்வோடும் எல்லாப் பாட்டாளிகள் பேரி லும் நேசத்தோடும் வளர்க்கும் போற்றற்குரிய பணியில், சோவியத் பள்ளிகள், குடும்பங்களின் ஒத்துழைப்போடு ஈடுபட்டுள்ளன.

(8) உள்ள சூழ்நிலையோடும் கம்யூனிச கட்டமைப்பு நடைமுறையோடும் பாடங்களைக் கற்பித்தலையும் இளைஞர் களை வளர்ப்பதையும் இணைத்தல்.

எனவே, சோவியத் பள்ளிக்கூடத்தில் பாடங்க ளோடு வேலையும் உண்டு. ஏட்டறிவோடு வேலை அனுபவத் தையும் இவை அளிக்கின்றன. மாணக்கரின் நலன்களோ டும் சமுதாயத்தின் தேவைகளோடும் நெருக்கமான தொடர்புடையது சோவியத் பள்ளி. மாணவன் செயல் படுவதற்கு பல வழிகளைக் காட்டுகிறது. கூட்டு உற்பத்தி வாழ்க்கையைப் புரிந்து பாராட்டக் கற்றுக் கொடுக்கிறது. மாணக்கன் மதிக்கத்தக்க குறிக்கோளை, தானே தேர்ந் தெடுக்கக் கற்பிக்கிறது.

(9) விஞ்ஞான அடிப்படையிலான கல்வி; விஞ் ஞானம், தொழில் நுட்பம், கலை ஆகிய துறைகளில் காணும் புதுமைகளையொட்டி இதைத் தொடர்ந்து சீர மைத்தல்.

நாம் வாழும் காலத்தில் பல துறைகளில் விரைவான மாற்றங்களைக் காண்கிறோம். எனவே, கற்பிக்கும் செய் திகள், சரியாகவும் அப்போதைக்கும் உண்மையாகவும் விஞ்ஞான ரீதியில் அமைந்ததாகவும் இருக்கும் பொருட்டு, பாட திட்டங்களை அப்போதைக்கப்போது முறையாக மாற்றி யமைத்தல், இன்றியமையாததாகிறது. பாடம் சொல் லும் முறைகளும் மீண்டும் மீண்டும் ஆராயப்படுகின்றன.

(10) கல்வியும் குழந்தை வளர்ப்பும் மனித பாசத் தையும் சிறந்த ஒழுக்க உணர்வினையும் உடையதாகுதல்.

பிஞ்சுப் பருவந்தொட்டே, நல்லதை விழையும் உணர்வினை, குழந்தைகளிடம் வளர்ப்பதில் சோவியத்

பள்ளி அக்கறை காட்டுகிறது. நல்லதையும் அல்லதையும் அடையாளம் கண்டு கொள்ளும் திறனை வளர்க்கிறது. எத்தன்மைத்தாயினும் தீமையை எதிர்த்துப் போராடும் பாங்கில், இளைஞர்களை வளர்க்கிறது.

*(11)* ஆணும் பெண்ணும் ஒன்ருக இருந்து படித்தல்.

சோவியத் கல்வியின் ஆழமான கடைக் கால்களில் ஒன்ருக இக்கொள்கை விளங்குகிறது. பொருளியல், சமூக இயல், கலையியல் ஆகிய துறைகளில், ஆண் பெண் சமத்துவம் முழுமையாக நிலவுவதைப் பற்றி, சோவியத் மக்கள் உரிமையோடு பெருமை கொள்கிருர்கள். ஆண், பெண்களுக்கிடையே காணக்கூடிய, உள, உடல் வேறு பாடுகள், தனித்தனிப் பாடத் திட்டங்களை நியாயப்படுத்து மளவிற்கு ஆதாரமானவை என்று சோவியத் கல்வியாளர் கள் நம்பவில்லை.

கல்வியின் எல்லா நிலைகளிலும் பையன்களும் பெண் களும், இளைஞர்களும் இளம் பெண்களும் சேர்ந்தே படிக் கிருர்கள். பையன்களையும் இளைஞர்களையும் எந்த அடிப் படையில், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளிலும் உயர் கல்வி நிலையங்களிலும் சேர்க்கிருர்களோ, அதே அடிப்படையில் பெண் பிள்ளைகளும் பெண்களும் சேர்த் துக் கொள்ளப்படுகிருர்கள்.

சோவியத் ஒன்றியத்தின் 1959-ஆம் ஆண்டின் குடிக் கணக்கின்படி, உயர் கல்வி பெற்றவர்களில் நூற்றுக்கு நாற்பத்தொன்பது பேர்கள் பெண்கள். நுட்பத் தொழில் பிரிவுகளில், மொத்தத்தில் நூற்றுக்கு ஐம்பத்தேழு விழுக் காட்டில் பெண்கள் இருந்தார்கள்.

*(12)* சமய வாடையில்லாத, அதன் செல்வாக்குக்கு ஆட்படாத கல்வி.

அக்டோபர் புரட்சிக்குப் பின், பிறப்பிக்கப்பட்ட முதல் சோவியத் ஆணைகளில் ஒன்று, பள்ளிக் கூடங்களுக் கும் மத அமைப்புகளுக்கும் இருந்த தொடர்பினை கத்த ரித்து விட்டது. இது, நாடு முழுவதிலும் லோகாயுதக் கல்வி முறையை வளர்ப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

சோவியத் பள்ளிகளில் சமய போதனை கிடையாது. சோவியத் கல்வி, மனச் சாட்சி உரிமை, விஞ்ஞான லோகாயுதவாதம் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

சோவியத் கல்வியின் குறிப்பிட்ட நோக்கங்களைக் கவனிப்போம். இதன் நோக்கங்கள் வருமாறு:

(அ) மனித குலம் சேகரித்துள்ள பொது அனுபவங்களை செரிப்பதன் மூலம் ஏற்படும் அறிவினை வளர்க்கும் அறிவுக் கல்வி.

(ஆ) நாட்டுப் பற்று, கூட்டுடைமை, தொழில் பற்றியும் பொதுச் சொத்து பற்றியும் சரியான கண்ணோட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு, நாணயம், ஆகியவற்றை வளர்க்கும் ஒழுக்கக் கல்வி.

(இ) துணிவு, உறுதி, தாங்குதல், தன்னடக்கம், சோர்வடையாமை, எழில், ஆகியவற்றை வளர்க்கும் உடற் பயிற்சி.

(ஈ) இயற்கை, சமுதாயம், மானுட உறவு ஆகியவற்றில் உள்ள அழகினைப் புரிந்து பாராட்டும் இயல்பினை வளர்க்கும் கலைக் கல்வி.

(உ) சமுதாயத்தைப் பராமரிக்கும் உற்பத்தி முறைகளை நன்ருக அறிந்து கொண்டு, அவற்றில் ஈடுபடுதலையும் நாட்டின் பொருளியல் தேவைகளுக்கேற்ற திறன்களைப் பெறுதலையும் ஊக்கும் தொழில் நுட்பக் கல்வி.

சோவியத் கல்விக் கூடங்களை கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம்.

(1) பால்வாடிகள், நர்சரிப் பள்ளிகள், கிண்டர் கார்டன்கள்

(2) பொது, உயர்நிலைப் பள்ளிகள்

(3) தொழில் நுட்பப் பள்ளிகளும் தொழிற் பயிற்சி நிலையங்களும்

(4) சிறப்புப் பயிற்சி அளிக்கும் உயர்நிலைப் பள்ளிகள்

(5) உயர் கல்வி நிலையங்கள்

ஒவ்வொரு நிலைக் கல்வியும் அடுத்த நிலைக் கல்வியோடு கோக்கப்பட்டிருக்கிறது. பல முனைகளில் நுழைய வசதியுண்டு.

பின்வரும் அதிகாரங்களில் ஒவ்வொரு நிலைக் கல்வியையும் விரிவாகப் பார்ப்போம்.

# பள்ளிக்கு முந்திய கல்வி

முறையாகப் பள்ளியில் படிக்கச் சேருதல், வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு வயதுகளில், ' தொடங்குகிறது. சில நாடுகளில், பிள்ளைகளுக்கு ஐந்து வயது நிறைந்ததும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுவார்கள்; இன்னும் சிலவற்றில் ஆறு முடிந்ததும் சேர்ப்பதுண்டு. சோவியத் ஒன்றியத்தில் ஏழு முடிந்ததும் முறையான பள்ளிப் படிப்பு தொடங்குகிறது. பள்ளியில் முறைப்படி சேரும் வரையில், கல்வி காத்துக் கொண்டிருக்கிறதா? இல்லை என்பதே உண்மை. கல்வியெனும் நடவடிக்கை, குழந்தைப் பிறந்தது முதலே தொடங்குகிறது; ஆயுள் முடியும் வரை தொடர்கிறது.

ஒவ்வொரு மனிதரும் தான் வளரும், வேலை செய்யும், வாழும், பொருள், சமுதாயச் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகிறார். மனிதனைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழல், குடும்பச் சூழல், சமுதாயச் சார்புகள் ஆகியவை அவரிடம் கல்விப் பெற்றிகளை வாழ்நாள் முழுவதும் ஏற்றுகிறது. நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் கல்வி பெறுவதிலிருந்து தப்ப முடியாது. நம்மைச் சுற்றி இருப்பவைகளிடமிருந்து நாம் பலவும் கற்றுக் கொள்ளுகிறோம். நாம் வாழும், பணி புரியும், சுற்றுச் சார்புகளிலிருந்து கற்றுக் கொள்ளுகிறோம். தாயின் இனிய புன்சிரிப்பு, தந்தையின் பொசுக்கும் சிடுசிடுப்பு, அத்தையின் அன்பான அணைப்பு ஆகிய பொடி விஷயங்களும் கல்விக்கு மூலங்களாக அமைகின்றன.

அன்னையின் தூய புன்முறுவலும் தந்தையின் தீமை கருதாத சிடுசிடுப்பும் கல்வியைத் தருவதாயின், கல்வி எப்போது தொடங்குகிறது. குழந்தை பிறந்தது முதல் கல்வி இயக்கம் தொடங்குகிறது. குறிப்பிட்ட ஒரு வயதை

—அதாவது நாட்டுக்கு நாடு மாறுபடும் பள்ளி வயதை— அடையும் வரையில் கல்வி காத்திருப்பதில்லை.

தொட்டிலில் தொடங்கிய கல்வி பாலர் பள்ளி வகுப்பறைகளில், உணவுக் கூடங்களில், நூல் நிலையங்களில் தொடர்கிறது; விளையாட்டுத் திடல்களில் தொடர்கிறது. அடுத்த நிலைக் கல்வி நிலையங்களில், கல்வி, முறைப் படுத்தப்படுகிறது. பின்னர், இக்கால மனிதனுக்குக் கல்வி வாழ்க்கை முழுவதும் மூச்சாகி விடுகிறது. எனவே கல்வியை சட்டப்படியான பள்ளி வயது வரை தள்ளிப் போடவோ, மானுட வாழ்வின் ஒரு காலத்தோடு கட்டுப் படுத்தவோ இயலாது. நாம், தெரிந்தோ, தெரியாமலோ, வாழ்நாள் முழுவதும் கல்வியைப் பெறுகிறோம்.

மனிதனுக்குத் தந்தை குழந்தையாகும். நல்ல மனிதனை உறுதிப்படுத்த, குழந்தைகளைச் சரியாகப் பராமரித்து, நன் முறையில் வளர்க்க வேண்டும். 'சின்னஞ் சிறு வயதில் பிடித்துக் கொள்,' என்பது கல்விக்கு மிகப் பொருத்தம். வளரும் குழந்தை, கை கால்களைப் பயன்படுத்தவும் ஆடவும் மற்ற, குறிப்பாக, சமவயதுப் பிள்ளைகள் பலரோடு சேர்ந்திருக்கவும் தொடங்கும் போது, குடும்பம் என்னும் சிறிய வட்டம் இக்கட்டாக இருக்கும். சம வயதுடைய பிள்ளைகள் பலரோடு இருக்கவும், அவர்களோடு சேர்ந்து கற்கவும் விளையாடவும் அவர்களோடு பொம்மைகளைப் பங்கிட்டுக் கொள்ளவும் தாராளமான வாய்ப்புகள் தேவைப்படுகின்றன. தங்கள் கண்களைக் கூர்ந்து பார்க்கவும், கைகளைப் பலவற்றைச் சேர்த்துக் கட்டவும் கால்களை விளையாடவும் பயன்படுத்தும் பயிற்சி பின்னர் வரப்போகும் முறையான கல்விக்கு அடித்தளமாகிறது.

பள்ளிக்கு முந்திய கல்விக் கூடங்களில், தூய்மையாக இருக்கவும், பலரோடு ஒத்து இருக்கவும், கவனமாகக் கேட்கவும் தெளிவாகப் பேசவும் எழுதும் படிக்கும் பொருள்களைப் பத்திரமாகக் கையாளவும் கற்றுக் கொள்ளும் பிள்ளைகள், பின்னர் முறையான படிப்பில் முன்னணியில் நிற்பார்கள்.

பாலர் கல்வியின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும், பெற்றோர்களும் உளவியலாரும் குழந்தை மருத்துவர்களும் கல்வியாளர்களும் மேலும் மேலும் உணர்ந்து வருகிறார்கள். அநேக நாடுகளில் இத்தெளிவு, அண்மைக்கால நிகழ்ச்சி யாகும். இக்காலச் சூழ்நிலைக்குத் தேவையான அளவு ஆழ மாக இத்தெளிவைப் பெறாத பல நாடுகள் இன்றும் உள்ளன.

ஜார் ஆண்ட இரஷ்ஷியா, பொது மக்கள் கல்வியை அலட்சியப்படுத்திற்று; எனவே, நாட்டின் பல பக்கங் களிலும் அரசின் சார்பில் தொடக்கப் பள்ளிகள் தொடங் கவில்லை. அந்நிலையில், பள்ளிக்கு முந்திய கல்வி இல்லை யென்றே சொல்லி விடலாம். 1917-இல் நடந்த அக் டோபர் புரட்சிக்கு முன்பு, இரஷ்ஷியா முழுவதிலும் 275 'பாலர் பள்ளி'களே இருந்தன. அவற்றில் 150 கிண்டர் கார்டன் பள்ளிகள்; அப்பள்ளிகளுக்குச் சென் றோர் மொத்தம் நாலாயிரம் பேர்களே. அப்பள்ளிகள், பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, கீவ் போன்ற பெரிய நகரங் களிலேயே பெரும்பாலும் இருந்தன. அவை போக, சில அறக் கட்டளைகள், பாட்டாளிகளின் குழந்தைகளுக்காக, பத்துப் பதினைந்து கிண்டர் கார்டன் பள்ளிகளை நடத்தி வந்தன. அப்போதைய பாலர் பள்ளிகள் நிறையச் சம் பளம் வசூலித்தன. எனவே, வளமான குடும்பங்களுக்கே அவை பயன்பட்டன.

புரட்சிக்கு முன்பு இருந்த 'பால்வாடி'கள் இரண்டு மாத சிசுக்கள் முதல் பத்து வயதுப் பிள்ளைகள் வரையில் சேர்த்துக் கொண்டன. இப்போது செய்வது போல், பிள்ளைகளை வயது வாரியாகப் பிரிக்கவில்லை. ஆறு வய தாகி விட்டால், குழந்தைகள் பெரியவர்களின் வேலை களுக்கு உதவ வேண்டும்.

ஜார் காலத்தில், அப்பள்ளிகளில் நடந்த கல்விப் பணி என்ன? கல்விப் பணியே இல்லை. அவற்றை நடத் திய பெண்கள் அநேகமாக தற்குறிகள். பெரும்பாலும் பைபிள் பாட்டுகள் பாடவே கற்றுக் கொடுத்தார்கள். அதைத் தவிர, குறிப்பிட்ட திட்டம் இல்லை. சிறுவர்

சிறுமியர்களை, மலிவான உழைப்பாளிகளாக ஆயத்தஞ் செய்யும் ஒரே நோக்கத்திற்கே, அவை பயன்பட்டன.

ஜார் கால, பாலர் பள்ளிகளுக்கென்று தனியாகக் கட்டப்பட்ட கட்டடங்களோ அருமை. குடியானவர்களின் வீடுகள் உட்பட எல்லா வகைக் கட்டடங்களும் பயன்படுத்தப்பட்டன. பிரம்படி, வெகு சாதாரணம். அதுவே, அன்றைய சூழல்.

சோவியத் ஆட்சி தொடக்கம் முதல், அரசினுடைய பாலர் பள்ளிகளை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொடங்குவது பற்றிப் பெரும் சிந்தனையும் முயற்சியும் அக்கறையும் செலுத்தியது. இரஷ்ஷியாவின் முற்போக்கு ஆசிரியர்கள், கல்வியாளர்களின் சிந்தனைகளையும் கருத்துகளையும் நிறைய எடுத்துக் கொண்டது.

குழந்தையின் உடலும், அறிவும் பள்ளிக்கு முந்திய பருவத்திலேயே மிக விரைவாக வளர்கின்றன. நம் வாழ்க்கையில் 'மிக பாதிப்பிற்கான ஆண்டுகளில்' நடப்பவை நம் வாழ்க்கைப் போக்கையே முடிவு செய்கிறது என்பதை விஞ்ஞானிகள் காட்டியுள்ளார்கள்.

குழந்தைக்கு மூன்று அல்லது நான்கு வயது முடிவதற்குள், அதன் எதிர்கால அறிவு, ஒழுக்க அடிப்படைகள் முதலியவை அமைந்து விடுகின்றன என்பதை விஞ்ஞான ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. இக்காலத்தில் தான், குழந்தையின் இயற்கை உந்துதல்களையொட்டி, முக்கியமான ஒழுக்க இயல்புகள், சீலம், ஆற்றல்கள் ஆகியவை அமைகின்றன. இப்பருவத்தில் குழந்தை எப்படி வளர்க்கப்படுகிறதோ, அதற்கேற்ப, அதனுடைய எதிர்காலப் பழக்கங்களும் சார்புகளும் உருவாகின்றன. தனது ஆசிரியருடைய செல்வாக்கிற்கு இளம் பிள்ளைகள், பெரிதும் கட்டுப் பட்டிருக்கிறார்கள். குழந்தையின் மேல் ஆசிரியரின் ஆளுமை செலுத்தும் செல்வாக்கைத் தள்ளிவிட்டு, வேறொன்றைப் புகுத்த இயலாது. கற்பிப்போரின் ஆளுமை நேரடியாக செல்வாக்கு கொள்ளுவதன் மூலமே குழந்தையின் ஒழுக்கத்தை வளர்க்க முடியும்.

சோவியத் ஒன்றியம், தனது அமைப்புக்கு மட்டு மல்லாது, வேறு பலவற்றிற்கு, பெரியார் லெனினுடைய எழுச்சியூட்டும் தலைமைக்கும் வழி நடத்தலுக்கும் கடமைப் பட்டிருக்கிறது. இவருடைய பேரறிவில் முளைத்த சிறந்த வற்றுள் ஒன்று, பொதுப் பாலர் பள்ளிகள். சோவியத் நாட்டின் வருங்கால மனிதனை உருவாக்குவதில், பாலர் பள்ளிகள், எவ்வளவு பெரிய பணியாற்றக் கூடும் என் பதை இவர் நன்கு உணர்ந்திருந்தார். நர்சரி பள்ளி களும் கிண்டர் கார்டன் பள்ளிகளும் 'கம்யூனிசப் பசும் தளிர்கள்' என்று லெனின் வர்ணித்தார். 'பெண்களை மெய்யாகவே விடுவிக்கவும் பெண் ஆண் சமத்துவமின் மையைக் குறைத்துக் கொண்டே அடியோடு நீக்கவும் பெண்கள் சமூக உற்பத்திப் பணிகளிலும் பொது வாழ்க் கையிலும் பங்கு கொள்ளவும் உதவும் சாதனங்கள், பாலர் பள்ளிகள்' என்பதை லெனின் கண்டார். எனவே, எல்லா சோவியத் அமைப்புகளும் நிறுவனங்களும் பெண் களும் கிண்டர் கார்டன்களை அமைப்பதில் ஊக்கமான பங்கு கொள்ள வேண்டுமென்று லெனின் விரும்பினர்.

பொது பாலர் பள்ளிகளைப் பற்றிய லெனினுடைய கருத்துகள், சோவியத் ஆட்சியின் முதல் ஆணைகளிலேயே இடம் பெற்றன. 1917-ஆம் ஆண்டு நவம்பர் 9-ஆம் நாள், மக்கள் ஆணை அவை (அமைச்சரவை) கல்வி ஆணை யகம் ஒன்றை நிறுவும் ஆணையைப் பிறப்பித்தது. 1917 நவம்பர் 20-ம் நாளன்று பாலர் கல்வி (பள்ளிக்கு முந் திய கல்வி) பற்றிய அறிவிப்பு வெளியாயிற்று. அவ்வறி விப்பு, கொள்கைகளையும் பின்பற்ற வேண்டிய திசைகளை யும் தெளிவாக வெளியிட்டது. அது, குழந்தை பிறந்த சில மாதங்களிலேயே, குழந்தைக் கல்வி பொதுவில் தொடங் கவேண்டுமென்று காட்டிற்று. இந்த பாலர் கல்வி அதிகப் படியான ஒன்ற? இல்லை; பொதுக் கல்வி முறையில் இணைந்த ஒரு பகுதியாகும். கிண்டர் கார்டன் கல்வி முதல் உயர் கல்வி வரை எல்லா நிலைக் கல்விகளும் ஒன்றிணைந்தவை; ஒன்றோடொன்று தொடர்புடையவை, என்னும் கொள்கை அந்த அறிவிப்பில் உறுதிப்படுத்தப்பட்டது.

நாட்டின் பொருளியல் வளர வளர, மேலும் மேலும் பல பெண்கள் உற்பத்தித் தொழில்களிலும் சமுதாயத் திற்குப் பயன்படும் பணிகளிலும் ஈடுபட்டார்கள். இம் மாற்றங்களையொட்டி, பாலர் பள்ளிகள் பெருகின. இன்று சோவியத் ஒன்றியத்தில் வேலை பார்க்கும் தொழிலாளி கள், அலுவலர்கள் முதலியோரில் பாதிப்பேர் பெண்கள் ஆவார்கள். நுட்பத் திறன்களும் உயர் கல்வி அல்லது தனிப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் பெற்ற தொழிலாளர்களில் நூற்றுக்கு அறுபது விழுக்காட்டினர் பெண்கள். நாட்டின் மருத்துவ, ஆசிரியத் தொழிலில் முக்கால் பங்கினர் பெண்கள். சோவியத் நாட்டில், 1976-ஆம் ஆண்டில், 1 கோடி 15 இலட்சம் பாலர் களுக்குப் பணிபுரியும் 1,15,000 பாலர் பள்ளிகள் இருந் ததால், ஏராளமான பெண்கள் உத்தியோகங்களை ஏற் றுக் கொள்ள முடிந்தது. குழந்தையை வளர்ப்பதில் மூழ்கி விடுவதா அல்லது வேலை பார்க்கப் போவதா என் னும் சிக்கல் சோவியத் தாய்க் குலத்திற்கு ஏற்படுவதில்லை. சோவியத் ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் பாலர் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பும் அளவிற்கு, நர்சரி, கிண்டர் கார்டன் பள்ளிகள் பெருகியுள்ளதால், சோவியத் தாய், வேலையும் பார்த்துக் கொண்டு, பிள்ளை யையும் வளர்த்துக் கொள்ள முடிகிறது. குழந்தைகளைச் செம்மையாகப் பார்த்துக் கொள்வதற்கு அரசே பொறுப்பு ஏற்றுக் கொள்கிறது. தாங்கள் தொழில் புரிந்து கொண் டிருக்கும் போது, தங்கள் குழந்தைகள் நன்றாகப் பரா மரிக்கப்படும்; உரிய வேளைகளில் உணவைப் பெறும்; போதிய கவனிப்பு கிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு சோவியத் தாய்மார்கள் இருக்கிறார்கள்.

நாடு முழுவதிலும் தோன்றிய பாலர் பள்ளிகள், பெண்கள் விடுதலைக்கு உதவி புரிந்தன. பாலர்களை பொது வில் வளர்க்க, மக்கள் வாழ்க்கை முறையை புதிய சம தர்மப் பாதையில் சீரமைக்க, புதிய மனிதனை உருவாக்க, வருங்கால சோஷலிச சமுதாயத்தின் குடி மக்களை நன் முறையில் வளர்க்க, பாலர் பள்ளி முறை பெரிதும் பயன்

படுகிறது. இப்படிக் குழந்தைகளைப் பொதுவில் வளர்ப்ப தால், அக்குழந்தைகளுக்குப் பெற்றோர்பால் உள்ள பாசம் குறைவதில்லை: மாறாக அதிகமாகிறது என்று சோவியத் அனுபவம் காட்டுகிறது.

நடேஸ்டா க்ருப்ஸ்கயா பாலர் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பணி மிகப் பெரியது ஆகும். கற்பிக்கும் கலை பற்றி முன்னோர்கள் எழுதிய சிறந்த நூல்கள் அனைத்தையும் அக்கறையோடு அவர் படித்தார். பாலர் கல்வி பற்றிய நூல்களையும் கற்றார். புரட்சிக்குப் பிந்திய காலத்தில், அவர், மக்கள் கல்வி ஆணையகத்தில் தொண்டாற்றினார். பொது மக்களுடைய 'அறிவையும் இதயத்தையும்' வளர்ப் பதையே, அவர் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண் டிருந்தார். பொதுக் கல்வியென்னும் முழு அமைப்புக்குச் சரியான அடிப்படை, பாலர் கல்வியைச் செம்மையாக அமைப்பதே என்பது அவருடைய கருத்து. பாலர் பள்ளி களின் மையப் பணி, குழந்தையின் உடல் நலத்தையும் உடற் பயிற்சியையும் கவனித்துக் கொள்வதே. எனவே, பாலர் கல்வியில், அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போலவே, உடற் பயிற்சிக்கும் பெரும் பங்கு கொடுக்க வேண்டும்.

பாலர் கல்வியில் விளையாட்டிற்கு எவ்வளவு இடம் உண்டு? நர்சரி, கிண்டர் கார்டன் பள்ளிகளில், விளையாட் டுகள் முக்கியமானவை. விளையாட்டின் வழியாக, பல் வகைப் பணிகளுக்கு குழந்தை பழக்கமாகிறது. அதே நேரத்தில், பாலர் செய்யும் பணிகளை, சமுதாயத்திற்குப் பயன்படும் பணிகளாக்குவதை க்ருப்ஸ்கயா எதிர்த்தார். அவ்வெதிர்ப்பு சரியானதே. பாலர் கல்வி பெறும் குழந்தை களின் இளம் வயதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டு மென்பதை அவர் எடுத்துக் காட்டினார். குழந்தைகளிடம், தொழில் நுட்பங்களில் அக்கறையை வளர்க்க வேண்டு மென்றார்.

குழந்தையின் ஆளுமையை இணைத்து வளர்ப்பதே, பாலர் கல்வியின் நோக்கமாகும். பாலர் பள்ளியிலேயே, கலையுணர்வை வளர்ப்பது, இதற்கு முக்கிய வழியாகும்.

251049

T.577
3117

எனவே, கிண்டர் கார்டன் பள்ளிகள்; குழந்தைகளிடம் அழகானவற்றைப் பார்த்து ரசிக்கும் இயல்பினைப் பேண வேண்டும்; தூண்ட வேண்டும்; கலையுணர்வை எடைபோடும் ஆற்றலையும் தூண்ட வேண்டும். குழந்தைகள் உலகத்தைப் புரிந்து கொள்ளவும் ஒழுக்கத் தன்மைகளைப் பெறவும் நன்னடக்கையில் வளரவும் ஊக்குவிப்பதை, கிண்டர் கார்டன்கள் எந்நேரமும் நினைவில் கொள்ள வேண்டும்.

பாலர் கல்வி பற்றி க்ருப்ஸ்கயா எழுதியது, சோவியத் பாலர் பள்ளிக் கல்விக் கோட்பாட்டிற்கு அடித்தளமாயிற்று.

''மனிதன் தனது அறிவோடு கூட இதயத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நம் சுற்றுச் சார்பில், ஒவ்வொருவருடைய தனி வளர்ச்சியின் மேல், ஒரு புதிய, ஆற்றல்மிக்க, சமதர்ம முறையிலான, பொது விருப்பம் உருவாகும்; அங்கே, 'நான்' என்பதும் 'நாம்' என்பதும் ஒன்ருக இணைந்து விடும்.''

முதல் மக்கள் கல்வி அமைச்சரான அனதோலி லுனசார்ஸ்கியும் கல்விக் கோட்பாடுகளை உருவாக்க உதவினர். பாலர் பள்ளியில் தொண்டாற்றும் கல்வியாளர்கள், பள்ளிக்கு முந்திய வயதுக் குழந்தைகளின் இயல்புகளையும் போக்குகளையும் நன்ருகப் புரிந்து கொண்டு, தங்கள் பணியை ஆக்கக் கண்ணேட்டத்தோடு அணுக வேண்டுமென்னும், அவருடைய கருத்தினை, நாம் முழுமையாகவே ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

'திட்ட வட்டமான நோக்கங்கள் தேவை. என்ன விளைவைப் பெறப் பாடுபடுகிருேம் என்பதும் துல்லியமாகத் தெரிய வேண்டும்' என்று லுனசார்ஸ்கி எழுதினர். அவர் மேலும் கூறுவதாவது:

''பொற்கொல்லர் ஒருவர், செய்யும் நகையைப் பாழாக்கி விட்டால், அதை மீண்டும் சரி செய்து கொள்ளலாம். மணிகள் கெட்டு விட்டால், அவற்றின் அசல் விலையே இழப்பு. ஆனல் மிகப் பெரிய வைரமும் புதிதாகப் பிறந்த குழந்தையின் மதிப்பிற்குத் தாழ்ந்ததே

ஒருவருடைய ஆளுமையைப் பாழாக்குவது அறியாமல் செய்த பிழையாகவோ, பெரிய குற்றமாகவோ ஆகும்.

''எத்தகைய ஆளுமையை நாம் உருவாக்க முயல்கிறோம்? செழுமையாக வளர்ந்த மக்களை நாம் உருவாக்க வேண்டும். குழந்தைகளை முழுமையான ஆளுமை உடையவர்களாகவும் எதிர் காலத்தின் போராட்ட வீரர்களாகவும் வளர்க்க வேண்டும்,'' என்று அனதோலி லுனசார்ஸ்கி எழுதினார்.

பாலர் பள்ளிக் கல்வி, கவனத்திற்குத் தகாத சிறிய விஷயம் என்று சோவியத் விஞ்ஞானிகள் கருதவில்லை. சோவியத் ஒன்றியத்தில் குழந்தைகளை 'சிறு மலர்கள்' என்று கனிவோடு கூறுவார்கள். இச்சிறு மலர்களின் பிரச்சினைகளின் மேல், சோவியத் ஆசிரியர்களும் கல்வி முறை வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் நாட்டம் செலுத்தினார்கள். சோவியத் சமுதாயத்தில், குழந்தைகளே மிகச் செல்வத்திற்குரிய பிரிவினர்கள் ஆவார்கள்.

பாலர் கல்வி முறைக்கு அடித்தளம் அமைப்பதில், சோவியத் விஞ்ஞானிகளும் ஆசிரியர்களும் கூட்டாகப் பணி புரிந்தார்கள். புரட்சியை அடுத்து வந்த சில ஆண்டுகளில், சில நச்சுக் கருத்துகளையும் நஞ்சான உணர்வுகளையும் களைந்தெடுக்க பெரும்பாடு தேவைப்பட்டது. மக்களில் பெரும்பாலோர், கீழ் மட்ட அறிவு வளர்ச்சியினை மட்டுமே பெறக் கூடியவர்கள், மிகச் சிறுபான்மையினரே, படைப்பாற்றலுடைய அறிவு ஈடுபாட்டிற்கு இயற்கையாகத் தகுதியானவர்கள் என்பது, அத்தகைய நச்சுக் கருத்துகளில் ஒன்றாகும். மக்களை இப்படி வேறுபடுத்துவதற்கு உடல் இயல் விஞ்ஞான அடிப்படை இல்லை என்பதை சோவியத் ஆசிரியர்களும் உளவியல் வல்லுநர்களும் மெய்ப்பித்து விட்டார்கள்.

புரட்சிக்கு முன்பு, பள்ளிகளில் இருந்த குறைகளையும் அவை கையாண்ட பயனற்ற பாட முறைகளையும் சோவியத் ஆசிரியர்கள், ஊரறியச் செய்தார்கள். பள்ளிக் கூடக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கும் பழக்கத்தை வளர்க்கும்

பணியை மட்டுமே ஜார் கால ஆசிரியர்கள், கல்விப் பல யாகக் கருதினர்கள். புதிய பாலர் கல்வித் தத்துவமோ குழந்தைகளின் உள - உடற் தன்மைகளைக் கணக்கி கொண்டு, அவர்களின் பொது வளர்ச்சியை வலியுறுத்; கிறது.

கல்வி வளர்ப்பு பற்றிய சோவியத் தத்துவத்திற்கு உயிர் நாடியான கருத்துக்கள் எவை?

உடல் நலத்தோடு கூடிய ஒவ்வொரு குழந்தையின் உள வளர்ச்சிக்கான சக்தி மிகப் பெரிது. சமூகச் சுற்றுச் சார்பும் கல்வியும் குழந்தையின் ஆளுமையை உருவாக்கு வதில் முடிவான பங்கு கொள்கின்றன. இந்த முற்போக்கு மானுடப் பாச, ஜனநாயகக் கருத்துக்கள், விஞ்ஞான அடிப்படையில் தோன்றியவை. இவையே, சோவியத் கல்விக் கோட்பாட்டின் மூலைக் கற்களாகும்.

குழந்தையின் வயதையும் ஒவ்வொரு குழந்தையின் உடல் - உளத் தன்மைகளையும் வாழ்க்கைக்கும் பாலர் பள்ளிக்கும் உள்ள உறவையும், கல்வியாளரின் முக்கிய பாத்திரத்தையும் கூட்டுடைமைக்கும் கூட்டுடைமையிலும் முறையாகக் கல்வி கொடுத்து வளர்ப்பதும் எவ்வளவு முடிவான விளைவுகளையுடையது என்பதையும் கவனத்தில் கொண்டு, 'கிண்டர் கார்டன் பாடத் திட்டம்' போடப் பட்டுள்ளது.

பாலர் பள்ளி நிலையங்கள் எவ்விதம் அமைக்கப்படு கின்றன? பள்ளிக்கு முந்திய கல்வியை இருவகை அமைப் புகளில் பெறலாம்.

நர்சரிகளும் பால் வாடிகளும் ஒரு வகையைச் சேர்ந் தவை. இவை, சில வார வயதுடைய குழந்தை முதல் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளைப் பார்த்துக் கொள் ளும். இவை, குழந்தைகளின் உடல் நலன் பற்றியே பெரி தும் கவனம் செலுத்தும். நர்சரிப் பள்ளிகள், பொது மக்கள் உடல் நலத்துறையின் கண்காணிப்பில் இயங்கும்.

நர்சரிப் பிள்ளைகளை, வயது அடிப்படையில் மூன்று பிரிவுகளாக்குகிறார்கள்.

(1) இரண்டு மாதம் முதல் ஒரு வயது முடிய;

(2) ஓராண்டிலிருந்து ஈராண்டு முடிய;

(3) இரண்டு வயது முதல் மூன்று வயது முடிய.

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி ஆசிரியரும் ஆயாவும் இருப்பார்கள். மிகச் சிறிய வயதினருடைய ஆசிரியை, துணைத் தாதிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மற்ற பிரிவுகளின் ஆசிரியைகள், செகண்டரி ஆசிரியப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதோடு, தாதிப் பணிக்கான, குறுகிய காலப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

கிண்டர் கார்டன்கள் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவை. மூன்று முடிந்து ஏழு முடியாத குழந்தைகளுக்காக, கிண்டர் கார்டன்கள் உள்ளன. இங்குள்ள பிள்ளைகள், வயது அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவார்கள். பொதுக் கல்வி ஆட்சிக் குழுக்கள், தொழிற்கூடங்கள், அரசின் நிறுவனங்கள், கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகள் ஆகியவை, கிண்டர் கார்டன்களை நிறுவி, பராமரிக்கின்றன.

கிண்டர் கார்டனில் குழந்தையின் தாய் மொழியின் வழியாகவே எல்லாப் பணிகளும் நடக்கின்றன. கிண்டர் கார்டன், சாதாரணமாக, ஒன்பது மணி முதல் பத்து மணி வரை வேலை செய்யும். இது, தொழிற் சாலைகளில் நிலவும் எட்டு மணி நேர வேலை நாளுக்குப் பொருத்தமாக உள்ளது. இதனால், பெற்றோர்கள் வேலையை முடித்து விட்டு, வீடு திரும்பும் போது குழந்தைகளை அழைத்துச் செல்லப் போதிய நேரம் கிடைக்கிறது.

இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் கிண்டர் கார்டன் பள்ளிகளும் உள்ளன. இரவு நேர வேலையில் ஈடுபட்டுள்ள பெற்றோர்களுக்கு உதவியாக இவை உள்ளன.

ஒன்பது அல்லது பத்து மணி நேரம் தங்கும் குழந்தைகளுக்குப் பள்ளியில் மூன்று வேளைச் சாப்பாடு உண்டு. அதற்கு மேலும் தங்க வேண்டியவர்களுக்கு, நான்கு வேளை உணவு உண்டு.

உடலின் தேவைகளான போதிய ஓய்வு, விளையாட்டு நேரங்கள், செயல்பாடுகளில் மாற்றம் முதலியவற்றைக் கொடுக்கும் முறையில், பாலர் பள்ளிகளின் வேலை நடக்கிறது. நாள் தோறும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலையைச் செய்யும் பழக்கம், தேவையான சுகாதாரப் பழக்கங்களையும் பண்பாட்டையும் வளர்க்கத் துணையாகிறது.

குழந்தைகளின் உடல் நலத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் இன்றியமையாத, நடுப்பகல் தூக்கம் உட்பட, போதிய ஓய்வு, இரவுத் தூக்கம், சமப்படுத்தப்பட்ட சத்தான உணவு, ஆகியவை நர்சரிகளிலும் கிண்டர் கார்டன்களிலும் கொடுக்கப்படுகின்றன. குழந்தை மருத்துவர் ஒருவரும் எப்போதும் இருப்பார்.

பிறர் உதவியின்றி, தானே உண்பதற்கு, கிண்டர் கார்டன் குழந்தைக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். தானே கைகால்களைக் கழுவிக் கொள்ளவும் உடை போட்டுக் கொள்ளவும் பழகிக் கொள்ளுகிறது. தன்னுடைய பொருள்களைத் துப்புரவாகவும் ஒழுங்காகவும் வைத்துக் கொள்ளப் பயிற்சி பெறுகிறது. தன் படுக்கையைப் போட்டுக் கொள்ளவும் பொம்மைகளைப் பாதுகாக்கவும் தெரிந்து கொள்ளுகிறது. குழந்தையிடம், நல்ல பழக்க வழக்கங்களை வளர்க்கும் பொருட்டு இவை இடம் பெறுகின்றன.

நாளைக்கு மூன்று அல்லது நான்கு மணிகள், திறந்த வெளியில், விளையாட்டுகளில் கழிகின்றன. அவ்வமயம் குழந்தைகள், திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் நட்பின் மதிப்பை உணரவும் சேர்ந்து விளையாடுவதின் சிறப்பை அறியவும் ஆசிரியர்கள் உதவி செய்கிறார்கள். பாட நேரங்களில், சரியான உச்சரிப்பு, எண்மானம், படம் வரைதல், கட்டைகளைக் கொண்டு பலவற்றைக் கட்டுதல், பாடுதல், பண்ணுக்கேற்ப இயங்குதல், பொதுவாகத் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைத் தெரிந்து கொள்ளல் ஆகியவற்றை கற்றுக் கொள்ளுகிறார்கள்.

கிண்டர் கார்டன் பிள்ளைகளுக்கு, பள்ளிக்கூடம் போக வேண்டுமென்னும் விருப்பம் எளிதாக ஏற்படுகிறது;

அக்குழந்தைகள் கவர்ச்சியானவைகளை மட்டுமல்லாது தேவையானவைகளையும் கற்றுக் கொள்கின்றன.

குழந்தைக் கல்வியும் வளர்ப்பும் தனி ஆள் அடிப் படையில் நடக்கிறது. இரண்டு வயதுக் குழந்தைகள், விளையாட்டுகளிலும் பிற செயல்களிலும் ஈடுபடும் போது, அவ்வயதினரை, சிறுச் சிறு குழுக்களாகப் பிரித்து விடுவார்கள். மூத்த பிள்ளைகளின் முயற்சிகள் முழுக் குழு அடிப்படையில் நிகழும்.

பாலர் கல்வி நிலையங்களுக்குச் சென்றவர்கள், சாதாரணப் பள்ளியில், முதல் வகுப்பில் சேரும்போது சராசரி அறிவிலும், உடலிலும் மற்றவர்களைக் காட்டிலும், அதிகம் வளர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை மதிப்பீடுகள் காட்டுகின்றன.

கிண்டர் கார்டன் கல்வியின் நோக்கங்கள் வருமாறு:

(1) குழந்தையின் உடல் நலத்தையும் வளர்ச்சியையும் கவனித்தல்;

(2) விரும்பத்தக்க நன்னடத்தைக்குக் கடைக்கால் போடுதல்;

குழு அடிப்படையில் விளையாடல், வேலை செய்தல், ஒருவருக்கொருவர் உதவுதல், ஆகியவற்றால் பொதுமை உணர்ச்சியும் அரும்புகிறது; பெற்றோரிடமும் மூத்தோரிடமும் மரியாதை, தாய் நாட்டுப்பற்று; இவை அனைத்தும் நன்னடத்தைக் கூறுகளாகும்;

(3) சின்னஞ்சிறு பணிகளில் ஆசிரியர்களுக்கு உதவுவதால், செடிகளையும் விருப்பமான பட்சிகளையும் மிருகங்களையும் பராமரிப்பதால், வேலைத் திறன்களின் தொடக்கத்தைப் பெறுதல்;

(4) அறிவு, புலன்களின் வளர்ச்சி;

(5) தாய் மொழியில் சரியான உச்சரிப்போடு தெளிவாகப் பேசுதல்;

(6) இரசிகத் தன்மையை வளர்த்தல்;

(7) முறையான கல்விக்கு ஆயத்தப் படுத்தல்.

குழந்தைகளின் உடல், அறிவு வளர்ச்சிக்கும் அவற்றின் சீரிய இயல்புகள் உருவாவதற்கும் நர்சரிகளும் கிண்டர் கார்டன்களும் ஆற்றி வரும் பணி, மெய்யாகவே, மகத்தானது. இவற்றின் செல்வாக்கு, தாய்மார்களின் வாழ்க்கையையும் மாற்றியமைக்கிறது. எண்ணற்ற பாலர் பள்ளிகள் இருப்பதால், குழந்தை பராமரிப்புக்கான பல்வேறு அன்றாட உளைச்சல்களிலிருந்து, தாய்மார்கள் விடுவிக்கப் படுகிறார்கள். அதனால், தாய்மார்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட முடிகிறது. குழந்தையிடம், வீட்டு வேலைகளை மட்டுமே செய்யும் தாயின் செல்வாக்கை விட, தொழில் புரியும் தாயின் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது.

பாலர் பள்ளியில் குழந்தையொன்றுக்கு மாதமொன்றிற்கு 40 ரூபிள்களை அரசு செலவு செய்கிறது. ஆனால் பெற்றோர் கட்ட வேண்டிய தொகை, மாதத்திற்கு ஆறு முதல் பன்னிரண்டு ரூபிள்களுக்குள் அடங்கும். இப்பள்ளிகளில் கொடுக்கும் உணவுக்குக் கூட இத்தொகை போதாது. ஆயினும் பல குழந்தைகளையுடைய தாய்மார்கள், இதுவும் கட்டத் தேவையில்லை.

பாலர் பள்ளிகளால் ஏற்படும் கல்வி நலன்களும் எதார்த்த வாழ்க்கைக்குக் கிடைக்கும் உதவியும் சேர்ந்து, நர்சரி, கிண்டர் கார்டன்களில் இடத்திற்குக் கிராக்கியை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலைக் கல்விக்கான வசதிகளை, சோவியத் ஆட்சி தொடர்ந்து பெருமளவு வளர்த்து வருகிறது. 1976 இல் 1 கோடியே 15 இலட்சம் பேர்கள் நர்சரிகளுக்கும் கிண்டர் கார்டன்களுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். மேலும் 30 இலட்சம் குழந்தைகள், நாட்டுப்புறங்களில் ஒவ்வோர் ஆண்டும் அறுவடைக் காலங்களில் தோன்றும் பருவகால பாலர் பள்ளிகளுக்குச் செல்லுகிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு, பாலர் பள்ளிகளுக்கு அதிக இட வசதி செய்ய நிதி ஒதுக்குகிறார்கள். 1980 ஆம் ஆண்டிற்குள், கிண்டர் கார்டன்களில், 28 இலட்சம் இடங்களை அதிகப்படுத்த, இப்போதைய திட்டம் ஏற்பாடு செய்துள்ளது.

குடும்பத்தின் இடத்தைப் பிடித்துக் கொள்ள, சோவி த் நர்சரிகளும் கிண்டர் கார்டன்களும் முயலவில்லை என் றதை இங்கே தெளிவுபடுத்த வேண்டும். அதற்கு மாறாக, டும்பத்தின் கல்வி முயற்சிகளுக்குத் துணை நிற்கின் ன. குடும்பத்திற்கும் பாலர் பள்ளிக்குமிடையே உள்ள றவு நெருக்கமானது; நேசமானது. குழந்தைகளிடம் அணுகுமுறை பற்றி, கிண்டர் கார்டன்களும் குடும்பங் களும் கலந்து ஆலோசிக்கின்றன; ஒன்றுக்கு ஒன்று ஒத் துழைக்கின்றது. ஒரே வகையில் அணுகுவதின் முக்கியத் துவத்தை இரு அமைப்புகளும் உணர்கின்றன. குடும் பத்திற்கும் பாலர் பள்ளிகளுக்குமிடையில் ஆன உறவு மேலும் மேலும் நெருக்கமாகிறது. ஒன்றை ஒன்று மேலும் மேலும் அதிகமாக ஆதரிக்கின்றன. இவற்றால், குழந் தைகள், அறிவு கூர்மையுடையவர்களாகவும் அன்புடை யவர்களாகவும் சிறந்த குடிமக்களாகவும் வளரக்கூடிய சூழ்நிலையுள்ள ஒரு சமுதாயத்தைப் பற்றிய கனவு விரை வில் நிறைவேறுமென்னும் நம்பிக்கை ஏற்படுகிறது.

---

# பொதுவான உயர்நிலைப் பள்ளிப் படிப்பு

வெகுவாகப் பரவியுள்ள பாலர் கல்வி, மாணுக்கர்களை அடுத்த நிலைக் கல்விக்கு ஆயத்தப்படுத்துகிறது. இந்நிலையில் மூன்று வகைப் பள்ளிகள் அடங்கியுள்ளன.

முதல் மூன்று படிவங்களை மட்டும் உடையவை, தொடக்கப் பள்ளிகள். இவை ஒரு வகை.

முதல் படிவம் முதல் எட்டாம் படிவம் வரை உள்ளவை, முழுமை பெருத உயர்நிலைப் பள்ளிகள். இவை இரண்டாம் வகை.

மூன்ரும் வகையில், முதல் படிவம் முதல் பத்தாம் படிவம் வரை உள்ள பொதுவான உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் சேரும்.

இம்மூன்று வகைப் பள்ளிகளும் ஒன்றிணைந்த ஒரே பாடத் திட்டத்தைப் பின்பற்றுகின்றன. எனவே ஒரு வகைப் பள்ளியிலிருந்து மற்ருெரு வகைப் பள்ளிக்கு மாறுவதில் எத்தகைய சிக்கலும் இல்லை.

தொடக்கப் பள்ளியில் ஆனுலும் முழுமை பெருத அல்லது பெற்ற பொதுவான உயர்நிலைப் பள்ளியில் ஆனுலும் முறையான கல்வி, ஏழாவது வயது நிரம்பியதும் தொடங்குகிறது. முதல் படிவம் முதல் மிக உயர்ந்த பல்கலைக் கழக அல்லது அதற்கு இணையான படிப்பு வரை, கல்வி இலவசம்.

பல்லாண்டுகளாக, எல்லாக் குழந்தைகளுக்கும் எட்டாம் படிவம் வரை, கல்வி கட்டாயமாக இருந்தது. இப்போது பத்தாவது வரை கட்டாயம் நீளுகிறது.

சோவியத் பள்ளியில் ஒரு வகுப்பு எவ்வளவு பெரியது? தொடக்கப் பள்ளிகளில் பிரிவுக்கு நாற்பது மாணுக்கருக்கு மேல் இருக்கக் கூடாது. உயர்நிலைப் பள்ளிகளில் பிரிவிற்கு முப்பத்தைந்திற்கு மேற்படக் கூடாது. தொலை தூரங்களிலும் மலைப் பகுதிகளிலும் எட்டியுள்ள ஊர்களுக்கு மேற்படி அளவுகோலைக் காட்டி, தொடக்கப் பள்ளி நிறுவுவதைத் தடுப்பதில்லை. பல பத்தாயிரக் கணக்கான பள்ளிகள், இருபதுக்கும் குறைந்த சேர்க்கையோடு ஓர் ஆசிரியரை மட்டும் கொண்டு நடந்து வருகின்றன.

சோவியத் பள்ளிகளில் பாடம் கற்பித்தல் எம்முறையில் அமைந்துள்ளது? எல்லாப் பாடங்களுக்கும் ஒரே வகுப்பாசிரியர் என்னும் அடிப்படையிலா? ஒவ்வொரு பாடத்திற்கு ஓவ்வோர் ஆசிரியர் என்னும் அடிப்படையிலா? இரு முறைகளும் நடைமுறையில் உள்ளன. தொடக்கப் படிவங்களில் ஓர் ஆசிரியரே எல்லாப் பாடங்களையும் நடத்துகிருர். ஆண்டுக்கு ஆண்டு அதே பிரிவோடு மேல் வகுப்பிற்குச் செல்வார். தன் மாணுக்கர் தொடக்கப் பள்ளியைத் தாண்டும் வரை, ஒரே பிரிவோடு ஆசிரியர் செல்வார். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் இசையில் பயிற்சி பெற்றவர்கள். என்ருலும் இசை ஆசிரியர் தனியாக இருப்பார்.

தொடக்கப் படிவங்களுக்கு மேல், பாடத்திற்கோர் ஆசிரியர் என்னும் முறையைப் பின்பற்றுகிருர்கள். பாட ஆசிரியரும் தன் வகுப்பு அடுத்த படிவத்திற்குப் போகும் போது, அவ்வகுப்போடு செல்வார்.

சோவியத் பள்ளி ஆசிரியர்களின் தகுதிகள் என்ன? தொடக்கப் படிவ ஆசிரியர்கள், எட்டாண்டு பொதுக் கல்வியில் தேர்ச்சி பெற்ற பின், நான்காண்டு ஆசிரியப் பயிற்சி பெறுகிருர்கள். பத்தாண்டு படித்துத் தேர்ச்சி அடைந்தவர்கள் ஈராண்டு ஆசிரியப் பயிற்சி பெறுகிருர்கள். தொடக்கப் படிவங்களுக்கு மேற்பட்ட படிவங்களில் பாடம் சொல்லும் ஆசிரியர்கள் பல்கலைக் கழகங்களிலோ அவற்றிற்குச் சமமான ஆசிரியப் பயிற்சிக் கழகங்களிலோ

பட்டம் பெற்றவர்கள் ஆவார்கள். இத்தகையோரை 'உயர் மட்ட தகுதி பெற்ற ஆசிரியர்கள்' என்று குறிப்பிடுகிறார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் தகுதியையும் மேல் வகுப்பு ஆசிரியர்களின் தகுதி அளவிற்கு உயர்த்துவதற்கு, கல்வி வளர்ச்சி திட்டத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

வளர்ச்சித் திட்டங்களில், பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு மிக முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள்.

போதுமான, பொருத்தமான, பள்ளிக்கூட தளவாடங்களும் பாடத்துணைக் கருவிகளும் இருந்தால்தான், கல்வி முயற்சி கைகூடும். ஆகவே, போதுமான தளவாடங்களையும் விஞ்ஞான ஆய்வுக்கூடங்களையும் தொழிற்கூடங்களையும் காட்சிக் கேள்வி துணைக் கருவிகளையும் கொடுப்பதில் போதுமான கவனம் செலுத்தப்படுகிறது.

ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே ஆய்வுகளை நடத்துவதற்கு வேண்டிய அளவு கருவிகளைக் கொண்ட விஞ்ஞான ஆய்வுக்கூடங்களை நிறுவுவதே, சோவியத் ஆசிரியர்களின் நோக்கமாகும். ஒவ்வொரு பள்ளியிலும் அருமையான பூகோள படங்களும் விளக்க அட்டவணைகளும் நிறைந்துள்ளன. பள்ளிப் பணியில் நூலகத்திற்கு முக்கிய இடம் உண்டு. சோவியத் பள்ளிகளில், வெவ்வேறு வயதினருக்கு ஏற்ற நூல்கள் நிறைந்துள்ளன. இளம் பிள்ளைகளாக இருக்கும்போதே, படிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் சோவியத் கல்வியாளர்கள் உணர்ந்துள்ளார்கள். சோவியத் ஒன்றியம், இளைஞர்களுக்காக, ஏராளமான சஞ்சிகைகளை வெளியிடுவதன் மூலம், இவ்வுணர்விற்கு உருக் கொடுத்துவிட்டது. எல்லாப் பள்ளிகளிலும் இவற்றில் பல கிடைக்கும். பள்ளி நூலகத்தில் பயிற்சி பெற்ற நூலகரும் இரண்டொரு உதவியாளரும் பணி புரிவார்கள். சோவியத் பள்ளிகள் ஏதாவதொரு அயல் நாட்டு மொழியை கற்றுக் கொடுக்க வேண்டும். ஆகவே, பள்ளி நூலகங்களில்

அயல் மொழிகளில் நூல்கள் உண்டு. இத்தகைய நூலக வசதியைப் பள்ளிப் பிள்ளைகள் நன்றாகப் பயன்படுத்து கிறார்கள்.

சோவியத் ஒன்றியம் முழுவதிலும் கல்வியாண்டு செப்டம்பர் முதல் தேதி தொடங்குகிறது. இந்நாள் தனிச் சிறப்புடையது. அன்று எல்லாக் குழந்தைகளும் தங்கள் ஆசிரியர்களுக்கு மலர்களைக் கொண்டு வருவா கள். மாணுக்கர் காட்டும் பாசத்தை பள்ளி ஆசிரியர் களும் இயக்குநர்களும் காட்டுகிறார்கள். பள்ளியின் இயக்கு நரும் அவருடைய ஆசிரியர்களும் மாணுக்கர்களை நுழை வாயிலில் சந்தித்து வரவேற்பார்கள். குழந்தைகளுக்கு பள்ளியில் அன்பான வரவேற்பு உண்டு.

முதல் எட்டு படிவங்களின் பள்ளியாண்டை நான்கு பருவங்களாகப் பிரிக்கிறார்கள். ஒன்பது பத்து படிவங்கள் இரு அரையாண்டு என்னும் முறையில் நடக்கின்றன.

முதல் நான்கு படிவங்களின் பள்ளியாண்டு மே மாதம் 31 ஆம் நாள் முடிகிறது. ஐந்து முதல் ஏழு படிவம் வரை, ஜூன் 19 ஆம் நாள், ஆண்டு முடிகிறது. மற்றப் படிவங்களுக்கு ஜூன் 25 ஆம் நாள் முடிகிறது.

ஒரு பாட நேரம் 45 நிமிடங்கள். பாட நேரங் களுக்கிடையில் பத்து நிமிட இடைவேளை உண்டு. தொடக் கப் படிவங்களில் மூலாதாரக் கல்வியே உண்டு. வாரத் திற்கு இருபத்திரண்டு பாடங்கள் நடக்கும்.

தொடக்கப் பள்ளியில், தாய் மொழியே முக்கிய மாகக் கற்கும் பாடம். மாணுக்கர்கள் படிக்கவும் எழு தவும் கற்றுக் கொள்ளுகிறார்கள். பேசப் பயிற்றுவிக்கும் பாடங்களும் உண்டு. இரஷ்ஷியரல்லாத மக்கள் வாழும் பகுதிகளில், இரஷ்ஷிய மொழியை மூன்றாம் படிவத்தி லிருந்து, விருப்பப் பாடமாகக் கற்பிக்கிறார்கள். பாட நேரத்தில் கிட்டத்தட்ட பாதி, மொழிகள் கற்பதற்கு ஒதுக்கப்படுகிறது.

தொடக்கப் பள்ளிகளில் நாள்தோறும் ஒரு கணக்குப் பிரீயட் உண்டு. வாரத்திற்கு ஒரு பிரீயட் சித்திரத்திற்

கும் இசைக்கும் தனித்தனியே கொடுக்கிறார்கள். வாரத்திற்கு இரு பிரீயட்டுகள் உடற் பயிற்சிக்கு, அத்தனை கைவேலைக்கும். நான்காம் படிவத்தில், இயற்கை விஞ்ஞானத்தில் இரு பாடங்களும் வரலாற்றில் இரு பாடங்களும் நடக்கும்.

சோவியத் ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், மாணாக்கர்களின் புரிந்து கொள்ளும் ஆற்றலை வளர்க்கின்றன; எப்படிக் கற்பது என்பதைச் சொல்லிக் கொடுக்கின்றன. மாணாக்கர் ஒழுக்கத்திலும் உள்ளுணர்விலும் வளரத் துணை நிற்கிறது. குழந்தை, கற்றுக் கொள்ளும் உயிர் மட்டுமல்ல; செயல்படும் பொறியுமாகும். குழந்தையின் எல்லாக் கூறுகளையும் முழுமையாக வளர்க்க முயலும் எந்த நல்ல கல்வி முறையும், மாணாக்கரிடம் நல்ல தொழிற் பழக்கங்களையும், உழைப்பைப் பற்றிய சரியான போக்கையும் வளர்ப்பதற்குப் போதுமான வாய்ப்புகளைத் தர வேண்டும். சோஷலிச சமுதாயத்தில் உழைப்பு கடமை மட்டுமல்ல, ஒவ்வொருவருடைய மதிப்பும் அதில் அடங்கியுள்ளது. முதல் படிவத்திலிருந்தே, வேலையைப் பற்றிப் படைப்புப் போக்கினை பதிய வைப்பதன் முக்கியத்துவத்தை இது கோடிட்டுக் காட்டுகிறது. பிற்காலத்தில் சமுதாயத்தின் நலனுக்காக நன்றாக உழைப்பதற்காக, இப்போது கற்க வேண்டுமென்று, ஒவ்வொரு மாணவரும் தெரிந்து கொள்ள வேண்டும். உழைப்பினால் தான் மக்களுக்கு தேவையானவை கிடைக்கின்றன; சமுதாயத்திற்குப் பயன்படும் எல்லா வேலைகளும் பெருமைக்குரியன; ஆகவே, வேலையில் சுணங்குவது அவமானம். இவ்வுண்மையை ஒவ்வொரு மாணவருக்கும் புலப்படுத்த வேண்டும். இது எல்லா வேலைகளுக்கும்—பாடங் கற்றலுக்கும்—பொருந்தும். எனவே, தொடக்கப் பள்ளிக்கூட பாடத்திட்டத்தில் மாணாக்கர் செய்ய வேண்டிய பல பணிகளும் சேர்ந்துள்ளன. வகுப்பறைத் துப்புரவு, சுகாதாரப் பணி, செடித் தொட்டிகளில் நீர் ஊற்றல் முதலியவை சிலவாகும். மூன்றாம் படிவத்திலிருந்து, பள்ளிக்கூட உணவுக் கூடத்திலும் தோட்டத்திலும் பணிப்பயிற்சி பெறுகிறார்கள்.

இயற்கை, நல்ல நூல்கள், இசை, படக்கலை ஆகிய வற்றை இரசிக்க, தொடக்க வகுப்புகளில் கற்றுக் கொள்ளுகிறார்கள். மேலும் ஒழுங்கு, சீர்மை, மரியாதை, தெருவிலும், நான்கு பேர் நடுவிலும் சரியாக நடந்து கொள்ளுதல் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளுகிறார்கள். எட்டாவது படித்து முடித்தவர்கள் முழுப் பொருளில் எழுத்தறிவு பெற்றவர்கள் ஆகும் வகையில் பாடத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. புற உலகை இயக்கும் விஞ்ஞான விதிகளும் சமுதாயப் பரிணாமமும் பற்றிய அறிவு மாணவர்களின் அறிவின் இன்றியமையாத பகுதியாக இருக்க வேண்டும்.

தொடக்க வகுப்புகளுக்கு மேற்பட்ட படிவங்களில் இயற்கை பற்றியும் சமுதாய இயல் பற்றியும் படிக்கிறார்கள்; தொழில் நுட்பக் கல்வி தொடங்குகிறது. கைவேலை, உடற் பயிற்சி, சித்திரக் கலை ஆகியவற்றோடு லோகாயுத கண்ணோட்டத்தின் மூலாதாரங்கள் கற்பிக்கப்படுகின்றன.

தொடக்கக் கல்விக்கு மேற்பட்ட நிலைக்கான பாடத் திட்டத்தில், தாய்மொழி, இலக்கியம், இரஷ்ஷிய மொழியும் இலக்கியமும், பௌதீகம், கணிதம், வேதியல், உயிரியல், வரலாறு, பூகோளம், அயல்மொழி, படம் வரைதல், வரை படம் எழுதுதல், பாடுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. ஐந்தாம் ஆண்டிலிருந்து அயல் மொழியைக் கற்பிக்கிறார்கள்.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளைப் பற்றிய பொது அறிவைப் பெறவும் சமுதாய உணர்வை வளர்க்கவும் நாட்டின் ஆட்சியிலும் சமுதாய வாழ்விலும் செயல்படுவதற்கு ஆயத்தம் செய்யவும் ஆன வகையில், எட்டாண்டு பள்ளிகளின் மானிட இயல் பாடங்கள் அமைந்துள்ளன.

வரலாற்றுப் பாடத் திட்டம், வரலாற்று இயக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவதிலும் பொது மக்களின் முடிவான பங்கினைச் சுட்டிக் காட்டுவதிலும் நாட்டம் செலுத்தும். அதோடு, சமுதாயப் பொருளியல் அமைப்புகளில்

ஏற்படும் மாற்றங்களைத் தெளிவுபடுத்தும். உழைப்பால் உருவான எல்லாவற்றின் மேலும் மதிப்பை வளர்த்து, பல தலைமுறைகளாக நிகழும் போராட்டங்களைக் காட்டி, மாணுக்கரிடம் சீரிய அவாக்களைத் தூண்டும்.

சோவியத் ஒன்றியத்தில், பொதுக் கல்வி முறையோடு, தொழில் நுட்பக் கல்வியும் இரண்டறக் கலந்துள்ளது. ஆங்கில மொழியில், சாதாரணமாக, 'தொழில் நுட்ப இயல்' என்னும் போது கொள்ளும் பொருளை, சோவியத் சூழ்நிலையில் கொள்ளக் கூடாது. அடிப்படையான பொதுக் கல்வியைப் பெற்ற பிறகு பெறும் ஒரு நிலைப் பயிற்சியையே, 'தொழில் நுட்பக் கல்வி' என்னும் ஆங்கிலச் சொற்றொடர் குறிக்கிறது. சோவியத் கல்வி முறையில், இது பொதுக் கல்வியில் ஒன்றிய ஒரு பகுதியாகும். பொதுக் கல்வியின் இப்பகுதி இல்லா விட்டால் கல்வி குறைவுடையதாகும்.

சோவியத் ஒன்றியத்தில், தொழில் நுட்பக் கல்வியின் மூலம், படிப்பு, சமுதாய வாழ்க்கையோடு நெருக்கமாகப் பின்னப்படுகிறது. இத்தொழிற் பயிற்சி, வேளாண்மை, தொழில், உற்பத்தியின் அடிப்படைகளைக் கற்றுக் கொடுப்பதோடு, கருவி கரணங்களைக் கையாளப் பயிற்சி கொடுக்கிறது. மாணுக்கரின் வயது, அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள பயிற்சி, அக்கம் பக்கத்தில் உள்ள தொழில்கள், ஆகியவற்றையொட்டி, பள்ளியில் நடக்கும் வேலையின் அளவும் தன்மையும் மாறுபடும். பள்ளிகளிலும் தொழிற் கூடங்களிலும் பெறும் பல்வகைத் தொழிற் பயிற்சியோடு சமுதாயத்திற்கான பிற தொண்டுகளை ஆற்றிப் பழகுகிறார்கள். சமுதாயத்திற்குப் பயன்படும் தொண்டுகளை மேற்கொள்வதால், குடி மக்களின் கடமைகளைக் கற்றுக் கொள்ளத் தொடங்குகிறார்கள்.

கல்வி, வெறும் ஏட்டுப் படிப்பாக இருந்து, செயல்களிலிருந்து விலகி விடும் போது, 'கருத்தால்' உழைப்பதற்கும் 'கரத்தால்' உழைப்பதற்கும் இடையே பெரு வெளி, செயற்கையாக ஏற்பட்டு விடுகிறது. உற்பத்திகள்

அனைத்திற்கும் வேரான உழைப்பை மதிக்கக் கற்றுக் கொடுப்பது, கல்வியின் கடமையாகும். சோவியத் சமுதாயம், மூளை உழைப்பையும் உடல் உழைப்பையும் சமமாகவே மதிக்கிறது. எனவே, உழைப்பின் மேல் அன்பு என்னும் நறுங் காற்றையே, சோவியத் மாணாக்கர்கள் சுவாசிக்கிறார்கள். தொடக்கப் படிவங்களுக்கு மேல், எல்லா மாணவர்களுமே விதிக்கப்பட்ட அளவு தொழிற் பயிற்சி பெறுகிறார்கள். இதனால் சோவியத் நாட்டில், உயர்நிலைப் பள்ளி மாணாக்கர்களை வாழ்க்கைக்குப் போதிய அளவு ஆயத்தம் செய்வதோடு, ஒவ்வொருவருடைய திறன்களையும் ஆற்றல்களையும் வளர்த்து, அவர்கள் சமுதாயத்தில் பயனுள்ள மக்களாக வாழ வகை செய்கிறது.

முழுமையான உயர்நிலைப் பள்ளிகள், மாணாக்கருக்குத் தேவையான அறிவைக் கொடுக்கிறது; அதோடு, கற்கும் பழக்கத்தை வளர்க்கிறது; உயர் கல்வியைத் தொடங்க ஆயத்தம் செய்கிறது. மேல் வகுப்புகளின் பாடத் திட்டத்தில், இலக்கியம், வரலாறு, சமூக இயல், பொருளியல், பூகோளம், அயல் மொழியொன்று, கணிதம், பௌதிகம், வேதியல், வான நூல், உயிரியல், வரை படம் போடுதல், உடற் பயிற்சி ஆகியவை சேர்ந்துள்ளன. ஏட்டறிவைச் செயல்படுத்துவதைப் பற்றி, இந்நிலையில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். ஒவ்வொரு பாடத்திலும் கடைசியாகக் கண்டு பிடித்தவைகளை, சோவியத் விஞ்ஞானிகளும் கல்விக்கலை வல்லுநர்களும் விழிப்பாகக் கவனித்து வருகிறார்கள். நடைமுறையில் உள்ள கற்பிக்கும் முறைகளின் பலன்களையும் கூர்ந்து ஆராய்கிறார்கள். இவற்றின் அடிப்படையில், பாடத் திட்டங்களை மறு பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கிறார்கள். பாடத் திட்ட மாற்றங்களைத் தூண்டுவதிலும் மதிப்பிடுவதிலும் மறு பரிசீலனை செய்வதிலும் மாஸ்கோவில் உள்ள, கல்வி விஞ்ஞானக் கழகத்தின் பங்கு பெரிதாகும்.

சோவியத் ஒன்றியத்தில், கல்வி, மக்கள் அனைவருடைய முதல் கவனத்தைப் பெற்றுள்ளது. கல்வித் திட்டத்திலும் தங்கள் குழந்தைகளின் கல்வியிலும் சோவியத்

மக்கள் அனைவரும் காட்டும் அக்கறை, அவர்களுடைய வாழ்க்கை முறையோடு இணைந்து விட்டது.

சோவியத் மக்கள் தங்கள் பள்ளிகளிடமும் ஆசிரியர்கள் கல்வியாளரிடமும் காட்டும் அக்கறையும் மதிப்பும் வெளி நாட்டுக் கல்வியாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து சோவியத் ஒன்றியத்திற்கு வந்த ஆசிரியர் குழுவில் ஒருவராகிய, லாரென்ஸ்.ஜி. டெர்திக் என்பவர், ''நாட்டு முன்னேற்றத்திற்கு வழியாக, கல்வியின்பால், சோவியத் நாடு முழுவதும் வெளிப்படும் ஈடுபாட்டின் அளவையை நாங்கள் எதிர் பார்க்கவே இல்லை. எங்கு சென்றாலும் கல்வியின்பால் உள்ள முழு ஈடுபாட்டிற்கு சான்றின் மேல் சான்றுகளையே கண்டோம். இதனால், நாங்கள் பெற்ற உணர்ச்சிகளில் பெரிதானது, வியப்பே,'' என்று எழுதினர்.

இந்நூலாசிரியரும் சோவியத் ஒன்றியத்திற்குச் சென்ற போதெல்லாம், 'கல்விக்காக எல்லாம்', என்னும் முழு ஈடுபாட்டினை உணர நேர்ந்தது.

சோவியத் கல்வி எவ்வளவு நன்றாக இருக்கிறது என்னும் கேள்வியே பலருடைய எண்ணத்தில் முன்னே பிறக்கும். பிரிட்டானியா கலைக் களஞ்சியத்தின் ஆசிரியர்க் குழுத் தலைவரும் வெளியீட்டாளருமான வில்லியம் பென்டன், இதற்குப் பதில் சொல்லட்டும்.

சோவியத் நாட்டைச் சுற்றிப் பார்த்த வில்லியம் பென்டன், 'சோவியத் ஒன்றியத்தில் கற்பிப்போரும் கற்போரும்' என்னும் தலைப்பில் கொடுத்த தனி அறிக்கையில் பின் வருமாறு கூறுகிறார்:

''ஆம். அது நன்றாயிருக்கிறது;—உண்மையில் மிக நன்றாயிருக்கிறது. மேலும் நன்றாகிக் கொண்டிருக்கிறது என்றே நான் பதில் கூறுவேன். சோவியத் கல்வித் துறையில் பெற்றுள்ள முன்னேற்றம், அமெரிக்கக் கனவிற்கு அறை கூவல் விடுகிறது. அக்கனவாவது, ஒவ்வொரு பையனும் பெண்ணும் தனது திறமைக்கேற்ற மிக உயர்ந்த

மட்டக் கல்வியைப் பெறுவதற்கு சம வாய்ப்புப் பெறுதல் என்பதாகும்.

''சோவியத் பள்ளிகளில் பத்தாவது வகுப்பில் தேர்ச்சி பெறுபவர்கள், அமெரிக்காவில் பன்னிரண்டு ஆண்டுப் படிப்பின் முடிவில் அடையும் பாட அறிவு நிலையையாகிலும் பெறுகிறார்கள். அதிலும் அதிக அறிவு நிலையை அடைவதும் உண்டு. சொல்லிக் கொடுக்கும் பாடம் அடிக்கடி கடினமானதாகவே இருக்கும். ஆயினும் உயர் தரத்தைப் பெறும் வகையில் ஆழ்ந்தும் விரைந்தும் சோவியத் பள்ளிகள் இயங்குகின்றன.''

இந்த உயர்ந்த தரத்தை உருவாக்கும் பல காரணங்களைக் காட்டலாம். இப்போதைக்கு, உள்ளூர், பிராந்திய, தேசிய வழக்காறுகளிலும் போராட்டங்களிலும் கிளர்ச்சிகளிலும் சோவியத் மாணவர்கள் தள்ளப்படுவதில்லை என்பதை மட்டுமே குறிக்க விரும்புகிறேன். 'படியுங்கள், படியுங்கள், மேலும் படியுங்கள்', என்று லெனின் இளைஞர்களுக்குக் கொடுத்த அறிவுரையை எழுத்திலும் உணர்விலும் உண்மையாகப் பின்பற்றி வருவது சோவியத் சமுதாயமாகும்.

சமுதாயம், கவனச் சிதைவை ஏற்படுத்துவதில்லை; எனவே படிப்பில் ஈடுபாடு பெருகுகிறது, மாணவர்களின் அக்கறை நெடுநாள் நிலைக்க இது துணையாகின்றது.

# தொழிற் கல்வியும் சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கல்வியும்

இளைஞர்களின் கல்வியில், தொழிற் பள்ளிகளும் சிறப்புப் பயிற்சி கொடுக்கும் உயர்நிலைப் பள்ளிகளும் முக்கிய பங்கு கொள்கின்றன. இன்று, சோவியத் ஒன்றியம் தொழில் மயமாகியுள்ளது. தொழில்கள், விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு நடப்பதுபோல், பயிர்த் தொழிலும் விஞ்ஞான அடிப்படையில் இயந்திரங்களின் உதவியால் நடக்கிறது.

இடையறாது முன்னேறி வரும் சோவியத் நாட்டின் பொருளியலில், பல பிரிவுகளுக்கும் இடையறாது நுட்பத் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். தொழில் நுட்பமும் உழவு நுட்பமும் தேங்கிக் கிடக்கவில்லை. அவை, அப்போதைக்கப்போது, மாறிக் கொண்டே இருக்கின்றன. எனவே, இவ்வேலைகளில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மறு பயிற்சி தேவையாகிறது.

பல வகையான தொழிற் பள்ளிகள் இக்கடமையை ஆற்றுகின்றன. சோவியத் ஒன்றியத்தில் 5,700 தொழிற் பள்ளிகள் உள்ளன. அவற்றில், கிட்டத்தட்ட 22 இலட்சம் இளைஞர்கள் பயிற்சி பெறுகிறார்கள். தொழிற்சாலை, கட்டடத் தொழில், வேளாண்மை, செய்திப் போக்குவரத்து, சமுதாயச் சேவைகள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் 1,100 திறன்களை இப்பள்ளிகள் கற்றுக் கொடுக்கின்றன.

தொழிற் பள்ளியில் சேர்வதற்கு என்ன தகுதி தேவை? எட்டாண்டு பொதுக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் சேர்வதற்குத் தகுதி ஆகும். இதற்கு, நுழைவுத் தேர்வுகள் இல்லை. விருப்பமுடைய எல்லோரும் சேரலாம். சம்பளமோ தனிக் கட்டணமோ கட்டவேண்டியதில்லை.

தொழிற் பள்ளி மாணுக்கர்களுக்கு, இலவச சீருடை, இலவசத் தொழில் உடை, இலவச உணவு ஆகியவற்றை வழங்குகிருர்கள். வெளியூர் மாணுக்கர்களுக்கு இலவச உறையுள் வசதி உண்டு. தொழிற் பள்ளி ஆசிரியர்களில் நூற்றுக்கு எண்பத்தைந்து விழுக்காட்டினர், உயர் கல்வியோ சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கல்வியோ பெற்றவர்கள் ஆவார்கள்.

தொழிற் பள்ளிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை யாவன:

(1) மூன்று முதல் நான்காண்டு வரை பயிற்சி கொடுக்கும் பள்ளிகள்.

(2) ஈராண்டு பயிற்சி கொடுக்கும் பள்ளிகள்.

(3) ஓராண்டு முதல் பதினெட்டு மாதங்கள் வரை பயிற்சி கொடுக்கும் பள்ளிகள்.

முதல் வகைப் பள்ளிகளில் பயில்வோர், தொழிற் பயிற்சியோடு, முழுமையான உயர்நிலைப் பள்ளிப் படிப்பையும் பெறுகிருர்கள். இப்பள்ளிகளில் தேர்ச்சி பெற்றவர்கள், நேரே வேலைக்கும் உயர் படிப்பிற்கும் போகத் தகுதி பெற்றவர்கள்.

இரண்டாம் வகைப் பள்ளிகளே மிக அதிகம்.

மூன்ரும் வகைப் பள்ளிகள், பத்தாண்டு பொதுக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களை மட்டுமே சேர்த்துக் கொள்ளும்; 250 வகை தனித் திறன்களில் பயிற்சி கொடுக்கும்.

வேலைப் பயிற்சி பெறும் போதே ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வகையில் தொழிற் கல்வி நடக்கிறது. இத்தொழிற் பள்ளிகளில், எதிர்காலத் தொழிலாளர்கள், ஒரு தொழிற் திறனைப் பெறுவதோடு, தன் தொழிலை எப்படி திட்டமிட்டு நிறுவுவது என்பதையும் அதிக திறமான வழியில் உற்பத்தி வேலையைச் செய்வதையும் கற்றுக் கொள்ளுகிருர்கள். தக்க வசதிகளையுடைய தொழிற் பள்ளிகளில் மட்டுமே, சம்மந்தப்பட்ட தொழிற் பயிற்சியைக் கொடுப்பதால் இது சாத்தியமாகிறது. இப் பள்ளிகள், பெருந் தொழிற் கூடங்கள், கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகள், ஆகியவற்ருேடு இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே,

அங்குள்ள பொருத்தமான கருவிகளை, பொருள்களை, ஆசிரியர்களை, இட வசதியை, பயிற்சி பெறுவோர் பயன் படுத்திக் கொண்டு தொழில்களை செய்து பார்க்க முடிகிறது.

தொழிற் பள்ளிகளில் பயில்வோரும் ஓரளவு பொதுக் கல்வி பெறுகிறார்கள். இரசனையை ஒரு பாடமாக, எல் லாத் தொழிற் பள்ளிகளும் கற்பிக்கின்றன. புற பாட நடவடிக்கைகளுக்கும் வசதிகள் உண்டு. பயில்வோரின் தொழில் அக்கறையை அதிகப்படுத்தும் நடவடிக்கைகளுக் கும் அரசியல் விழிப்பு, அறிவு, ஆற்றல், இயல்பூக்கம் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் நன்மையான பொழுது போக்குகளுக்கும் வசதி செய்துள்ளன. வருங்காலத் தொழிலாளர்கள், விளையாட்டுப் பந்தயங்களுக்கு கணிச மான நேரத்தைச் செலவிடுகிறார்கள். தொழிற் பள்ளி களில் மிகப் பெரும்பாலானவைகளுக்கு விளையாட்டு அரங் கமும் விளையாட்டுத் திடல்களும் உண்டு. இன்று, விளை யாட்டுப் பந்தயங்களில் உலக வெற்றி வீரர்களாகவும் அவ் விளையாட்டுகளில் வல்லுநர்களாகவும் விளங்கும் நூற்றுக்கணக்கான, முன்னணி சோவியத் விளையாட்டக் காரர்கள், தங்கள் விளையாட்டு வாழ்க்கையை தொழிற் பள்ளிகளில் தொடங்கியவர்கள் ஆவார்கள்.

தொழிற் பள்ளிகளில் தேர்ச்சி பெற்றவர்கள் வேலைக்கு அலைய வேண்டியதில்லை. தொழிற் பள்ளியில் என்ன வேலைக்குப் பயிற்சி பெற்றார்களோ அதே வேலைக்குச் சட்டம் உறுதியளிக்கிறது. நாட்டின் பொருளியல் வளர்ந்து கொண்டே இருப்பதால், எல்லா இடங்களிலும் ஆட்கள் தேவை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. பெரும் பாலும் பயிற்சி பெற்ற தொழிற் சாலையிலேயே, பயிற்சி முடிந்ததும், வேலை கிடைக்கும்.

தொழிற் பள்ளிகளில் பயின்று தேர்ச்சி பெற்ற வர்கள்; தங்கள் பொதுக் கல்வி அல்லது தொழிற் கல்வி யில் மேலும் உயர்வதற்கு வாய்ப்புகள் உண்டா? ஆம்; ஏராளமான வாய்ப்புகள் உண்டு. இவர்கள், அஞ்சல் வழியாகவோ மாலைப் படிப்பின் மூலமோ, சிறப்புப் பயிற்சி அளிக்கும் உயர்நிலைப் பள்ளியிலோ உயர் கல்விக் கழகத்

திலோ, கல்வியில் தொடர்ந்து முன்னேற, சட்டம் இடங் கொடுக்கிறது. பாட்டாளிகள் அடைந்துள்ள பல்வேறு மட்டக் கல்விக்கு ஏற்ப, அநேக பாடத் திட்டங்கள் நடப் பதால், சட்டத்திலுள்ள மேற்படி உரிமையை நடைமுறை யிலும் காண முடிகிறது. கல்வியின் உச்சி மட்டம் வரை, முழு நேரம் பயிலும் மாணுக்கர்களுக்குக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருப்பது போன்றே, பகுதிநேர, அஞ்சல் வழி மாணுக்கர்களுக்கும் திறந்துள்ளன. கல்விக் கதவுகளைத் திறந்திருப்பதோடு பல்வேறு வகை ஊக்கங்களும் உதவி களும் அளிக்கிருர்கள். பயணச் சலுகை, அதிகப்படி விடுப்பு வசதி போன்றவற்றை ஏராளமான பாட்டாளிகள் பெறு கிருர்கள். ஆண்டுக்கு ஆண்டு, உயர் கல்வி நெடுஞ்சாலையில் இப்பாட்டாளிகள் வீறு நடை போட்டு முன்னேறுகிருர்கள்.

சோவியத் மாணவர், எட்டாவது முடித்ததும் கல் வியைத் தொடர்வதற்கு மற்ருெரு வாய்ப்பு உண்டு. சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளியில், அம்மாணுக்கர் சேரலாம். இத்தகைய பள்ளிகளில், தொழில் நுட்பத் துறைகளில், வேளாண்மையில், வன இயலில், மருத்துவத் தில், பொது ஊழியத்தில், கிண்டர் கார்டன், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பணியில், ஓரளவு தொழில் வல்லமைப் பயிற்சி கிடைக்கும். தொழிற் பள்ளிகள், நுட்பத் தொழி லாளரை ஆயத்தம் செய்கின்றன. உயர் கல்விக் கழகங் கள், தொழில் வல்லாரைத் தயாரிக்கின்றன. சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கூடங்கள், இரண்டிற்கும் இடைப்பட்ட தகுதிகளையுடையவர்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்றன.

சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளியில் பெறும் பயிற் சியின் காலம், சாதாரணமாக, நான்கு ஆண்டுகள் ஆகும். நான்காண்டு பயிற்சிக்கு வருவோர்க்கு, மற்ற உயர்நிலைப் பள்ளிகளின் பாடத் திட்டத்தை ஒட்டிய பொதுக் கல்வி அளிப்பதோடு குறிப்பிட்ட தொழில் நுட்பத்தில் பயிற்சி கொடுக்கிருர்கள். இப்பயிற்சியின் போக்கு, வேலைக்கு வேலை மாறுபடும். ஆனல் அநேகமாக குறிப்பிட்ட ஒரு வேலைக்கு, நாடு முழுவதும் ஒரே மாதிரி பயிற்சியே இருக்

கும். சிறப்புப் பயிற்சி நேரத்தில் பாதியை, பள்ளிக்கூடத் தொழிற் கூடத்திலோ, ஆய்வுக் கூடங்களிலோ, தொழிற் சாலைகளிலோ, பண்ணைகளிலோ, அலுவலகங்களிலோ, நேரடிப் பயிற்சியில் செலவிடுகிறார்கள். பள்ளிகளில் உள்ள தொழிற் கூடங்கள் மாணுக்கருக்குப் பயிற்சி கொடுப்பதோடு, உற்பத்திச் சாலைகளாகவும் செயல்படுகின்றன.

பத்தாண்டுப் படிப்பை முடித்தவர்கள், பதினெட்டு மாதம் முதல் இருபத்து நான்கு மாதங்களில் முடிக்கக் கூடிய, குறுகிய பயிற்சிகளை மேற்கொள்வதும் உண்டு. அவர்களுக்கு, எடுத்துக் கொண்ட நுட்பத்தில் பயிற்சி மட்டும் கிடைக்கும்; பொதுக் கல்வி இராது.

பயிற்சி முடிந்ததும், அரசுத் தேர்வு நடக்கும். பொதுக் கல்விக்கும் தொழிற் பயிற்சிக்கும் தேர்வுகள் உண்டு. சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகளில் பயில்வோர், கடைசி ஆண்டில், தேர்ந்தெடுத்துள்ள தொழில் நுட்பத்திற்கு ஏற்ற திட்டமொன்றை எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் பெறும் மதிப்பெண், கடைசித் தேர்வுக்கு கணக்கிடப்படும்.

தொழிற் பள்ளிகளிலும் சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள், மூன்றாண்டு வேலையில் இருந்த பிறகு, உயர் கல்விக் கழகத்தில் சேரலாம். முன்னரே குறிப்பிட்டது போல, உயர் கல்வியை பகுதி நேரப் படிப்பின் மூலமோ, அஞ்சல் வழியோ, பெற வாய்ப்புகள் உண்டு. தொழிற் பள்ளித் தேர்வுகளிலும் சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளித் தேர்வுகளிலும் 'சிறப்பாக' த் தேர்ச்சி பெறுவோர்க்கு, மூன்றாண்டு வேலைசெய்த பிறகு கல்வியைத் தொடரலாம் என்னும் கட்டுப்பாடு இல்லை.

சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் எல்லார்க்கும் இலவசம். மாணுக்கருக்கு உதவித் தொகையும் உண்டு.

சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகள், மாலைப் பிரிவுகளையும் அஞ்சல் பிரிவுகளையும் கொண்டுள்ளன. மூன்று முறைக்கும் கல்வியின் தரமும் தேர்வின் தரமும் ஒன்றாகவே உள்ளன.

# உயர் கல்வி

மனிதன் பெறக்கூடிய கல்விக்கு எல்லையே இல்லை என்னும் வாழ்வளிக்கும் நம்பிக்கையின் பேரில், சோவியத் ஆட்சி உருவாக்கியுள்ள பன்முகக் கல்வி மாளிகையின் உச்சி, உயர் கல்வி நிலையங்களாகும். வல்லுநர்களையும் ஆய்வாளர்களையும் ஆயத்தம் செய்வதிலும் அடிப்படை, தொழிற் சார்பு, ஆய்வுகளை வளர்ப்பதிலும் உயர் கல்வி நிலையங்கள் ஆற்றியுள்ள பணி மிகப் பெரிதாகும்.

ஜாரின் கொடுங்கோல் ஆட்சி விதித்த, முடமாக்கும் கட்டுப்பாடுகளைத் தாண்டி, பொருளாதாரத்திலும் கலையியலிலும் பின்னடைந்து கிடந்த, போதிய உயர் கல்வி நிலையங்கள் இல்லாத முற்காலத்திலேயே, இரஷ்ஷிய அறிஞர்கள், மனித அறிவுக் கருவூலத்தை பெருமளவு வளப்படுத்தினார்கள். இரஷ்ஷியப் புரட்சியின் அறிஞர்களை உருவாக்கியதில், உயர் கல்வி நிலையங்களுக்கு மகத்தான பங்கு உண்டு. லெனினுடைய புரட்சி நடவடிக்கைகளே, காசான் பல்கலைக் கழகத்தில் பூத்தன. கல்வி போதிப்பதில், மதிப்புமிக்க அனுபவத்தை, இரஷ்ஷிய உயர் கல்வி நிலையங்கள் சேமித்துள்ளன. கடந்த காலத்திலிருந்து பெற்ற முற்போக்கு மரபுகளை, சோவியத் உயர் கல்வி, வளர்த்துக் கொண்டிருக்கிறது.

புதிய சோவியத் ஆட்சிக்கு எதிரில் பல சிக்கல்கள் எழுந்து மிரட்டிய போதிலும், ஆட்சி தொடக்கம் முதல், உயர் கல்வியை வளர்ப்பதற்கும் அதை எல்லார்க்கும் கிடைக்கச் செய்வதற்கும் வேண்டிய அனைத்தையும் செய்தது; இன்றும் செய்கிறது. இரஷ்ஷியப் பல்கலைக் கழகங்களில் நடை பெற்ற பாட திட்டங்கள் பற்றியும் அவற்றின் ஆய்வுகள் பற்றியும் லெனினுக்கு சிறந்த கருத்து

உண்டு. இவற்றைத் தொடர்ந்து வளர்ப்பதோடு வளப் படுத்துவது தேவை என்பது லெனினுடைய கருத்து. லெனின், பல்கலைக் கழகங்களுக்குப் பேராதரவு தந்தார்.

1919 ஜனவரியில்—அக்டோபர் புரட்சியின் இரண் டாண்டுக்குள்—லெனின் தலைமையில் நடந்த மக்கள் ஆணை அவை, (அமைச்சரவை) ஆறு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவ முடிவு செய்தது. புதுப் புது பல்கலைக் கழகங்களை அமைக்கும் முயற்சி, சென்ற அறுபது ஆண்டுகளாகத் தங்கு தடையின்றி ஓடுகிறது. உயர் கல்விக்கான வாய்ப் புக்களை மேலும் மேலும் வளர்க்க வேண்டுமென்னும் கொள் கையைப் பின் பற்றியதன் விளைவாக, ஜார் காலத்தில், பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கனவு கூட கண்டிராத பெரும் நிலப் பரப்புகளில், தனித்தனிப் பல்கலைக் கழகங் கள் வந்து விட்டன. சோவியத் ஆட்சியில் ஒவ்வோர் ஒன்றியக் குடியரசிலும் சில தன்னாட்சி உரிமைக் குடியரசு களிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. இப்பல் கலைக் கழகங்கள், குடியரசு மொழியிலோ, தன்னாட்சி உரிமைப் பகுதியின் மொழியிலோ கல்வி கற்பிக்கின்றன. 1917-இல் நடந்த அக்டோபர் புரட்சிக்கு முன்பு, இப் போது, பைலோ இரஷ்ஷியா, உஸ்பெக், கஸாக், ஆஸெர் பெய்சான், மொல்தேவியா, கிர்கிஸ், தாஜிக், அர்மீனியா, துருக்மன் குடியரசுகள் என்று அழைக்கப்படும் பெரும் பரப்பில் பல்கலைக் கழகங்கள் இல்லை. இப்போது, இக் குடியரசுகளுக்கென்று, தனித்தனி பல்கலைக் கழகங்கள், தொண்டு செய்கின்றன.

புரட்சிக்கு முந்திய இரஷ்ஷியாவில், 43,000 மாணாக் கர்களைக் கொண்ட 13 பல்கலைக் கழகங்கள் இருந்தன. இன்று சோவியத் ஒன்றியத்தில் 63 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் 6,00,000 பேர் சேர்ந்துள்ளார்கள்.

பல்கலைக் கழகக் கல்வியைப் பெருக்குவதும் முன் னேற்றுவதும் சோவியத் ஒன்றியத்தின், சமூக இயல், கலையியல் கொள்கையின் ஒரு பகுதியாக உள்ளது. மக்கள் இனம் சேர்த்து வைத்துள்ள அறிவினை பாட்டாளிகளுக் கும் குடியானவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று லெனின்

கட்டளையிட்டார். அக்கட்டளை, சோவியத கொள்கையின் கூறாக உள்ளது. சோவியத் கல்வி நிலையங்களுக்கு, இதுவே, வழி காட்டும் கொள்கையாக விளங்குகிறது.

சோவியத் ஒன்றியத்தில் உயர் கல்விக்கான நிலையங்களை இரண்டாகப்பிரிக்கலாம். அவை:

(1) பல்கலைக் கழகங்கள்.

(2) தொழிலுக்குரிய அல்லது சிறப்பு உடைய உயர் கல்விக் கழகங்கள்.

பல்கலைக் கழகங்கள், இயற்கை சாத்திரம், அளவிடக் கூடிய விஞ்ஞானம், மானிடயியல் ஆகிய அனைத்திலும் நாட்டம் செலுத்துகின்றன. பல்கலைக் கழகங்களுக்கு இருவகைப் பணிகள் உண்டு. தொழிற் சாலைகள், வேளாண்மை, உயர்நிலைப் பள்ளி, சிறப்புப் பயிற்சி உயர் நிலைப் பள்ளி, கலை நிறுவனங்கள், அரசு அலுவல்கள், ஆகியவற்றிற்குத் தேவையான திறமையுடையவர்களை பல்கலைக் கழகங்கள் ஆயத்தம் செய்கின்றன. ஆய்வு நிலையங்கள், சோதனைக் கூடங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான விஞ்ஞானிகளையும் ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பது பல்கலைக் கழகங்களின் மற்றொரு பணியாகும். சோவியத் பல்கலைக் கழகங்கள், இரஷ்ஷியக் கல்வி முறையின் சிறந்த மரபுகளுக்கு வாரிசுகளாக விளங்குகின்றன. இவை, அறிவைப் பாதுகாக்கும் கருவூலங்களாகவும் அதைப் பரப்பும் கருவிகளாகவும் செயல்படுகின்றன.

சோவியத் பல்கலைக் கழகங்களில் நடக்கும் விஞ்ஞான ஆராய்ச்சி, சோவியத் ஒன்றியத்திலும் உலகிலும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளது. உயர் கல்வி நிலையங்களுக்கு ஆசிரியர்களை ஆயத்தம் செய்து கொடுப்பதாலும் அந்நிலையங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாலும் நாட்டின் உயர் கல்வி பல்கலைக் கழகங்களின் செல்வாக்குப் பெரிதாக உள்ளது.

பல்கலைக் கழகங்கள், அகண்ட அடிப்படை அறிவின் மேல் கவனம் செலுத்துகையில், உயர் கல்விக் கழகங்கள்

குறிப்பிட்ட பிரிவுகளின்பால ஈடுபாடு கொண்டுள்ளன; பிந்தியவைகளின் நடைமுறைகளில் தொழிற் சாயல் இருக்கும். எடுத்துக் காட்டாக, பொறியாளர்களைப் பயிற்றுவிக்கத் தனி நிலையங்களும் உலோக இயல் வல்லுநர்களை உருவாக்க வேறு நிலையங்களும் இயந்திர அமைப்பாளர்களைப் பயிற்றுவிக்க பிறிதொரு வகை நிலையங்களும், அனல் பொறியாளர்களை ஆயத்தம் செய்யும் நிலையங்கள் வேருகவும் மருத்துவம், வேளாண்மை, ஆசிரியத் தொழில்களுக்குப் பயிற்றுவிக்கும் உயர் கல்வி நிலையங்கள் தனியாகவும் உள்ளன. சில பயிற்சிகளைப் பல்கலைக் கழகங்களிலும் தனி உயர் கல்வி நிலையங்களிலும் பெறலாம். ஆசிரியப் பயிற்சி, அத்தகையவற்றில் ஒன்ருகும்.

உயர் கல்வி, சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆகியவற்றின் ஒன்றியத் துணை அமைச்சரான தோழர் புரோகோ பீவ், உயர் கல்வியின் நோக்கத்தைப் பற்றி பின்வருமாறு கூறுகிருர்:

''உயர்கல்வி நிலையங்கள் அறிஞர்களை உருவாக்குகின்றன. கூர்ந்த மதியுடைய மாணக்கர்களை, மிகவிரிந்த வட்ட மக்களிடமிருந்து ஈர்க்க இயல்வதைப் பொறுத்து அவற்றின் தரம் அமையும். அப்படி ஈர்க்கையில், அவர்களுடைய பொருள் நிலையோ, சமுதாய நிலையோ, இனமோ, கணக்கிற்கு வரக்கூடாது. நுழைவிற்குத் தேவையான அறிவினைப் பெற்று விட்ட அனைவருக்கும் உயர் கல்வி எட்ட வேண்டும் என்பது நம்முடைய கருத்தாகும்.''

நாட்டின் பொருளியலில், மரபுத் தொழில்களுக்கும் புதிய தொழில்களுக்குமான நுட்பப் பயிற்சி உடையவர்கள், மேலும் மேலும் தேவைப்படுகிருர்கள். இத்தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இத்தேவையைச் சமாளிக்கவும் தேவையான அறிவினையும் உறுதியையும் பெற்றுள்ள அனைவருக்கும் உயர்கல்வி கிடைப்பதற்கும் வகை செய்ய, சோவியத் ஒன்றியம் மலையென நிதி உதவி செய்கிறது. **1914-15** இல் பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிலையங்கள் **105** ஆக இருந்தன. எழுபதுகளுக்குள் இவை, **800** ஆகப் பெருகி விட்டன. அதைப்

போலவே, ஜார் காலத்தில் 127 ஆயிரம் பேர் பயின்றது மாறி, 1972-73 இல் 4600 ஆயிரம் பேர் பயிலும் அள விற்கு வளர்ந்து விட்டதைக் காண்கிறோம்.

சோவியத் பல்கலைக் கழகங்களுக்கு உயர்ந்த மதிப்பும் புகழும் உண்டு. இந்நிலையங்களில் பணிபுரிவோரே, நாட் டில் மிக உயர்ந்த சம்பளம் வாங்குவோராக இருக்கிறார் கள். இவற்றின் சோதனைக் கூடங்களும் நூலகங்களும் பெருமளவில் வளமாக நிரம்பி உள்ளன. சோவியத் பல் கலைக் கழகங்கள், பெரிய அமைப்புகள்; இவை ஒவ்வொன் றிலும் பயில்வோர் எண்ணிக்கையும் பெரிது. இருப்பினும் இவற்றைப் பார்வையிடும் எவரும் இங்குள்ள கல்வி மணத் தால் கவரப்படுவார்கள்.

குடியரசுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் அக் குடியரசைச் சேர்ந்த மாணாக்கர்களே அதிகமாகச் சேரு வார்கள். மாஸ்கோ அரசு பல்கலைக் கழகம், லெனின் கிராட் பல்கலைக் கழகம், கீவ் பல்கலைக் கழகம் போன்ற வற்றில், மிகப் பல குடியரசுகள், தன்னாட்சி உரிமைப் பகுதிகள் முதலியவற்றைச் சேர்ந்த மாணாக்கர்கள் இருக் கிறார்கள். மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பயில்வோரில் நூற்றுக்கு நாற்பது விழுக்காட்டினர், சோவியத் ஒன்றி யத்திலுள்ள பல, பிற தேசிய இனங்களைச் சேர்ந்தவர் கள். இவர்கள், பிற்காலத்தில், பல்வேறு துறைகளின் தலைமைகளுக்கு வரக்கூடுமாகையால், நாடு முழுவதும் புகழ் பெற்ற பல்கலைக் கழகத்தில் பயில்வது, நாட்டின் ஒருமைப் பாட்டினை வளர்ப்பதில் பெருந்துணையாகும்.

நாட்டின் பொருளியல் தேவைகளையும் பல்கலைக்கழ கங்களில் சேர்க்கும் மாணாக்கர் எண்ணிக்கையையும் நேரடி யாகத் தொடர்பு படுத்தியுள்ளார்கள். எனவே பல்கலைக் கழகங்களில் சேர, பலத்த போட்டியுண்டு; சேர்ப்பதும் பொறுக்கியெடுத்தே. உயர்நிலைப் பள்ளி அல்லது சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளித் தேர்வுகளில் வெற்றி பெற்ற வர்கள் அனைவரும் பல்கலைக் கழகத்திலோ உயர் கல்விக் கழகத்திலோ சேரத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். நான்கு பாடங்களில் எல்லோருக்கும் தேர்வு நடக்கும்.

த்தில் பெற்ற மதிப் பெண்களையும் உயர்நிலைப் பள்ளிச் சாதனைகளையும் கணக்கில் கொண்டு, சேர்க்கை முடிவு செய்யப்படும். மிகப் பெரும்பாலான பல்கலைக் கழகங் களில், சராசரி மூவரில் ஒருவருக்கே இடம் கிடைக்கிறது. முழுநேரக் கல்விக்கு இடம் கிடைக்கா விட்டாலும் பாதக மில்லை. பின்னர், பகுதி நேரக் கல்வியையோ அஞ்சல் கல்வியையோ பெற்று, தங்கள் அறிவினையும் தகுதியையும் உயர்த்திக் கொள்ளலாம். பாட்டாளிகளுக்காக ஏற்பாடு செய்யப்படும் பணியிடைப் பயிற்சியும் அவர்களுக்கு உதவும். உயர் கல்வி வழிகள் எப்போதும் திறந்திருக்கும்.

கலை, கல்வி வாய்ப்புகளைப் பெருக்கி, சமுதாய நீதியை வளர்ப்பதற்கு, சோவியத் ஆட்சிக் காலத்தில் நடை முறைக்கு வந்த, பகுதி நேரக் கல்வி முறை பயனுடைய தாக இருக்கிறது. இம்முறை, ஏதாவதொரு காரணத் தால் முழு நேரப் படிப்பில் ஈடுபட முடியாதவர்களுக்கும் உயர் கல்வி உட்பட எல்லாக் கல்வியும் எட்டுவதற்கு வழி செய்கிறது. ஒவ்வொரு சோவியத் குடிமகனும் மகளும் தனது ஆற்றல்களை வளர்த்துக் கொண்டு, விருப்பமான பயிற்சியைத் தொடர, பகுதி நேரக் கல்வி வழிசெய்கிறது.

உயர் கல்விக் கழகங்கள் அன்றாடம் போய் வரும் தொலைவில் இருந்தால், பகுதி நேரக் கல்வி வசதியாக இருக்கும். அக்கழகங்களுக்கு, நெடுந் தொலைவில் வேலை செய்யும் ஏராளமான தொழிலாளிகளுக்கும் குடியானவர் களுக்கும் அஞ்சல் கல்வி பயன்படுகிறது.

அண்மைக் காலத்தில் பகுதி நேரக் கல்வியும், அஞ்சல் படிப்புமே ஏராளமான இளம் பாட்டாளிகள், கழக, பல் கலைக் கழகப் பட்டங்களைப் பெறுவதற்கு உதவியுள்ளன. அது போக, ஒருவருக்கு தொடர்புடைய மற்றொரு துறை யில் கல்வி தேவைப்படுமானால் அதையும் பட்டதாரிகள் பெறுவதற்கு இவ்விரு முறைகளும் ஏதுவாகின்றன.

எடுத்துக் காட்டாக, பொறியாளர் ஒருவர், பொரு ளியல் பாடத்திலோ கணிதத்திலோ, பகுதி நேரப் படிப் பின் மூலம் பட்டம் அல்லது சான்றிதழ் பெறக் கூடும்.

முழு நேரக் கல்வியை விட, பகுதி நேரக் கல்வியும் அஞ்சல் கல்வியும் இயற்கையாகவே கடினமாக இருக்கும். சோவியத் ஆட்சி இதைக் கருத்தில் கொண்டு, வேலை செய்து கொண்டே படிப்போர்க்கு சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. சோதனைக் கூடங்களில் பயிற்சி பெறும் போதும் தேர்வுகளுக்குச் செல்லும் போதும் அவர்களுக்கு சம்பளத்தோடு கூடிய விடுமுறை உண்டு. அஞ்சல் கல்வித் தேர்வுக்குச் செல்லும்போது, பயணச் செலவில் ஒரு பகுதியை அரசே ஏற்றுக் கொள்ளுகிறது.

அஞ்சல் கல்விக்காக, பல இடங்களில் வலை பின்னியது போல், கல்வி மையங்களும் பாடஞ் சொல்லும் மையங்களும் உள்ளன. ஓர் ஊரில் அஞ்சல்வழி பயில்வோர் இரு நூறு பேர்கள் இருந்தால், அங்கே அத்தகைய மையங்களை நிறுவுவார்கள். அஞ்சல் கல்வி முறை வானொலியையும் தொலைக் காட்சியையும் பெருமளவு பயன்படுத்துகிறது.

பல்கலைக் கழகங்களும் உயர் கல்விக் கழகங்களும், பாட்டாளி மாணவர்களுக்கு புதிதாக உயர்நிலைப் பள்ளிகளில் தேறியவர்களோடு சமத்துவமாக போட்டியிட உதவும் பொருட்டு, ஆயத்தத் துறைகளை அமைத்துள்ளன. அத்துறைகள், தொழிலாளர்களுக்கும் பயிர்த் தொழிலாளர்களுக்கும் முன்னாள் படை வீரர்களுக்கும் நுழைவுத் தேர்வுகளுக்கான ஆயத்தப் படிப்பை சொல்லிக் கொடுக்கின்றன. முழு நேரப் படிப்பிற்குச் சேருவோர், 35 வயதிற்கு உட்பட்டிருக்க வேண்டும். பகுதி நேரக் கல்விக்கும் அஞ்சல் கல்விக்கும் வயது வரம்பு இல்லை.

பல்கலைக் கழகங்களிலும் பிற உயர் கல்விக் கழகங்களிலும், கல்வி எல்லோர்க்கும் இலவசம். கற்பிப்பது மட்டுமா இலவசம்? நூலகம், சோதனைக்கூடம், தொழிற் பயிற்சிக்கூடம், விளையாட்டு, கலைக்கூடம் ஆகியவற்றிற்காகவும் கட்டணம் வாங்குவதில்லை. மேலும் பல்கலைக் கழகங்களில் பயில்வோரில் நூற்றுக்கு எண்பது விழுக்காட்டினருக்கும் உயர் கல்விக் கழகங்களில் எல்லா மாணவர்களுக்கும் உதவித் தொகை உண்டு. உதவித் தொகை,

ஆண்டுக்கு ஆண்டு உயர்கிறது. மிகக் குறைந்த அளவிலும், அடிப்படைத் தேவைகளுக்கு உதவித் தொகை போதும். சிறந்த மாணவர்களுக்கு அதிக விகிதத்தில் உதவித் தொகை கிடைக்கும். அது, வசதியாக வாழ்வதற்குப் போதும். கல்வி நிலைய உணவுச்சாலைகளில் கிடைக்கும் உணவுப் பண்டங்களுக்கு அடக்க விலைக்கும் குறைத்தே வாங்கு கிறார்கள். பாக்கியை அரசு உதவுகிறது. சோவியத் நாட்டி லுள்ள மற்ற குடி மக்களைப் போன்று, மாணக்கர்களுக்கும் இலவச மருத்துவ வசதி உண்டு.

உயர் கல்வி நிலையங்களில் ஆண்பாலரும் பெண் பாலரும் உடனிருந்து பயில்கிறார்கள். சாதாரணமாக, பொது மக்களில் ஆண்களும் பெண்களும் என்ன விழுக் காட்டில் இருக்கிறார்களோ அதே விழுக்காட்டில் உயர் கல்வி நிலையங்களில் சேர்ந்திருக்கிறார்கள். ஆயினும் மருத் துவம், ஆசிரியர் பயிற்சி போன்றவைகளில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

பல்கலைக் கழகத்தில் முதற் படிப்பு ஐந்தாண்டுக் கல்வியாகும். மருத்துவம், பொறியியல் பட்டங்களுக்கான படிப்புக் காலம் மேலும் நீளமானது. மருத்துவப் பட் டத்திற்கு ஆறாண்டு கற்று வெற்றி பெற்ற பின், ஓராண்டு பெரிய மருத்துவ சாலையில் உறையுள் பயிற்சி பெற வேண்டும்.

பல்கலைக் கழகங்களிலும் பிற உயர் கல்விக் கழகங் களிலும் மேற் பட்டம் பெற, சாதாரணமாக மூன்றாண்டு கள் பயில வேண்டும். அதில் தேர்ச்சி பெற்றால் 'விஞ்ஞான மேற் பட்டம்' பெறலாம். சாதாரண மாணவர்களைக் காட்டிலும் ஓராண்டு அதிகமாக, பகுதி நேர அஞ்சல் வழி மாணவர்கள் படிக்க வேண்டும்.

கல்வியாண்டு. இது அரையாண்டுகளாக (செமஸ் டர்களாக) பிரிக்கப்பட்டுள்ளது. வகுப்புகளுக்கு வருகை யும் வீட்டு வேலைகளைச் செய்து முடித்தலும் கட்டாயம். ஒவ்வொரு கல்வியாண்டின் முடிவிலும், சாதாரணமாக நான்கைந்து தேர்வுகள் உண்டு. தேர்வுக் காலம் மூன்று நான்கு வாரங்கள் வரை நீடிக்கலாம். எல்லா வீட்டு

வேலைகளிலும் திருப்தியான மதிப்பெண் பெறுவதோடு சம்மந்தப்பட்ட தேர்வுகளிலும் தேர்ச்சி அடைய வேண்டும்.

மாணக்கர், தாமே பயில்வதற்கும், வேலை செய்வதற்கும் ஆசிரியர்கள் வழிகாட்டுதல் உயர் கல்வியின் முக்கிய கூருக உள்ளது. அத்தகைய பணிகளுக்கு திட்டமிடுவதில், ஆசிரியர்களின் உதவியை மாணவர்கள் பெறுவார்கள். இதனல், நேரத்தையும் ஆற்றலையும் மிகப் பயனுள்ள வழியில் செலவிடக் கற்றுக் கொள்ளுகிருர்கள்.

எல்லாத் துறைப் பாடத்திட்டங்களிலும், அனுபவ வேலை போக சமுதாய, அரசியல் வேலைகளும் சேர்ந்துள்ளன. இது, மார்க்சிய--லெனினிய சித்தாந்தங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளவும் சமுதாயம், அரசியல் பற்றிய தெளிவு பெறவும் உதவுகிறது. ஒருவருடைய வருங்காலத் தொழில் பற்றி ஆக்கபூர்வமான போக்கினை உருவாக்குகிறது; மேலும், பொருளியல், சமூக இயல், அரசியல் ஆகியவற்றில் உருப்படியான, நோக்கத் தெளிவுடைய வேலையை விடாது செய்யும் ஆற்றலைத் தருகிறது.

சோவியத் நாட்டின் உயர் கலவி நிலையங்கள் அனைத்துலக் உணர்வினை வளர்க்கின்றன. பல்வேறு தேசிய இனத்தவர்களும் நாட்டவர்களும் ஒன்ருகப் படிப்பதிலிருந்து, இது தெளிவாகத் தெரிகிறது.

மாணக்கருக்கு பொருள் வசதிகளைச் செய்வது உட்பட, உயர் கல்வியை வளர்க்கவும் முன்னேற்றவும் ஒதுக்கும் நிதி, ஆண்டுகள் செல்லச் செல்ல தொடர்ந்து பெருகி வருகிறது.

# தேர்வுகள்

எந்தக் கல்வி முறையிலும் தேர்வுகளும் பரீட்சைகளும் கலந்தே உள்ளன. அவற்றின் மூலமாகவே, பெற்ற அறிவின் அளவையும் பயிற்சியின் சாதனையையும் அளவிட முடிகிறது. தேர்வுகள், மாணவர்களின் சாதனைகளை மட்டும் மதிப்பிடுவதில்லை; ஆசிரியர்களின் செயல் திறனையும் எடை போடுகின்றன. ஒரு குறிப்பிட்ட வயதினருக்கு ஒரு குறிப்பிட்ட பாடமோ பகுதியோ அதிகக் கடினமானதா என்பதையும் தேர்வு புலப்படுத்தும். செம்மையாகக் கையாளப்படும் தேர்வால், கையாண்ட பாட முறைகளும் நுட்பங்களும் ஏற்றவைகளா என்பதையும் தெரிந்து கொள்ளலாம். எந்த பொதுக் கல்வி முறையிலும் தேர்வுகளைத் தள்ளி விட முடியாது.

எந்த அடிப்படையில் ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்குப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள்? ஆண்டு முழுவதும் எப்படிச் செய்துள்ளார்கள் என்று பார்த்து மேல் வகுப்பிற்கு அனுப்புகிறார்கள். பருவம் முழுவதும் ஒவ்வொரு நாளும் மாணாக்களின் அறிவைப் பல வழிகளில் சோதனை செய்கிறார்கள். மாணாக்கர்களின் அன்றாட வேலைகளுக்கு மதிப்பெண் போடும் முறையால், மாணவனின் முன்னேற்றத்தைப் பற்றி முழுமையான ஆதாரம் கிடைக்கிறது. நாள்தோறும் ஒவ்வொரு பாடத்திலும் பெறும் மதிப்பெண்களைப் பேரேட்டில் பதிந்து கொள்வார்கள். தேர்ச்சியை முடிவு செய்யும் வேளையில் இப்பதிவுகளைக் கவனிப்பார்கள்.

ஐந்து 'பாயின்ட்' அடிப்படையில் மதிப்பெண் கொடுப்பார்கள். 5 வாங்கினால் 'பிரமாதம்', 4 வாங்கினால் 'நன்றாயிருக்கிறது', 3 வாங்கினால் 'சராசரி'; 2 வாங்

'திருப்தியில்லை', 1 வாங்கினால் 'மோசம்' என்று
ள்.

மூன்றும் அதற்கு மேலும் வாங்கியவர்கள் மேல் வகுப்புக்குச் செல்வார்கள்.

தொடக்க வகுப்புகளில் எல்லோருமே மேல் வகுப்பு களுக்குத் தேர்வு பெறுவதையும் ஒரே வகுப்பில் இரண்டாம் ஆண்டு தேங்காமையையும் காணலாம். நாள்தோறும் மாணுக்கனின் கல்வி வளர்ச்சி மதிப்பிடப் படுவதால், தற்செயலாகத் தவறிவிட நேர்வதில்லை.

நாள்தோறும் மதிப்பிடுவதால், இரண்டொரு மாதங்களில் மெல்லப் படிப்பவர்கள் எவர் எவர், எதில் எதில் மெல்லக் கற்கிறார்கள் என்பது ஆசிரியர்களுக்குப் புலனாகிவிடும். அதற்குப் பிறகு, பின்னடைகிற மாணுக்கர்களுக்குப் பின்னடைகிற பாடங்களில் மேற்பார்வைப் பாடம் நடத்தும் பொறுப்பை பள்ளிகள் எடுத்துக் கொள்ளுகின்றன. தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களை மாணவர்கள் பெறுவதற்கு இந்தப் பரிகார முறை உதவுகிறது.

எட்டு, பத்து படிவங்கள் நீங்கலாக மற்ற எல்லாப் படிவங்களிலும் பள்ளிக்கூடங்களின் மதிப்பீட்டின் பேரிலேயே மேல் வகுப்புகளுக்கு அனுப்புதல் நடக்கிறது. எட்டாவதுக்கும் பத்தாவதுக்கும் அரசின் பொதுத் தேர்வு உண்டு.

சம்பந்தப்பட்ட குடியரசின் கல்வி அமைச்சகத்தின் மேற் பார்வையில் எட்டு, பத்து படிவங்களுக்கான அரசுத் தேர்வுகள் நடக்கின்றன. என்னென்ன விஷயங்களைப் பற்றித் தேர்வுகள் நடக்கும் என்னும் பட்டியல் ஒன்றை ஆயத்தஞ் செய்து, எல்லாப் பள்ளிகளுக்கும் முன்னதாகவே அனுப்பி விடுகிறார்கள். அப்பட்டியல், பாடத் திட்டம் முழுவதையும் உள்ளடக்கும். அந்தப் பட்டியலை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பாடத்திற்கும் பல 'டிக்கெட்டு'களை ஆயத்தம் செய்வார்கள். ஒவ்வொரு 'டிக்கெட்'டிலும் இரண்டு மூன்று கேள்விகள் இருக்கும். கல்வி அமைச்சகத்தின் பிரதிநிதிகளால் இவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்படி ஏற்றுக்கொண்ட 'டிக்கெட்டு'களை

பாட வாரியாக, உறையில் இட்டு சீல் வைத்து விடுவார்கள். தேர்வு நேரத்தின் போதே, இவ்வுறைகள் தேர்வாளர் குழுவால் திறக்கப்படும்.

மிக அதிகமான பாடங்களில், தேர்வுகளை வாய் மூலம் நடத்துவார்கள். சிலவற்றில் மட்டும் எழுத்து வழியாகத் தேர்வுகளை நடத்துவார்கள். வாய்மொழிச் சோதனையும் ‘டிக்கெட்’டுகளைக் கொண்டே நடக்கும். எல்லா ‘டிக்கெட்டு’களையும் மேசையின் மேல் கவிழ்த்து வைத்து விடுவார்கள். தேர்வாளர் குழுவின் முன்னிலையில், மாணவர் ஒரு ‘டிக்கெட்’டை எடுத்து, அதிலுள்ள கேள்விகளுக்கு வாய்ச் சொல்லால் பதில் கூறுவார். கணிதம் பௌதிகம் பற்றிய பயிற்சிகள் கேள்வியாக வந்தால், அவற்றை கரும் பலகையில் போட்டுக் காட்ட வேண்டும். மாணவன் எவ்வளவு நன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறான் என்று சோதிக்க, தேர்வுக் குழு துணைக் கேள்விகள் கேட்கலாம். சில சமயம் எடுத்த ஒரு ‘டிக்கெட்’டில் உள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாவிட்டால், வேறொரு ‘டிக்கெட்’டை எடுத்து அதிலுள்ள கேள்விகளுக்குப் பதில் கூற அனுமதிக்கப்படுவார்.

இந்த ஏற்பாட்டின்படி, இரஷ்ஷிய இலக்கியம், குறிக் கணக்கியல், வடிவியல், சோதனைக்கூட தேர்வோடு கூடிய பௌதிகம், சோதனைக்கூட பரீட்சையோடு கூடிய வேதியியல், சோவியத் வரலாறு, அயல் மொழி ஆகியவற்றில் வாய் மொழித் தேர்வுகள் நடக்கும். இரஷ்ஷிய மொழி, கட்டுரை ஆகிய இரண்டிலும் எழுத்து மூலத் தேர்வுகள் உண்டு. எழுத்துத் தேர்வுகளுக்கான வினாத் தாள்களை, ஒரு மையத்தில் ஆயத்தம் செய்து, எல்லாப் பள்ளிகளுக்கும் அனுப்பி வைப்பார்கள். வாய்ச் சொல் தேர்வுகளுக்கு முன்பே, எழுத்துத் தேர்வுகள் நடக்கும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தேர்வாளர் குழு அமைக்கப்படும். பள்ளியின் இயக்குநர் (தலைமை ஆசிரியர்), பாட ஆசிரியர், உயர் கல்விக் கழகம் அல்லது சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளியின் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் தேர்வுக் குழுவில் இருப்பார்கள். மாநகராட்சி அல்லது,

பிராந்திய ஆட்சியின் பிரதிநிதி, இத் தேர்வுகளின் போது அங்கே இருக்கலாம். தேர்வுக் குழு, ஒவ்வொரு மாணவனுடைய பள்ளிக்கூட முழு ஆண்டு சாதனைகளையும் தேர்வுகளில்—வாய் மொழியோ, எழுத்தோ ஆயினும்—பெறும் மதிப்பெண்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மாணாக்கர்களை ஐந்து 'பாயின்ட்' அடிப்படையில் மதிப்பிடுவார்கள். இரண்டிற்கு மேற்பட்ட பாடங்களில், இரண்டு 'பாயின்ட்'களோ அதற்குக் குறைவாகவோ வாங்குவோர் மீண்டும் படிக்க வேண்டும். இரு பாடங்களில் மட்டும் இரு பாயின்ட்கள் பெற்றவர்கள், விடுமுறைக்குப் பின், பள்ளிகள் திறக்கும் சமயம், மறுபடியும் தேர்வுக்கு வர வேண்டும். விடுமுறையின் போது, அம் மாணவர்கள் பாடங்களைத் திரும்பப் படித்து போதிய தகுதிக்கு வருவதற்குக் காலமும் வாய்ப்பும் உண்டு. ஒரே வகுப்பில் இரண்டாம் ஆண்டு படிப்போர் மிக மிக அருமை; கிட்டத்தட்ட நூற்றுக்கு ஐந்து பேர்கள் அப்படி இருக்கலாம்.

தேர்வுகளிலும் பிற பாடங்களிலும் 'ஐந்து' பெற்றவர்களுடைய நடத்தை ஆண்டு முழுவதும் நன்றாக இருப்பின், அவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் கொடுப்பார்கள். தேர்வுப் பாடங்களில் ஐந்தும் பிற பாடங்களில் நான்கும் பெற்றவர்களுடைய நடத்தை நன்றாக இருந்தால், அவர்களுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைக்கும்.

எட்டாண்டு கல்வியில் தேர்ச்சி அடைந்தோர், பொதுக் கல்விப் பள்ளியிலோ, தனிப் பயிற்சி உயர்நிலைப் பள்ளியிலோ, தொழிற் பள்ளியிலோ ஒன்பதாம் படிவத்தில் சேரத் தகுதி உடையவர் என்று கூறும் சான்றிதழ்களைப் பெறுவார்கள்.

பத்தாண்டு பொதுக் கல்வியில் தேர்ச்சி அடைந்தோர், உயர் கல்வி நிலையங்கள், தொழில் நுட்பப் பள்ளிகள் குறுகிய காலப் படிப்பைக் கொடுக்கும் சிறப்புப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் சேரத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கும் பள்ளியிறுதிச் சான்றிதழ்களைப் பெறுவார்கள்.

குடியரசிற்குக் குடியரசு, வாய்ச் சொல் தேர்வுப் பாடங்களிலோ எழுத்துத் தேர்வுப் பாடங்களிலோ சிறு மாறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மொத்தத்தில், ஒரே சாயலைக் காணலாம். 'டிக்கெட்டு'களைத் தயாரிக்கும் முறையினால், கேள்வித்தாள் தயாரிப்போரின் விருப்பு வெறுப்புகள் நீக்கப்படுவதாக, சோவியத் கல்வியாளர்கள் கருதுகிறார்கள். மாணவனுடைய பாட அறிவு, மேலெழுந்தவாரி உள்ளதா அல்லது ஆழமாக உள்ளதா என்பதைத் தேர்வாளர்கள் துணைக் கேள்விகளின் வழியாகக் கண்டு கொள்ள வாய்ப்பிருப்பதால், வாய் சொல்லாகத் தேர்வு நடத்துவது திருப்தியானது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

சோவியத் ஒன்றியத்தில், உயர்நிலைப் பள்ளிகளிலும் பிற கல்வி நிலையங்களிலும் நடத்தும் அரசு தேர்வுகளின் ஒரே நோக்கம், மாணாக்கர்களின் சாதனைகளை, எவ்வளவு கற்றுக் கொண்டார்கள், எவ்வளவு செரித்துக் கொண்டார்கள் என்பதை மதிப்பிடுவதாகும் என்பதை நாம் தெளிவாக மனதிற் கொள்ள வேண்டும்.

# பாட நூல்களும் பிற படிப்புச் சாதனங்களும்

மொத்த குடி மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர், முழு நேரமோ, பகுதி நேரமோ, ஓய்ந்த நேரமோ; மாணவர்களாக இருக்கும் மாபெரும் நாட்டிற்குப் பல்வேறு பாடங்களுக்கும் பல்வேறு மட்டங்களிலும் மலையெனப் பாட நூல்கள் தேவைப்படும். அக்டோபர் புரட்சியினைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் நடைபெற்ற, சமூகக் கலைப் புரட்சியின் விளைவாக, சோவியத் ஒன்றியம் முழுவதுமே படிப்பாளிகள் நாடாகி விட்டதால், பொது நூல்களின் தேவை, முன்னறியாத அளவு பெரிதாகி விட்டது. வெவ்வேறு வயதுப் பிரிவினருக்கு வேண்டிய நூல்களின் தேவை வளர்ந்து கொண்டே இருக்கிறது. இருப்பினும், சோவியத் அரசு அத்தேவையை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. முன்னர் ஓர் அதிகாரத்தில் குறிப்பிட்ட படி, உலகில் வெளியாகும் நூல்களில் நான்கில் ஒன்று சோவியத் நூலாக உள்ளது.

நூல்கள், மாபெரும் சக்தியாகும் என்பதை, சோவியத் ஆட்சியை நிறுவிய லெனின் முழுமையாக உணர்ந்திருந்தார். எனவே, முடிந்த அளவு விரைவாக, பொது மக்களுக்கு நூல்கள் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று முதல் சோவியத் மக்கள் கல்வி ஆணையரான (அமைச்சரான) அனதோலி லூனசார்ஸ்கியிடம் லெனின் கூறினார். இரஷ்ஷியா முழுவதிலும் முடிந்த அளவு அதிக எண்ணிக்கையில் நூல்களை வினியோகிக்க வேண்டும் என்றார்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மக்களுடைய நூல் தேவையை முழுமையாக நிறைவேற்றும் பொருட்டு,

அரசே, பாட நூல்கள் உட்பட, எல்லா நூல்களையும் வெளியிட்டு விற்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. சோவியத் ஒன்றியத்தில் நூல்கள் வெளியிடும் விற்பனையும் தனியார் வாணிகத்துறையில் இல்லை. அரசு வேண்டிய நூல்களை தன்னாட்சி உரிமைபெற்ற வெளியீட்டு நிறுவனங்களைக் கொண்டு வெளியிடுகிறது. சோவியத் நாடு பூராவிலும் 228 வெளியீட்டு நிறுவனங்கள் உள்ளன. இவை ஏதோ சில ஒன்றியக் குடியரசுகளோடு நிற்கவில்லை. மாறாக எல்லாக் குடியரசுகளிலும் தன்னாட்சிப் பகுதிகளிலும் இயங்குகின்றன. சோவியத் நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் பாட நூல்கள், பொது நூல்கள், விஞ்ஞானக் கற்பனைகள், புதினங்கள், பாடற் கொத்துகள், சிறுகதைத் தொகுப்புகள் சமூக பொருளியல் பற்றிய நூல்கள் ஆகியவை ஏராளமாக வெளியிடப்படுகின்றன. 1968 ஆம் ஆண்டு, 75,699 தலைப்பு நூல்கள் வெளியாயின. அந்த ஆண்டு வெளியான எல்லா நூல்களின் மொத்தப் பிரதிகள் 133 கோடி 40 இலட்சம் ஆகும். இவற்றில் பாட நூல்கள் 9,763 தலைப்புகளில் வெளியாயின. அவற்றின் கூட்டு மொத்தம் 39 கோடிகளாகும்.

சிறுவர்களுக்கான பாடநூல்கள், இலக்கியம் பற்றி பெருமை கொள்ள சோவியத் ஒன்றியத்திற்கு உரிமை உண்டு. வெளியாகும் ஒவ்வொரு பாட நூலும் பல-பத்தாயிரக் கணக்கில் வெளியாகிறது. இத்தனை பெருமளவில் அச்சிடுவதால் அடக்க விலை குறைகிறது. வெளியீட்டுத் தொழிலில், இலாபக் கண்ணோட்டம் ஒழிக்கப்பட்டுவிட்டது. பாட நூல்களின் விலை குறைவாயிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். சோவியத் பள்ளிகளில் பயன்படுத்தும் பாட நூல்களை மிகக் கவனமாகத் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள். எந்த வயதினருக்காக எழுதப்படுகிறதோ அந்த வயதினருக்குப் பொருத்தமான நடையில் எழுதுகிறார்கள். நூல்கள் சிறந்த உருவமைப்பும் கவர்ச்சியான தோற்றமும் கொண்டு வெளியாகின்றன. கீழ் வகுப்புகளுக்கான நூல்கள் உயர்ந்தரக காகிதத்தில் அச்சிடப்படுகின்றன; பல வண்ணப் படங்கள் நிறைந்துள்ளன.

ஆகவே அவற்றின் அடக்கவிலை அதிகமாகும். ஆயினும் விற்பனை விலை குறைவாக இருக்கும். மேல் வகுப்பு நூல்களில் கட்டமைப்பைக் காட்டிலும் உட்பொருளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அவற்றை அடக்கவிலைக்கு மேற்பட்ட விலையில் விற்கிறார்கள். மொத்தத்தில் விற்பனை வருவாய், வெளியீட்டுச் செலவைக் கட்டிப் போகிற வகையில், வெளியீட்டு நிறுவனங்கள் விலைகளை முடிவு செய்கின்றன. எல்லாவற்றையும் மதிப்பிட்டால் நூல்களின் விலை அதிகமல்ல; உலகத்தில் மிக மலிவான நூல்கள் அவையே. ஆயினும் நெடுங்காலம் கிழியாதிருக்கும்படி கட்டமைத்து நல்ல 'பைண்ட்' செய்கிறார்கள். தங்கள் நூல்களை எப்படிக் கையாள்வது என்பதையும் அவற்றை ஒழுங்காக துப்புரவாக வைத்துக் கொள்ளவும் பள்ளிக்கூடங்கள் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றன.

பள்ளிக்கூடப் பாட நூல்களை மூன்று வழிகளில் ஆயத்தம் செய்கிறார்கள். திறந்த போட்டி முறை முதல் வழி. குறிப்பிட்ட பாட நூல்களுக்கான கையேட்டுப் பிரதிகளை அனுப்புமாறு விளம்பரம் செய்வார்கள். அத்தகைய விளம்பரம் பரவலாக வெளியிடப்படும். சாதாரணமாக ஓர் ஆண்டு தவணை கொடுத்து, கையேடுகளைக் கேட்பார்கள்.

கல்வி அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட பாட வல்லுநர்களும் கல்வியாளர்களும் அடங்கிய குழு கையேட்டுப் பிரதிகளை மதிப்பிட்டு, ஒன்றை ஏற்றுக்கொள்ளும்படி பரிந்துரைக்கும். பிறகு, தக்க படங்களோடு, பாட நூலாக, அதை அச்சிட வெளியீட்டு நிறுவனம் ஏற்பாடு செய்யும்.

அடுத்த வழி 'கட்டுப் படுத்தப்பட்ட போட்டி'யாகும். சில பொறுக்கியெடுக்கப்பட்ட நிபுணர்களும் எழுத்தாளர்களும் விஞ்ஞான நிறுவனங்களும் நிலையங்களும் பாடநூலை எழுதுமாறு அழைக்கப்படுவார்கள். வரும் கையேட்டுப் பிரதிகளை வல்லுனர் குழு மதிப்பிடும். பிறகு, திறந்த போட்டியில் மேற் கொள்ளும் நடவடிக்கைகள் இதிலும் மேற் கொள்ளப்படும்.

மூன்றாம் முறை குறிப்பிட்ட ஒரு எழுத்தாளரையோ விஞ்ஞான அமைப்பையோ பாட நூலெழுதுமாறு அழைத்தல். வல்லுனர்கள் அதைத் தகுதியானது என்று மதிப்பிட்டால் அதை ஏற்றுக்கொண்டு வெளியிடுவார்கள்.

பாடநூல் எழுதுவோருக்கு நிறையப் பணம் கொடுக்கிறார்கள். பல்கலைக் கழகங்களிலும் உயர் கல்வி நிலையங்களிலும் பணிபுரியும் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், பிற வல்லுனர்கள், ஆகியோரும் பாட நூல்களை எழுதுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

பாட நூல் எழுதுவது, பிற கல்வி ஆய்வுகளுக்குச் சமமாக மதிக்கப்படுகிறது.

வெளியீட்டு நிறுவனங்கள், பாட நூல்களை வெளியிடுவதோடு, பல்வேறு பள்ளிப் பாடங்களைக் கற்பிப்பதைப் பற்றி வழிகாட்டும் நூல்கள் பலவற்றை வெளியிடுகின்றன.

அரசின் வெளியீட்டுக் கழகம், கல்வி விஞ்ஞானக் கழகம், ஆசிரியர்கள் தொழிற் சங்கம் ஆகிய பல அமைப்புகள் பலவிதமான பாட போதனைச் சஞ்சிகைகளை வெளியிடுகின்றன. ஆசிரியர்களும் கல்வி ஊழியர்களும் தங்கள் தொழில் திறனில் வளர்வதற்கு, இத்தகைய சஞ்சிகைகள் வழி செய்கின்றன. சோவியத் கல்வியின் கூறுகளில் எதுவும் இச்சஞ்சிகைகளால் விடப்படுவதில்லை. இவை, விரிவிலும் வகையிலும் சுவையுள்ளவை. பாட போதனை பற்றி எழுதும் 48 சஞ்சிகைகள் உள்ளன. எண்ணற்ற பிரதிகள் வெளியிடும் அநேக சஞ்சிகைகளோடு, துண்டு வெளியீடுகள், விதி முறை நூல்கள் முதலியன வெளியிடப்படுகின்றன.

நாடு முழுவதிலும் உள்ள கல்வி நிலையங்கள், நூலகங்கள் முதலியவற்றிற்கு ஒழுங்காக அனுப்பப்படும் கல்வி கற்பித்தலைப் பற்றிய வெளியீடுகளின் பெருக்கம், சோவியத் கல்வி முறை எவ்வளவு அக்கறையோடு செயல்படுகிறது என்பதற்கு சான்றாக இருக்கிறது.

இளைஞர்களுக்குக் கிடைப்பவை பாட நூல்கள் மட்டுமல்ல. சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆன இலக்கியம் பற்றி, அவற்றின் கலை, சமுதாய இயல், ஒழுக்க இயல் சிறப்பு பற்றி சோவியத் ஒன்றியம் பெருமைப்படுவதற்கு நியாயம் இருக்கிறது. சோஷலிசக் கலை வளர்ச்சி வரலாற்றின் ஒளிவிடும் பகுதி, குழந்தைகளுக்காக ஏராளமான நூல்களை வெளியிடுதல் ஆகும். சோவியத் குழந்தை இலக்கியம், உண்மையிலேயே, பல தேசிய இலக்கியங்கள் கொண்டதாகும். அநேக தேசிய இனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள், படம் வரைவோர்கள், நூல் அமைப்போர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் குழந்தை இலக்கியத்தை உருவாக்கி வருகின்றனர். சோவியத் குழந்தை இலக்கியத்தில், தேசிய உணர்வு உண்மையில் வீசுகிறது. இது, குடிமை உணர்வை வளர்க்கிறது; இது வாழ்க்கை உண்மைகளைச் சார்ந்துள்ளது; மேலும் மனித பாசத்தை வளர்க்கிறது.

சிறுவர் இலக்கியத்தில் சிறப்பாக ஈடுபட்டுள்ள, 100-க்கு மேற்பட்ட வெளியீட்டு நிறுவனங்கள், ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 2,000 தலைப்புகளில் சிறுவர்களுக்கான நூல்களை வெளியிடுகின்றன. இவற்றின் மொத்தப் பிரதிகள் 20 கோடிகள் ஆகின்றன. சிறுவர் இலக்கியத்தில், பண்டையப் பெருங் காப்பியங்கள், நாட்டு மக்கள் இலக்கியம், செய்யுட்கள், சிறு கதைகள், வன தேவதைக் கதைகள் ஆகியவை அடங்கும். பள்ளிக்கு முந்திய வயதுக் குழந்தைகளுக்கும் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கும் ஆன நூல்களை சோவியத் எழுத்தாளர்களும் பிற நாட்டு எழுத்தாளர்களும் எழுதியிருக்கிறார்கள். சோவியத் சிறுவர் இலக்கியம் பல்பொருள் பற்றியது; பல்சுவையுடையது ஆகும். சோவியத் சிறுவர் இலக்கியத்தில் புதினங்கள், செய்யுட் திரட்டுகள், பலரும் விரும்பும் விஞ்ஞானம், விஞ்ஞானக் கதைகள், வரலாறு, புகழ் பெற்றவர்கள் வாழ்க்கை வரலாறுகள், மக்கள் விரும்பும் வரிசைகள் ஆகியவற்றைக் காணலாம். மிகப் பெரிய, சிறுவர் இலக்கியக் கருவூலத்தின் குறிக்கோள்

ஒன்றேயாகும். மனித பாசமும் அனைத்துலக நோக்கும் கொண்ட புதிய மனிதனை உருவாக்குவதும் குறிக்கோள் ஆகும். அந்தப் புதிய மனிதன் அமைதிக்கும், நன்மைக்கும் காவலனாக விளங்குவான்.

சோவியத் இளைஞர்களுக்கு நிறைய சஞ்சிகைகள் உள்ளன. சிறுவர்களுக்கு 38 சஞ்சிகைகளும் இளைஞர்களுக்கு 39 இதழ்களும் வெளி வருகின்றன. இவை அனைத்தையும் சேர்த்தால், ஆண்டுதோறும் 28 கோடி 70 இலட்சம் பிரதிகள் வெளியாவதாகக் கணக்காகின்றது. 26 பயனீர் செய்தித்தாள்களும் 115 கம்சோமால் (இளம் கம்யூனிஸ்டுகள்) செய்தித்தாள்களும் வெளியிடப்படுகின்றன. இவற்றின் ஓராண்டு மொத்தப் பிரதிகள் 4400 கோடிகள் ஆகும். 'வேடிக்கைப் படங்கள்' என்னும் சஞ்சிகை, பொடிப் பிள்ளைகளுக்காக வெளியிடப்படுகிறது. அதன் வெளியீடு 13 இலட்சம் பிரதிகள்.

சோவியத் ஒன்றியத்திலுள்ள ஏராளமான தேசிய இனங்களின் இலக்கியங்களை வளர்க்கும் அதே நேரத்தில், அவை ஒன்றையொன்று வளப்படுத்தும் திருப்பும் முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன. நல்ல நூல் ஒன்று முதலில் எம்மொழியில் வெளியானாலும், விரைவில் எல்லார்க்கும் கிடைக்கும். அதாவது பல மொழிகளில் வெளியாகும். ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியில் நூல்களைப் பெயர்க்கும் பணி, சோவியத் ஒன்றிய மொழிகளோடு நின்று விடவில்லை. ஆண்டுதோறும் பிற நாட்டு மொழிகளிலிருந்து பெயர்த்து வெளியிடுவதில், சோவியத் ஒன்றியமே முதல் இடம் பெற்றுள்ளது.

# ஆசிரியர் பயிற்சி

எந்தக் கல்வி முறையிலும் ஆசிரியருடைய பங்கே முக்கியமானது. ஆசிரியருடைய பொதுக் கல்வி, தொழிற் கல்வி, அவருடைய ஆர்வம், அவரது போக்கு, அவருடைய ஆளுமை ஆகியவை கல்வியின் விளைவை முடிவு செய்யும். சோவியத் ஆசிரியர்களின் பொதுக் கல்வித் தகுதியானது தொடர்ந்து உயர்ந்து வருவது, சோவியத் கல்விக்கு வெற்றியையும் பரவசப்படுத்தும் சாதனைகளையும் கொடுத்திருக்கிறது. சோவியத் ஆசிரியர்கள் கல்வியின்பால், ஆக்க உணர்வு கொண்டுள்ளார்கள்; கல்விக் கட்டமையில் அதிகப் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இவற்றால் நல்ல வெற்றியும் நிறை பலனும் பெறுகிறார்கள்.

ஆசிரியருடைய திறமை அவர் பெற்றுள்ள தொழிற் பயிற்சியைப் பொறுத்ததாகும். சோவியத் ஒன்றியத்தில், ஆசிரியர் பயிற்சியின் எல்லாக் கூறுகளையும் கவனமாகப் பார்த்து ஏற்பாடு செய்துள்ளார்கள். சோவியத் கல்வி முறையில் ஒளியிடும் கூறு, அதனுடைய உயர்ந்த தரமாகும். இது எப்படி சாத்தியமாயிற்று?

கல்வியின் தரத்தை மேலும் மேலும் உயர்த்துதல், காலத்தின் கட்டாயமாகிறது. அதைச் சமாளிக்கும் ஆற்றல் பெறும் அளவிற்கு, ஆசிரியர்களையும் கல்வி நிர்வாகிகளையும் பயிற்றுவிப்பது பல்லாண்டுகளாக பெரிதும் கவனிக்கப்பட்டு வந்துள்ளதே, உயர்ந்த தரத்தை அடைய உதவிற்று.

'கல்விப் பெருக்கமும் கல்வியின் தர உயர்வும் ஒன்றோடு ஒன்று போட்டியிடுபவை; ஒன்றைப் பெற்றால் மற்றொன்றை இழக்க நேரிடும்', என்று சோவியத் கல்வியாளர்கள் கருதவில்லை. இரண்டும் ஒரே இயக்கத்தின், பிரிக்க

முடியாத இரு கூறுகளாகவே சோவியத் கல்வியாளர்களின் பார்வையில் தென்படுகிறது. இது சரியே. சோவியத் கல்வி வரலாற்றின் எந்தக் காலத்திலும், கல்வியைப் பரப்புவதற்காக, கல்வியின் தரத்தை கைவிட்டு விடவில்லை. கல்வியின் பலனும் தன்மையும் ஆசிரியர்களுடைய பயிற்சியாலும் மறு பயிற்சியாலும் முடிவாவதாக சோவியத் கல்வியாளர்கள் கருதுகிறார்கள். பயிற்சியின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் உணர்ந்து இருப்பதால், பொறியாளர்களையும் மருத்துவர்களையும் பயிற்றுவிப்பதில் காட்டும் அதே முக்கியத்தை சோவியத் கல்வித் திட்டம் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கும் கொடுக்கிறது. ஆசிரியப் பயிற்சி ஏற்பாட்டில் இரு சிறப்புக்களைக் காணலாம். ஆசிரியப் பயிற்சி இடையறாது நடக்க வேண்டும்; பணியில் சேர்வதற்கு முன்பும், பணியிடையும் பயிற்சி தேவை; இவற்றைக் கருத்தில் கொண்டு, பணியிடை பயிற்சி நிலையங்களையும் பணிக்கு முந்திய பயிற்சி நிலையங்களையும் தனித் தனியே, நாடு தழுவ அமைத்துள்ளார்கள். இது ஒரு சிறப்பு. அடுத்த சிறப்பு என்ன? கல்வியை நிர்வகிப்போருக்காக, அவர்களுக்கென்றே அமைக்கப்பட்டுள்ள, வேறு வகையான பயிற்சி நிலையத் தொடர்களில் தனிப் பயிற்சியினை ஏற்பாடு செய்துள்ளது ஆகும். கல்வித் துறையில் மாறுதல்களை ஏற்படுத்தும் போது, ஆசிரியர்களும் கல்விக் கண்காணிப்போர்களும் ஒரே கண்ணோட்டத்தில், அம் மாறுதல்களை அணுகுவதற்கு இம்முறை உதவியாகிறது.

இன்று, சோவியத் ஒன்றியத்தின் கல்வி அமைப்பில் ஏறக்குறைய 27 இலட்சம் பேர்கள் ஆசிரியப் பணி புரிகிறார்கள். அக்டோபர் புரட்சிக்கு முன்பு 2 இலட்சத்து அறுபது ஆயிரம் பேர்களே நாடு முழுவதிலும் ஆசிரியர்களாக இருந்தார்கள். ஜார் ஆண்ட காலத்தில் இரஷ்ஷிய பல்கலைக் கழகங்களில், ஆசிரியப் பயிற்சிக்கென்று தனி ஏற்பாடு இல்லை. உயர்நிலைப் பள்ளிகள் தொழிற் பள்ளிகள், சிறப்பு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு சாதாரண பல்கலைக் கழகப் பட்டதாரிகளையோ பெண்களுக்கான உயர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்றவர்களையோ

ஆசிரியர்களாக நியமித்தார்கள். பெண்களுக்கென்று இரண்டு ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளே இருந்தன.

சோவியத் ஆட்சி, இளம் பருவத்திலேயே சமாளிக்க வேண்டியிருந்த மிகக் கடினமான பிரச்சினைகளில் ஒன்று, முந்திய இரஷ்ஷியப் பேரரசில் குடி மக்கள் அனைவரும் தற்குறிகளாகவும் கலை நிலையில் பின்னடைந்தும் இருந்த பகுதிகளில் பள்ளி ஆசிரியர்களைக் கண்டுபிடிப்பதாகும். நாட்டின் பல்வேறு பகுதிகள், கல்வியில் அடைந்துள்ள வெவ்வேறு நிலை வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, நீக்குப் போக்கிற்கு இடமளிக்கும் வெவ்வேறு நடவடிக்கைகளை சோவியத் அரசு மேற்கொண்டது. அவ்வழிகளில், எல்லார்க்கும் கல்வியை எட்ட வைப்பதில் வெற்றி பெற்றது.

ஒவ்வோர் ஒன்றியக் குடியரசும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளை அமைத்தது. சூழ்நிலையின் கட்டாயத்தால், குறுகிய கால ஆசிரியப் பயிற்சி முறைகளும் மேற் கொள்ளப்பட்டன. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பகுதிகளிலும் ஆசிரியப் பயிற்சி தொடக்க நிலையில் இருந்த பகுதிகளிலும் மற்றவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் அனுபவம் மிகுந்த ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. இது தொல்லையாக இருந்தது. சில ஒன்றியக் குடியரசுகளிலும் தன்னாட்சி குடியரசுகளிலும் சமயப் பழக்கமும், வழி வழி வந்த வெறுப்புகளும் பெண்கள் ஆசிரியப் பயிற்சிக்கு வர முடியாதபடி தடைக் கற்களாயின. இவற்றைச் சமாளிக்கும் பொருட்டு, பெண்கள் மட்டுமே பயிலும் ஆசிரியப் பள்ளிகளும் நிலையங்களும் நிறுவப்பட்டன.

இப்போது, சோவியத் கல்வி நிலையங்களுக்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில், 411 ஆசிரியப் பள்ளிகளும், 205 ஆசிரியக் கல்விக் கழகங்களும் ஈடுபட்டுள்ளன. எல்லா ஒன்றியக் குடியரசுகளும் தங்கள் தேவைகளுக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்றன. இரஷ்ஷிய கூட்டாட்சிக் குடியரசைச் சேர்ந்த 16 தன்னாட்சிக் குடியரசுகளில் ஆசிரியப் பள்ளிகள் வலை விரித்தாற்போல் இயங்குகின்றன. மற்ற கல்வி நிலையங்களில் நடப்பது போல், ஆசிரியப்

பயிற்சி நிலையங்களிலும் தாய்மொழி மூலம் பயிற்சி கொடுக்கிறார்கள். ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள், கழகங்கள் போக, சோவியத் பல்கலைக் கழகங்களும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கான ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கின்றன.

பள்ளிக்கூடங்களுக்கான ஆசிரியர்களை, பெரும்பாலும் மூன்று வகை நிலையங்களில் பயிற்றுவிக்கிறார்கள். அவை யாவன:

**(1)** கிண்டர் கார்டன் பள்ளிகளுக்கும், தொடக்க வகுப்புகளுக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் போதனா முறைப் பள்ளிகள்.

**(2)** ஐந்தாம் படிவம் முதல் பத்தாம் படிவம் வரைக்குமான ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் கல்விப் பயிற்சிக் கழகங்கள்.

**(3)** பல்கலைக் கழகங்கள்.

இசை ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கத் தனிப் பள்ளிகளும், உடற் பயிற்சி ஆசிரியர்களை ஆயத்தம் செய்யும் விளையாட்டுப் பள்ளிகளும், கழகங்களும் நடக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை பெரிதல்ல.

ஆசிரியர்களுடைய தகுதியை அளப்பதற்கு இரு அளவு கோல்கள் உள்ளன. பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் பயிற்சி பெறாத ஆசிரியர்களும் எந்த விழுக்காட்டில் இருக்கிறார்களென்று பார்ப்பது ஒன்றாகும். ஓரளவு பயிற்சி பெற்றிருந்தாலும், முழுத் தகுதி பெறாதவர்களும், முழுத் தகுதி பெற்றவர்களும் என்ன விழுக்காட்டில் உள்ளார்கள் என்று மதிப்பிடுதல் மற்றோர் அளவுகோலாகும்.

சோவியத் பள்ளி அமைப்பில், 'பயிற்சி பெறாத ஆசிரியர்கள்' என்னும் விவகாரமே இல்லையென்று சொன்னால், அது மிகையாகாது. போதிய தகுதியைப் பெறாதவர்கள், மறு பயிற்சிகளும், உயர் தகுதிகளும் பெறுவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. அறுபதுகளின் தொடக்கத்தில், முதல் நான்கு வகுப்புகளின் ஆசிரியர்கள் செகண்டரி ஆசிரியப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்; ஐந்

தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கற்பிப்போர், ஆசிரியப் பயிற்சிக் கழகத்திலோ பல்கலைக் கழகத்திலோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்பது விதி.

செகண்டரி பயிற்சிப் பள்ளிகளில், எட்டாம் வகுப்பு தேறியவர்கள் சேரலாம். அவர்கள் நான்காண்டு படிக்க வேண்டும். பத்தாவதில் தேர்ச்சி பெற்றவர்களும் சேர்க் கப்படுவார்கள். அத்தகையோரின் பயிற்சிக் காலம் ஈராண்டுகள் ஆகும். செகண்டரிப் பயிற்சிப் பள்ளிகளில் பயில்வோர், பொது உயர் பள்ளிக் கல்வியும் கற்பிக்கும் முறைக் கல்வியும் பெற்று, தொடக்கப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் ஆவார்கள்.

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் எல்லோர்க் கும் பயிற்சிக் காலத்தில் உதவிப் பணம் உண்டு. பயிற்சி யும் பிற வசதிகளும் இலவசம்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் எல்லாப் பாடங்களை யும் கற்பிக்க வேண்டியிருப்பதால், இந்நிலைப் பயிற்சிப் பள்ளிகளில், எப்பாடத்திலும் சிறப்புப் பயிற்சி அளிப்ப தில்லை. இசை, உடற் பயிற்சி, படம் போடுதல் எல்லோர்க் கும் கட்டாயம். இலக்கியப் பாடத்தில் சிறுவர் இலக்கி யத்தைக் கற்றலும் சேர்ந்துள்ளது.

பயிற்சியின் முடிவில், எல்லோரும் அரசின் தேர்வு எழுத வேண்டும். அதில், இரஷ்ஷிய மொழி நீங்கலான, பிற எல்லாத் தேர்வுகளும் வாய்மொழியாகவே நடக்கும்.

ஆசிரியப் பயிற்சிக் கழகங்கள், பல்கலைக் கழகக் கல் விக்கு ஒப்பான பயிற்சியைக் கொடுப்பவை. பல்கலைக் கழகங்களுக்குச் சமமான மதிப்பு இவற்றிற்கும் உண்டு. தொழிற் பயிற்சி பெருமலே எவரும் ஆசிரியராக இருக்க லாம் என்று கொள்கை அளவிலோ, நடைமுறையிலோ சோவியத் நாடு ஒப்புக் கொள்வதில்லை.

பயிற்சிக் கழகங்கள் ஐந்தாம் வகுப்பிலிருந்து பத் தாம் வகுப்புவரை பாடஞ் சொல்லும் ஆசிரியர்களை ஆயத் தம் செய்கின்றன. பள்ளிகளுக்குத் தேவையான எல்லா சிறப்புப் பாடங்களுக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பது,

இவற்றின் வேலை. உயர்நிலைப் பள்ளித் தேர்ச்சி, நுழைவுத் தகுதியாகும். பயிற்சிக் கழகங்களில் சேர்ப்பதற்கு நுழைவுத் தேர்வு நடத்துகிறார்கள். ஒரு பாடத்தில் சிறப்புப் பயிற்சி பெறும் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். இரு பாடங்களில் சிறப்புப் பயிற்சி பெற ஐந்தாண்டு பயில வேண்டும்.

பயிற்சிக் கழகங்களின் பாடத் திட்டத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன. சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு, நாட்டுப் பொருளியல், வரலாற்று ரீதியாகவும், தர்க்க ரீதியாகவுமான லோகாயுதம், உடற் பயிற்சிக் கல்வி, அயல் மொழி ஒன்று ஆகியவை ஒரு பிரிவில் அடங்கும்.

கல்வியோடு தொடர்புடைய உளவியல், கற்பிக்கும் கலை, பள்ளித் துப்புரவு, கற்பிக்கும் கலையின் வரலாறு ஆகியவை இரண்டாம் பிரிவில் சேரும்.

மூன்றாவது பிரிவில், மாணுக்கர் சிறப்புப் பயிற்சி பெறப்போகும் பாடம் அல்லது பாடங்கள், அதை அல்லது அவற்றைக் கற்பிக்கும் வழி முறைகள் இருக்கும். பயிற்சியின் முதுகெலும்பாக இருப்பது, பாடம் நடத்திப் பழகுதலே. பழகுதல், பயிற்சி முழுவதும் நடக்கும்.

கழகங்கள் அரையாண்டு அடிப்படையில் செயல்படுகின்றன. ஒவ்வோர் அரையாண்டின் முடிவிலும் தேர்வுகள் உண்டு. இத்தேர்வுகள் கழகங்களால் நடத்தப்படுபவை. இவை, வாய்ச் சொல்லாகவும், எழுத்து வழியும் நடக்கும். கடைசி ஆண்டின் முடிவில், அரசு நடத்தும் தேர்வுகள் உண்டு.

கல்விப் பயிற்சிக் கழகங்கள், மேற்பட்டப் படிப்பிற்கும் வழி செய்துள்ளன. கழகங்களில் பயில்வோரில், நூற்றுக்கு எழுபது முதல் எண்பது வரை பெண்கள் உள்ளார்கள். பயிற்சி இலவசம்; அதோடு எல்லாப் பயிற்சியாளர்களுக்கும் உதவித் தொகை உண்டு. அது முதல் ஆண்டில் ஒன்றாகவும் அடுத்த ஆண்டுகளில் உயர்ந்து கொண்டும் இருக்கும்.



4 - JUL 1978

சோவியத் ஆசிரியர், சமுதாயத்தில் மதிக்கப்படுகிற உறுப்பினர். சமமான படிப்பும், பயிற்சியும் உடைய பிற அலுவலர்களோடு ஒப்பிடும் போது ஆசிரியர்களின் சம்பள விகிதம் நன்றாக இருக்கிறது.

பயிற்சி பெற்ற ஒவ்வொருவருக்கும் வேலை உறுதி; தகுதியை உயர்த்திக் கொள்ள வாய்ப்புகள் ஏராளம். கழகங்களின் மாலைப் படிப்புத் துறைகளிலும், சக பாடத் துறைகளிலும் அதிகப்படியான பயிற்சி பெறும்படி கல்வி ஆட்சித் துறைகள் ஆசிரியர்களை ஊக்குவிப்பதோடு, தேவையான சூழலையும் உருவாக்கித் தருகின்றன. கூடுதல் விடுப்பு, பயணச் செலவை ஏற்றுக் கொள்ளல், பகுதி நேர, அஞ்சல் வழி மாணாக்கருக்கு, பள்ளிக்கூடங்களில் கூடுதல் வேலை கொடாதிருத்தல் போன்ற சலுகைகளை வழங்குகிறார்கள். ஆசிரியப் பயிற்சிக் கழகங்களில், பகுதி நேரப் படிப்பிற்கும், அஞ்சல் வழிப் படிப்பதற்கும் சேர்ந்திருப்பவர்களில் முக்கால் பகுதியினர் ஆசிரியர்கள் ஆவார்கள். தகுதிக்கேற்ற சம்பளம் கொடுப்பதன் மூலம், ஆசிரியர்கள் அப்போதைக்கப்போது தங்கள் தகுதிகளை உயர்த்திக் கொள்ளுமாறு, அரசு ஊக்கப்படுத்துகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வோர் ஆசிரியரும் மறு பயிற்சி பெற வேண்டும். உரிய மறு பயிற்சியைப் பெற்ற பிறகே, ஆசிரியர் அந்நிலைக்கான சம்பள உயர்வைப் பெறலாம். பெற்ற பட்டங்கள் எவ்வளவு பழையதோ, அவ்வளவிற்கு அவை கல்வித் தரத்தைப் பொறுத்தமட்டில் மதிப்புக் குறைந்தவை என்பது சோவியத் கல்வியாளர்களின் சரியான நம்பிக்கை. நாடு முழுவதிலும் பணியிடைப் பயிற்சிக்கான வாய்ப்புகள் போதுமான அளவு உண்டு.

சோவியத் ஒன்றியத்தில், கவனிப்பாரற்றுக் கிடக்கும் தொழிலாளிகள் இல்லை. சோவியத் சமுதாயம் ஆசிரியர்களை மதிக்கிறது; அவர்களோடு ஒத்துழைக்கிறது; தாராளமாகவே ஊதியம் அளிக்கிறது. கல்வி முயற்சிகளில் காணும் வெற்றிகளுக்காக, அரசின் மிக உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் பெறுகிறார்கள். 2 இலட்சத்து 50

உயிரியல், நுட்ப இயல் ஆகியவற்றில் பற்றுள்ள இளைஞர் சங்கங்களை நிறுவி, இளைஞர்களிடம் உள்ள சிறப்பு அறிவினை கண்டுபிடித்து வளர்க்க வேண்டும். கணிதம், பௌதிகம் வேதியல், உயிரியல் ஆகியவற்றில் அசாதாரணப் பற்றும் கெட்டிக்காரத்தனமும் உடைய இளைஞர்களுக்காக தனிப் பள்ளிகளை நிறுவுவதைப் பற்றி சிந்தனை செலுத்த வேண்டும்.''

பல்வேறு பாடங்களிலும், நடவடிக்கைகளிலும் போட்டிகள் நடத்தி, அவற்றின் அடிப்படையில் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. பிராந்தியப் போட்டிகள் உண்டு ஒன்றியப் போட்டிகளும் உண்டு. அவை நன்ருக விளம்பரப் படுத்தப்படும். பள்ளிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களைப் பள்ளியின் அறிவிப்புப் பலகையில் பார்வையில் வைப்பார்கள். பிராந்திய, இராசிய, ஒன்றியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் புகைப் படங்களை சிறுவர் பூங்காக்களில் காணலாம். இப் பந்தயங்கள், கெட்டிக்காரப் பிள்ளைகள் முழு சக்தியோடு முயலவும், ஆசிரியர்கள் திறமைகளை அடையாளம் கண்டு கொள்ளவும் உதவுகின்றன.

உறங்கிக் கொண்டிருக்கும் திறமைகளைத் தூண்டவும் இளைஞர்களின் விருப்பங்களையும், அவாக்களையும் வளர்க்கவும் சோவியத் சமுதாயத்தில் நிலவும் போட்டிச் சூழல் துணையாகிறது. வெவ்வேறு வகையான திறமை மிகுதியை அடையாளம் கண்ட பின், அவற்றைச் சிறப்பாக வளர்க்க அரசு ஏற்பாடு செய்கிறது. திறமையை இளமையிலேயே அடையாளம் கண்டு போதியபடி வளர்க்கும் வழிகள் வகுக்க வேண்டும் என்னும் அடிப்படையில், இசை, நாட்டியம், கலை, விளையாட்டுகள், கணக்கு, அயல்மொழி ஆகியவற்றில், மிகு திறன் படைத்தவர்களுக்காக, சிறப்புப் பள்ளிகளை நடத்துகிருர்கள். இவற்றிற்கான அனைத்து ஒன்றியப் போட்டிகளில் வெற்றி பெற்றோரும், மேல் வரிசையில், இருப்போரும் இத்தகைய பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அப்படிச் சேர்க்கப்படுபவர்கள்

ட்டின் பல பகுதிகளையும் சேர்ந்தவர்களாக இருக்கிறார்
ள். மேல் வரிசைக்கு வருவோர் எல்லோரும் நகரத்தவர்
ள் அல்லர்; குறிப்பிட்ட ஓர் அல்லது சில பிராந்தியங்களைச்
ர்ந்தவர்களும் அல்லர். சோவியத் ஒன்றியம் விரிந்து
ரவியுள்ளது போன்று, மிகு திறன்களும் எல்லாப் பக்கங்
ளிலும் பரவியுள்ளன.

மிகு திறன் உடையவர்களுக்காக நடத்தப்படும்
றப்புப் பள்ளிகள், அநேகமாக உறையுள் பள்ளிகள் ஆகும்.
தாரணப் பள்ளிகளின் வேலை நேரத்தைக் காட்டிலும்
ண்டதாக, இவற்றின் வேலை நேரம் இருக்கும். மற்ற
பாதுக் கல்விப் பள்ளிகளில் பெறும் அதே அளவு பொதுப்
யிப்பை இப்பள்ளிகளிலும் பெறுவதோடு, எந்தப் பாடத்
ல் திறமை மிகுந்திருக்கிறதோ, அதில் அதிகம் கற்க
கை செய்யப்படுகிறது. சிறப்புப் பள்ளிகள் உறையுள்
ள்ளிகளாக இருந்து, அதிக நேரம் செயல்படுவதால், இது
த்தியமாகிறது.

மேல் வரிசையை எட்டும் மிகு திறன்களை மட்டுமல்
து, அவ்வளவுக்கு எட்டாத இளைஞர்களின் திறமைகளை
ம் வளர்க்க வேண்டுமென்று சோவியத் கல்வியாளர்கள்
ணர்கிறார்கள். சோவியத் ஒன்றியத்திலுள்ள எல்லாக்
ல்வி நிலையங்களிலும் இவ்வுணர்விற்கு உருவம் கொடுத்
ள்ளார்கள். சோவியத் ஒன்றியத்தில், வகுப்பறைப்
டங்கள், சோதனைக்கூட வேலைகள், விளையாட்டுத் திடல்
டவடிக்கைகள் ஆகியவை மட்டும் கல்வியை வளர்க்கவில்லை.
சோவியத் குடும்பமும் சமுதாயமும் கல்விச் செல்வாக்கு
டையன. இவ்விரு அமைப்புகளும் ஆசிரியர்களுக்கு
க்க பலமாக நின்று, அவர்களைப் பயன் உள்ள வகையில்
ரித்து, கல்விக்கு உறு துணைகளாக அமைந்துள்ளன.
ண்டின் தொடக்கத்தில், எல்லாப் பெற்றோர்களும் கூடித்
ர்ந்தெடுக்கும் பெற்றோர் குழு, ஒவ்வொரு பள்ளியிலும்
றுசுறுப்பாகச் செயல்படுகிறது. இக்குழுக்கள் ஒழுங்
காகக் கூடுகின்றன; பள்ளிகளின் சிக்கல்களைப் பரிசீலிக்
ன்றன; அவற்றை நீக்க உதவுகின்றன.

சோவியத் கல்வி முறையில், வகுப்புப் பாடங்களுக்
உள்ள முக்கியத்துவம், புற பாட திட்டச் செயல்களுக்கு
உண்டு. மாணவனுடைய தன்னாக்கம், கூட்டு முயற்
உணர்வு ஆகிய இரண்டையும் வளர்ப்பதோடு, அவனுடை
சிறப்பு விருப்பங்களுக்கும், திறமைகளுக்கும் வாய்ப்பளி
கும் முறையில் அந்தப் புற பாடச் செயல்கள் அமைந்துள்ள

பள்ளிக்கு அப்பாற்பட்ட செயல்களை மூன்று பிரி
களாகப் பிரிக்கலாம்.

(1) பள்ளிகள் ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகள்

(2) குறிப்பிட்ட நலன்களுக்காக உள்ள சிறப்பு நிலை
யங்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள்.

(3) இளைஞர் சங்கங்கள் ஏற்பாடு செய்யும் செயல்
திட்டங்கள்.

சோவியத் நாட்டிலுள்ள ஒவ்வொரு பள்ளியிலும்
பல 'வட்டங்'கள் உள்ளன. ஒவ்வொரு மாணவனும் ஒரு
'வட்ட'த்தில் சேருவான்; சில வேளை ஒன்றுக்கு மேற்பட்ட
'வட்டங்'களில் சேர அனுமதிப்பது உண்டு. குறிப்பிட்ட
நடவடிக்கைகளுக்கும், திறன்களுக்கும் 'வட்ட'ங்கள் இருக்
கும். அவை எல்லா மாணவர்களுக்கும் உரியன. அவற்
றின் வேலைகள், ஏனோ தானோ என்று நடப்பதில்லை; நடப்
பதும் நிற்பதுமாக இராது. எதுவும் தற்செயலாக நடக்
கும்படி விடப்படுவதில்லை. பள்ளி நடவடிக்கைகளின்
இணைந்த பகுதியாகவே திட்டமிட்டு அவற்றை நடத்து
கிறார்கள். ஏனவே கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரி
களும் மற்றெறிற்ப ஊழியர்களும், 'வட்ட' நடவடிக்கைகளைக்
கண்காணித்து வழி நடத்துகிறார்கள். சாதாரணமாக ஒரு
பள்ளியில் 16 முதல் 20 'வட்ட'ங்கள் வரை இருக்கும். சம்
மந்தப்பட்ட 'வட்ட'த்தின் நடவடிக்கைகளில், வாரத்திற்கு
இரண்டு நாட்கள், இரண்டு மணிகள் மாணவன் பங்கு
கொள்ளுகிறான், இவை பள்ளிநேரத்திற்கு அப்பால் நடக்கும்
மிகு திறன் பெற்றவர்கள், தங்கள் தனித் திறன்களையும்
ஆசைகளையும் நிபுணர்களின் வழிகாட்டலில், தங்களுக்குரிய
வேகத்தில் வளர்த்துக்கொள்ள 'வட்ட'ங்கள் உதவுகின்றன.

புற பாட நடவடிக்கைகள், 'நிலையங்களி'லும் நடக்கின்றன. இவை இரண்டாவது வாய்க்கால்கள். இவை நாடு முழுவதிலும் பரவியுள்ளன. இவை முக்கியமாக, இயற்கை விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் அதிகம் ஈடுபட்டுள்ளன. பள்ளிகளில் நடக்கும் 'வட்ட' வேலைகளைப் பரந்த பிரதேச அடிப்படையில் இணைத்து மேலும் வளர்ப்பது 'நிலையங்களி'ன் பொறுப்பு. இந்த வேலையின் மூல அங்கம் 'நிலையம்' ஆகும். குறிப்பிட்ட பரப்புக்குள், இயற்கை விஞ்ஞான 'வட்ட'ங்கள் செய்யும் வேலைகளை ஓர் இயற்கை விஞ்ஞான நிலையத்தோடு இணைப்பார்கள். அதே போல், ஒரு பரப்பில் இருக்கும் இளம் நுட்பத் தொழிலாளர் அனைவரையும் இளம் நுட்பத் தொழில் நிலையத்தில் ஒருங்கிணைப்பார்கள். இந்நிலையங்கள் நன்றாகச் செயல்படுவதற்கு வேண்டிய இலக்கியம், இடம், பிற வசதிகளை அரசே செய்து கொடுக்கும். பரந்த சோவியத் நாட்டின் நாலு பக்கங்களிலும் இத்தகைய நிலையங்கள் பரவியுள்ளன.

இந்த நிலையங்களுக்கு நன்றாக அமைக்கப்பட்ட சோதனைக் கூடங்கள் உள்ளன. இவற்றிற்கான வல்லுனர்களும் உள்ளார்கள். இளம் இயற்கை விஞ்ஞான நிலையங்களுக்குப் பயன்பட சொந்தப் பண்ணைகளும், தோட்டங்களும், கண்ணாடித் தோட்டங்களும் உண்டு. மாணவர்கள், இவற்றில் பல்வேறு சோதனைகளைச் செய்து பார்க்கிறார்கள். இந்நிலையங்கள், வெறும் பொழுது போக்கு மையங்கள் அல்ல. வல்லுனர்களின் மேற்பார்வையிலும், வழிகாட்டலிலும் மாணவர்கள் சோதனைகளையும், ஆய்வுகளையும் நடத்தும் மையங்களாகச் செயல்படுகின்றன. புகழ்பெற்ற விஞ்ஞானிகளும், பல்கலைக் கழக ஆசிரியர்களும் வந்து பார்த்து, ஆலோசனை கூறுவதற்குத் தகுதியான அளவு உயர்மட்ட ஆய்வுகளும், சோதனைகளும் இவற்றில் நடக்கின்றன.

இளம் இயற்கை விஞ்ஞான நிலையங்களின் உறுப்பினர்கள் எவர்? இளம் தொழில் நுட்ப நிலையங்களின் உறுப்

பினர்கள் எவர்? 18 வயது வரையில் உள்ள இளைஞர்கள் இவற்றில் சேரலாம். இயற்கை விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்னும் பரந்த துறைகளில் தங்களுக்கு விருப்பமான ஒன்றைப் பற்றிய வட்டத்தில் சேரலாம். வெவ்வேறு வயதுப் பிரிவுகளுக்கு ஏற்றாற்போல். இச்செயல்களை முறைப்படுத்துகிறார்கள். கூட்டுப் பண்ணைகள் ஏற்றுக்கொண்ட புதிய பயிர் நடவடிக்கைகளை, மேல் வகுப்பு மாணவர்கள் இந்நிலையங்களில் உருவாக்கியிருக்கிறார்கள். சில நிலையங்களில் புதுப் பயிர்ப் பொருள்களையும் பழங்களையும் வளர்த்துள்ளார்கள். அவற்றை பண்ணைகள் ஏற்றுக்கொண்டன.

சோதனைத் திட்டங்களில் சிறந்தவற்றை பொறுக்கியெடுக்க நகர, பிராந்திய, இராச்சிய அடிப்படையில் போட்டிப் பந்தயங்கள் உண்டு. மாஸ்கோவில் நிலையாக நடக்கும் 'தொழில் வேளாண்மை'க் கண்காட்சியில், 'இளம் இயற்கை விஞ்ஞானி'களுக்காக, தனி அரங்கத்தை ஒதுக்கியுள்ளார்கள். இந்த அரங்கத்தில், இளம் இயற்கை விஞ்ஞானிகளின் மிகக் கவர்ச்சியான சாதனைகளை காட்சிக்கு வைத்துள்ளார்கள். மைய நிலையங்களிலும், சிறுவர் பூங்காக்களிலும் போற்றத்தக்க சாதனைகளையுடைய இளைஞர்களின் புகைப்படங்களைப் பார்வைக்கு வைத்துள்ளார்கள்.

இன்று முன்னணியில் ஒளிவிடும் சோவியத் விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லவர்கள். கணித மேதைகள் ஆகியோரில், மிகப் பெரும்பாலோர், பள்ளி வாழ்க்கையில் வட்டங்களின், நிலையங்களின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டு, அப்போதே, சாதனைகள் புரிந்தவர்கள் ஆவார்கள். மாணவர்களை, தாமே வேலைகளைச் செய்யும்படித் தூண்டும் பெரும் உந்து சக்தியாக, சோவியத் கல்வி முறையின் புற பாடத் திட்டங்கள் செயல்படுகின்றன. பிஞ்சு திறன்களை அடையாளங் கண்டு வளர்ப்பதிலும் அவை பெரிதும் பயன்பட்டுள்ளன.

இளைஞர்களுக்கான மூன்றாவது வகைப் புற பாட நடவடிக்கைகளை இளைஞர் அமைப்புகள் ஏற்பாடு செய்கின்

றன. இளைஞர்களின் கல்வியின்பால், இவற்றின் செல்வாக்கு அதிகம். இவற்றின் நடவடிக்கைகளும், நிகழ்ச்சிநிரல்களும் கல்வி நிலையப் பணிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. இவை, 'திறன் மிக்கோருக்காகத்' தனியாக உருவாக்கப்பட்டவை அல்ல. இவை, இளைஞர்களின் ஒட்டுமொத்த ஒழுங்கு, நடத்தை, அரசியல் தெளிவு, குடிக் கடமையுணர்வு ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தோடு செயல்புரியும் 'மக்கள்' அமைப்புகள் ஆகும். இவை முன்னூக்கத்தையும், தலைமைச் சீர்மைகளையும் . பயன்படுத்த நிறைய வாய்ப்புகள் கொடுக்கின்றன. இவை திறன்மிக்கோரின் கல்விக்கும் பெருந்துணையாகின்றன.

அக்டோபரிஸ்டு இயக்கம், பயனீயர் அமைப்பு, கம்சோமால் ஆகியவை இளைஞர் அமைப்புகளாகும்.

பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் அக்டோபரிஸ்டு இயக்கத்தில் சேரும். பயனீயர் அமைப்பைப் போல்வோ' கம்சோமாலைப் போலவே அக்டோபரிஸ்டு இயக்கம் கட்டுக் கோப்புகள் அடங்கியதல்ல. அக்டோபரிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்தவர், ஒரு 'பாட்ஜ்' அணிவார். அதில், நடுவில் லெனின் படமும் பக்கத்தில் சிகப்பு நட்சத்திரங்களும் இருக்கும். உரிய காலத்தில், சிறுவர், சிறுமிகள் பயனீயர் அமைப்பில் சேரும்படியான மனப் பக்குவத்தை ஏற்படுத்துவதே, இவ்வியக்கத்தின் நோக்கம். அக்டோபரிஸ்டு இயக்கத்திற் சேர்ந்தவர்கள் படிப்பில் நன்றாயிருக்க வேண்டும்; மாணவர்களுக்கான விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

பத்துக்கும் பதினைந்துக்கும் இடைப்பட்ட வயதினர், பயனீயர் அமைப்பில் சேரலாம். அநேகமாக பள்ளியில் படிக்கும் அந்த வயதினர் அனைவருமே அப்பள்ளியின் பயனீயர் அமைப்பில் உறுப்பினர்கள் ஆவார்கள். அதில் சேர்க்கா விட்டால், அது சமுதாய இழிவாகக் கருதப்படும். பயனீயர்களைப் புதிதாகச் சேர்க்கும்போது, மெல்லமைதியுடைய சடங்கு நடக்கும். அச்சடங்கின் போது புதுப் பயனீயர், அமைப்பின் வாக்குறுதிகளைச் சொல்லுவார். பிறகு, அவருக்கு சிகப்பு பயனீயர் கழுத்துக் குட்டை கொடுக்கப்படும்.

பயனீயர் வாக்குறுதி வருமாறு: ''சோவியத் ஒ
றியத்தைச் சேர்ந்த இளம் பயனீயராகிய நான், என்
டைய தோழர்கள் முன்னிலையில் தாய் நாட்டை நே
கவும், லெனின் கற்றுக் கொடுத்தபடி, கம்யூனிஸ்டுக் கட
சொல்லுகிறபடி வாழவும், கற்கவும், போராடவும் பய
யோடு வாக்குறுதியளிக்கிறேன்.''

பயனீயர்களிடம் எவற்றை எதிர்பார்க்கிறார்க
படிப்பில் கவனம், பணிவு, ஒழுங்கு, உழைப்பின் மே
விருப்பம், பொதுச் சொத்தைப் பராமரித்தல், தேவைப்ப
வோர்க்கு உதவி, துணிவு, தன் குழுவிற்கும், அணிக்கு
விசுவாசம் ஆகியவற்றை பயனீயர்களிடம் எதிர் பார்
கிறார்கள்.

நகரங்களில் பயனீயர் மாளிகைகள் உள்ளன. அவற்றி
போதுமான கூடங்களும், கருவிகளும் உள்ளன; மு
நேர ஊழியர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்ட
திற்கும் ஒரு பயனீயர் இல்லம் உண்டு. மாலை நேரங்கள
பயனீயர்கள், பயனீயர் இல்லத்திற்கோ, மாளிகைக்கோ
செல்வார்கள். பயனீயர்கள் மாளிகைகளில் உள்ள வட்ட
கள் ஏற்பாடு செய்யும் பல்வேறு நடவடிக்கைகளில், அவர்க
ஈடுபடுவார்கள். சோவியத் ஒன்றியம் முழுவதிலும் பயனீய
மாளிகைகளும் இல்லங்களும் சேர்ந்து 2,500 உள்ளன.

14 முதல் 28 வயது வரை உள்ள இளைஞர்கள் க
சோமாலில் சேர்கிறார்கள். கம்சோமால் என்பதற்கு இள
கம்யூனிஸ்டுக் கழக அமைப்பு என்று பொருள். பயனீய
அமைப்பில் இருப்பதை விட இதில் சேர்க்கையைக் கட
டிப்பாகக் கட்டுப்படுத்தியுள்ளார்கள். கம்சோமால், பள்
களில் அடங்கி விடவில்லை. இளைஞர்கள் வேலை செய்யு
எல்லா இடங்களிலும்—தொழிற் கூடங்கள், பள்ளிக
பண்ணைகள், பல்கலைக் கழகங்கள், கழகங்கள், அலுவலக
கள்—கம்சோமால் கிளைகள் உண்டு. எடுத்துக் கொண்
கல்விப் பிரிவில் ஆழ்ந்து கற்றல், தொழில் நுட்ப அறிவை
வளர்த்துக் கொள்ளல், கட்சியின் கொள்கைகளைப் பரப்
தல், பொதுச் சொத்தைப் பாதுகாத்தல், உடல் வலிமை

யையும், தகுதியையும் பெருக்கிக் கொள்ளல், குறைகளை எடுத்துச் சொல்ல, பிறர் குற்றங்காணும் போது பொறுத்துக் கொள்ளப் பழகுதல் ஆகியவை கம்சோமாலின் கடமைகளாகும்.

கம்சோமால்கள், பெருந் திட்டங்களை எடுத்துக் கொண்டு செய்து காட்டுகிறார்கள். சென்ற ஆண்டுகளில், கஜாக்ஸ்தான், சைபீரியா, யூரல், வோல்கா பகுதிகளின் கன்னி நிலங்களைப் பயிரிடுவதற்கு இலட்சக்கணக்கான கம்சோமால்கள் பல பகுதிகளில் இருந்தும் சென்றிருக்கிறார்கள். சோஷலிசக் கட்டமைப்புக்கு கம்சோமால் ஆற்றியுள்ள தொண்டு மிகப் பெரிதாகும்.

மிகப் பெரும்பாலான நகரங்களில் கம்சோமால் பூங்காக்கள் உள்ளன. விடுமுறை நாட்களில், இளைஞர்கள் அங்கு சென்று எத்தனையோ திறந்த வெளி ஆட்டங்களில் கலந்து கொள்ளுகிறார்கள். கல்வி என்று விரிந்த பொருளில் பார்க்கும் போது, கம்சோமால், கல்வியில் செலுத்தும் செல்வாக்கு, உண்மையிலேயே மகத்தானது; நன்மையானது.

# நூலகப் பணி

எந்த பொதுக் கல்வி முறையைக் கவனித்தாலும் அதோடு தொடர்புடைய பொது நூலக முறையை விரைவாகவாகிலும் கவனிக்காவிட்டால், ஆய்வு முற்றுப் பெறுவதில்லை. சமுதாயத்தின் கவனத்திற்கும், ஆதரவிற்கும் பள்ளிக்கூடங்களும், பொது நூலகங்களும் போட்டி போடுவதாகக் கருதக்கூடாது. கல்விக்கூடங்களின் தொண்டிற்கு நூலகத் தொண்டு துணையாகிறது. அறிவில் ஆர்வத்தைப் பசுமையாக வைத்திருப்பதிலும் ஆர்வத்தை நிறைவு செய்வதிலும் இவை இரண்டும் சேர்ந்து பெரும் பங்கு கொள்கின்றன. நாட்டிலுள்ள கல்வி நிலையங்களை ஒரு கண்ணாகக் கருதுவோமானால், சமுதாயத்தின் மறு கண்ணாக நூலகங்களைக் கருதலாம்.

சோவியத் பள்ளிகள் எல்லாச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் எட்டும் வகையில் நிறுவப்பட்டிருப்பதைப் போல், எல்லா வாசகர்களுக்கும் எட்டும் வகையில் பொது நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் விலையில்லாமல், உடனுக்குடன் தேவையான நூல்களை வழங்கும் வகையிலும், பொது மக்களிடம் தொடர்ந்து வளர்ந்து வரும் அறிவுத் தாகத்தைத் தணிக்கும் வகையிலும் மக்களின் கண்ணோட்டத்தை விசாலமாக்கி, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் முறையிலும் நாடு முழுவதிலும் பல்வேறு வகை நூலகங்களை போதிய அளவு நிறுவும் நோக்கோடு நூலக நிர்வாகம் செயல்பட வேண்டுமென்று நடேஸ்டா க்ருப்ஸ்கயா எழுதினார்.

மற்ற எந்த சிந்தனையாளரும் அரசியல் ஞானியும் நூலகம், அது பற்றிய செய்திகளில் செலுத்தாத அளவு கவனத்தை லெனின் செலுத்தினார். சோவியத் ஒன்றியத்

தில் நூலகப் பணியினை அமைப்பது பற்றி, லெனினுடைய நூல்களில், 270 கட்டுரைகளை, அறிக்கைகளை, சொற் பொழிவுகளைக் காண்பதே இக்கூற்றுக்குச் சான்ருகும்.

1920 இல், உள் நாட்டுப் போருக்கிடையில், வெளி நாட்டுத் தாக்குதலுக்கு மத்தியில், பஞ்சம் பிற அவதிகளுக்கு ஊடே, 50 ஆயிரம் நூலகங்களையும், படிப்பகங்களையும் நிறு வும் பெரும் பணியை லெனின் முன் வைத்தார். பொது நூலகங்களை அமைப்பதில் அரசே முன்வந்து நடவடிக்கை களை எடுப்பது முக்கியமென்று லெனின் கருதிஞர்.

லெனினுடைய திட்டத்தை நிறைவேற்ற, எல்லா முயற்சிகளும் இடையருது எடுக்கப்பட்டதை சோவியத் நூலக நிர்வாக வரலாறு காட்டுகிறது. பல்லாண்டுகளுக்கு முன்பே, அவருடைய குறி எல்லையாகிய 50,000 நூல கத்தைத் தாண்டி விட்டார்கள். 1934 அக்டோபரிலேயே, சோவியத் நாட்டில், 30 கோடி நூல்களை உடைய இலட் சத்து பதினைந்தாயிரம் நூலகங்கள் இருந்தன. நூலகப் பணி, ஆண்டிற்கு ஆண்டு வளர்ந்து கொண்டே இருந்தது. இன்று, சோவியத் ஒன்றியம் 330 கோடி நூல்களையுடைய 3 இலட்சத்து அறுபதாயிரம் நூலகங்களைக் கொண்டுள்ளது. இவை, நகர்களிலும் நாட்டுப்புறங்களிலும் உள்ளன. இன்று மொத்தப் பொது நூலகங்களில் ஐந்தில் மூன்று பங்கு, நாட்டுப்புறங்களில் இருக்கின்றன. 1970களின் தொடக் கத்தில், நாட்டுப்புறங்களில் 1500 குடி மக்களுக்கு ஒரு நூலகம், நகரவாசிகளில் 2,000 பேருக்கு ஒரு நூலகம் என்னும் விழுக்காட்டில் பணியாற்றியதைக் கண்டார்கள். 1913 இல் பொது நூலகங்களில், நூறு பேருக்கு ஆறு என்ற விகிதத்தில் நூல்கள் இருந்தன. 1960 இல் நூறு பேர்களுக்கு 453 நூல்கள் என்னும் நிலைக்கும், 1970 இல் நூறு பேர்களுக்கு 537 என்னும் நிலைக்கும் உயர்ந்துவிட்டது. வாசிப்போர் எண்ணிக்கையைப் பார்ப்போம். ஜார் ஆண்ட இரஷ்ஷியாவில், வாசகர்களின் மொத்த எண்ணிக்கை 80 இலட்சம் ஆகும். 1970 இல் வாசகர் எண்ணிக்கை 18 கோடியாக இருந்தது.

படிப்பின் சமுதாயப் பணி பற்றி, அடிப்படையில் புதிய கண்ணோட்டமொன்று சோவியத் நாட்டின் அறுபதாண்டு வரலாற்றில் உருவாகி விட்டது. படிப்பது வெறும் பொழுது போக்குக்காக அல்ல; அதைவிட நீடித்த பலனுக்காகவே படிப்பது. சோவியத் ஒன்றியத்தில் ஊருரிமை பற்றிய தெளிவும், கம்யூனிச உலகக் கண்ணோட்டமும் ஒழுக்க உறுதியும் அரசியல் நம்பிக்கைகளும் பெறுவதற்குச் சிறந்த கருவியாகவே படிப்பு பயன்படுகிறது. கலையுணர்வுத் தரத்தை உயர்த்தவும், தொழிற் திறன்களை வளர்க்கவும், உற்பத்தி பற்றி ஆக்கப் போக்கைப் பெருக்கவும் படிப்பு பயன்படுகிறது.

அண்மையில் நடத்திய கருத்தறிதல் முடிவுப்படி, தொழிற்சாலைத் தொழிலாளிகளில் நூற்றுக்கு 92 பேர்களும், பொறியாளர்கள், நுட்பத் தொழிலாளர்கள் ஆகியோரில் நூற்றுக்கு 94 விழுக்காட்டினரும், ஆசிரியர்களில் நூற்றுக்கு 97 பேர்களும், கல்லூரி மாணவர்களில் நூற்றுக்கு 92 பேர்களும், தொழிற் பள்ளி மாணவர்களில் நூற்றுக்கு 95 பேர்களும், பொது நூலகங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரிய வந்தது.

இந்த ஏராளமான பொது நூலகங்களில், பள்ளிக்கூட நூலகங்கள் கணக்கிடப்படவில்லை. ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் அதற்கேற்ற நூல்கள் நிறைந்த, நல்ல நூலகம் இருப்பதை முன்னரே கண்டோம். ஆயினும் பொது நூலகங்களுக்கு சிறுவர்கள் உட்பட எல்லா மாணவர்களும் செல்லலாம். இருப்பினும் சிறுவர்களுக்காகவே 5,000 தனி நூலகங்களை நிறுவியுள்ளார்கள். அவற்றில் மொத்தமாக 11 கோடி நூல்கள் உள்ளன. பள்ளி நூலகங்களில் உள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 32 கோடியாகும்.

நாடு தழுவிய பொது நூலகப் பணியின் பலன் சோவியத் ஒன்றியத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கிறது. ஜார் காலத்தில் மத்திய இரஷ்ஷியாவில்தான், நூலகங்களில் மிகப் பெரும்பாலானவை இருந்தன. தூரப் பகுதிகளில் வெகு சிலவே இருந்தன. அக்டோபர் புரட்சிக்குப் பின், ஒதுக்கப்பட்டிருந்த அப்பகுதிகளுக்கு முன்னுரிமை என்னும் கொள்கை தெளிவாகப் பின்பற்றப்பட்டது.

புரட்சிக்கு முன்பு, தாஜிகிஸ்தானில் ஒரு நூலகங்கூட இல்லை. தாஜிக் மொழியில் நூல்களோ சஞ்சிகைகளோ வெளியிடப்படவில்லை. இன்று இக்குடியரசில் ஆயிரத்திற்கு மேற்பட்ட நூலகங்கள் இருக்கின்றன. இக்குடியரசு, ஆண்டுதோறும் மொத்தம் 50 இலட்சம் நூற்பிரதிகளை வெளியிடுகிறது.

புரட்சிக்கு முன்பிருந்த கஜாக்ஸ்தானில் அச்சடிக்கும் வசதியே இல்லை. இன்று இக்குடியரசின் வெளியீட்டு நிறுவனங்கள் ஆண்டுக்கு 1,500 தலைப்பு நூல்களை வெளியிடுகின்றன. அவற்றின் மொத்தம் 2 கோடிப் பிரதிகளுக்கு மேலாகும்.

நெடுந்தொலைவில் உள்ள சுகோட்கா தீபகற்பத்தில், புரட்சிக்கு முன்பு, மக்கள் மொழிக்கு வரி வடிவம் இல்லை. யாருக்கும் படிக்கத் தெரியாது; படிப்பதற்கும் எதுவும் இல்லை. இன்றோ, சுகோட்காவில் உள்ள ஒவ்வொரு சிற்றூரிலும் நூலகம் இருக்கிறது. அப்பகுதி மக்கள் எழுத்து மொழி பெற்று விட்டார்கள். அவர்களுக்கென்று அருமையான இலக்கியம் உருவாகி விட்டது.

முற்காலத்தில் புகழ்பெற்ற இரஷ்ஷியர்கள், தங்கள் தனி நூலகங்களில் சிறந்த நூல்களைத் திரட்டி வைத்திருந்தார்கள். இன்று, அநேகமாக எல்லா சோவியத் குடும்பங்களிலும் தனி நூலகம் இருக்கும். அவற்றில் தங்களுக்கு விருப்பமான ஆசிரியர்களின் நூல்கள் இடம் பெறுவதோடு, குடும்ப உறுப்பினர்கள் ஆற்றும் வேலைகளோடு தொடர்புடைய நூல்களும் இருக்கும்.

பத்தாண்டுகளுக்கு முன்பு, தனியார்களிடமிருந்த நூலகங்களை, கிராம சங்கம், பள்ளிக்கூடம், குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு நன்கொடையாக வழங்குவதற்கு ஒரு மக்கள் இயக்கம் உருவானது. இன்று சோவியத் நாட்டில், அப்படி அளிக்கப்பட்ட பல்லாயிரம் நூலகங்கள் உள்ளன. அந்நூலகங்களின் பராமரிப்பை அரசு ஏற்றுக்கொள்ளுகிறது.

ஜான் ரீட் என்பவர், 'உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்' என்னும் தமது நூலில் எழுதியுள்ளதைப் பார்ப்போம்.

'இரஷ்ஷியா முழுவதுமே படிக்கக் கற்றுக் கொண்டிருந்தது. அரசியல், பொருளியல், வரலாறு ஆகிய அனைத்தையும் மக்கள் தெரிந்து கொள்ள விரும்பியதால், படித்துக் கொண்டே இருந்தார்கள். நெடு நாளாக அடக்கி வைக்கப்பட்டிருந்த கல்வித் தாகம் புரட்சியோடு கலந்து, பேருணர்ச்சியோடு வெளிப்பட்டது. கொதிப்பேறிய மணல், நீரை உறிஞ்சுவது போல், இரஷ்ஷியா, படிப்பதில் ஈடுபட்டு, தணியாதிருந்தது.''

நாட்டின் வாழ்க்கையோடு நூலகப் பணிப் பின்னிக் கிடக்கிறது. நூலகப் பணி, பொருளியல், கலையியல் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது; விஞ்ஞான தொழில் நுட்ப இயலை முன்னேற்றுகிறது. தன்னுடைய கல்வியைத் தொடருவதற்கு மிகப் பயனுள்ள வழி, தானே படித்துக் கற்பதாகும். தானே படித்துக் கொள்வதற்கான அடிப்படை வசதிகளை நூலகங்கள் போற்றத்தக்க வகையில் வழங்குகின்றன. சோவியத் நூலகங்களில், ஏராளமான பகுதி நேரத் தொண்டர்களின் மதிப்பிட முடியாத உதவி கிடைப்பது ஒரு சிறப்பாகும். நூலகங்களில் செறிந்து கிடக்கும் ஏராளமான நூல்களிலிருந்து வாசகருக்குப் பயனுடைய நூல்களைப் பொறுக்கியெடுக்க தொண்டர்கள் உதவுகிறார்கள்.

சோவியத் நூலகங்கள், நூல்களைப் பலருக்கும் அறிமுகப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் செய்கின்றன. அதில் நல்ல பலன் கிடைக்கிறது. நூலகக் காட்சிகள், வாசகர் மாநாடுகள், தேர்ந்தெடுத்த தலைப்புகளில் கருத்தரங்குகள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை சோவியத் நூலகங்கள் ஏற்பாடு செய்கின்றன.

பல்வேறு உற்பத்தித் துறைகளில் உள்ள விஞ்ஞானிகளுக்கும் வல்லுனர்களுக்கும் வேண்டிய தகவல்களைத் திரட்டிக் கொடுத்தல் சோவியத் நூலகப் பணியின் முக்கிய கூறாகும். பல்வேறு துறைகளில், அறிவு பெருமளவு விரியும் காலத்தில் நாம் வாழ்கிறோம். கடைசியாகத் தெரிந்த தகவல்களையெல்லாம் திரட்டி, பதிந்து, பகுத்து, பட்டியல் போட்டு, செரித்து, அவற்றைத் தேடுவோருக்கு விரைந்து கொடுக்க நூலகங்கள் முயல்கின்றன.

சோவியத் நாட்டின் பொது நூலக முறை, நன்றாகத் திட்டமிட்டு இணைக்கப்பட்ட நூலகப் பணி முறையாகும். எல்லா நூலகப் பணியிலும் நாடு முழுவதிலும் உள்ள நூலகச் சங்கிலியில் ஒவ்வொரு நூலகமும் ஒரு வளையம் என்னும் கோட்பாடு சோவியத் நூலக முறைக்கு அடிப்படையாக உள்ளது. அதாவது பிராந்திய உணர்வின்றி செயல்படுவது என்று பொருள். நாடு முழுவதற்கும் அரசால் நிர்வகிக்கப் படும் நூலகப் பணியில், ஒரு நூலகத்தில் உள்ள நூல்கள் மற்றொரு நூலகத்திற்கும் பயன்படும்; நூலகங்கள் நூல் களைப் பரிமாறிக் கொள்ளும். எல்லாப் பொது நூலகங்களும் ஒன்றான அரசுத் திட்டத்தின் படி செயல்படும் என்பது இதனால் புலப்படும்.

சோவியத் நாட்டில் இயங்கும் நூலகங்களும் பய னுள்ள பங்கை வகிக்கின்றன. 100 முதல் 300 மக்கள் வரைக் குடியிருக்கும் சின்னச் சின்ன குடியிருப்புகளுக்கு தனித்தனியே ஒரு நூலகம் வைப்பதானல் கட்டுப்படியா காத செலவாகும். அச்சிறு குடியிருப்புகளுக்கு, அருகிலுள்ள நூலகத்திலிருந்து, இயங்கு நூலகங்களை அனுப்புவார்கள். இவை, அக்குடியிருப்புகளுக்குத் தொடர்ந்து நூல்கள் கிடைக்கும்படி பார்த்துக் கொள்ளும். 60,000 நிலையான நூலகங்கள், 2 இலட்சத்து 15 ஆயிரம் இயங்கு நூலகங் களை அனுப்புவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சோவியத் ஒன்றியக் கலாசார அமைச்சகமும் ஒன் றியக் குடியரசுகளின் கலாசார அமைச்சகமும் நூலக நிர் வாகத்திற்குப் பொறுப்பாகும். நூலக இயக்கம், சோவி யத் நாட்டில், மெய்யான மக்கள் இயக்கமாகி விட்டது. நூலகப் பணியைப் பெருக்குவதில் மக்கள் ஊக்கம் காட்டு கிறார்கள். வாசகர்கள் கூட்டாக நூலகங்களை நடத்துவதி லும் கண்காணிப்பதிலும் பங்கு கொள்கிறார்கள்.

# கல்வி நிர்வாகம்—கல்விக்கு நிதி

சோவியத் அரசின் முக்கிய கடமைகளில் ஒன்று, எல்லாக் கல்வி நிலையங்களையும் நிறுவி, பராமரித்து, அவற்றிற்காகச் செலவிடுதல் ஆகும். கூட்டுப் பண்ணைகள், தொழில் நிறுவனங்கள் முதலியன முடிந்த இடங்களில் பள்ளிக் கூடங்களைக் கட்டி, அவற்றிற்கான தளவாடங்களைக் கொடுத்து, வேலைப் பயிற்சிக்கான வசதிகள் செய்து கொடுத்து உதவுவது உண்மையே. ஆனால் எல்லார்க்கும் கல்வி கொடுக்கும் கடமை முதலில் சோவியத் அரசைச் சேர்ந்தது. எனவே, சோவியத் அரசின் மிக முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகக் கல்வி நிர்வாகம் அமைந்துள்ளது. நிர்வாகத்தின் தரம் மிக உயர்ந்திருக்கிறது.

கல்வி நிர்வாகத்தின் தரம் உயர்ந்திருப்பது எதனால்? சோவியத் ஒன்றியத்தில், கல்வி நிர்வாகம் 'மைய இயக்கத்தோடு 'தல முன்னூக்கம்' என்னும் கொள்கையின் அடிப்படையில் இயங்குகிறது. கல்விக் கொள்கையின் அடிப்படை எப்படியிருக்க வேண்டும், அது எத்திசையில் இயங்க வேண்டும், என்ன வேகத்தில் செல்ல வேண்டுமென்பதை முடிவு செய்வதில் முதலில் பொது மக்கள் ஈடுபடுகிறார்கள். கல்வி நடைமுறைகளை, சம்பந்தப்பட்ட ஆட்சி ஒப்புக் கொண்டதும், அவற்றைச் செயல்படுத்துவதில் மக்கள் சுறுசுறுப்பாகப் பங்கு கொள்ளுகிறார்கள். பள்ளிக் கூடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள எல்லாப் பையன்களும் சிறுமிகளும் பள்ளிக்குச் செல்லும்படிப் பார்த்துக் கொள்வதில் பெற்றோர்களின் ஆதரவு பெரிதாகும். பல்வேறு கல்வி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதில், பள்ளிக் கூடங்களோடு, பெற்றோர்கள் ஒத்துழைக்கிறார்கள்.

சோவியத் நாட்டில் பல்வேறு தேசிய இனங்களை, மொழிகளை, கலை நிலைகளை ஒன்றிணைப்பதில் கல்வி ஆற்ற

மட்டங்களிலும் 'மைய இயக்கம், தல முன்னூக்கம்' என்னும் இரண்டையும் இணைத்திருப்பது இவ்விளைவுக்குக் காரணம் ஆகும்.

கல்வித் துறையில் ஆட்சி செலுத்தும் அமைப்புகளைப் பற்றி சிறிது விவரமாகப் பார்ப்போம். சோவியத் ஒன்றியக் கல்வி அமைச்சகம் ஆட்சி அமைப்புகளின் சிகரம் ஆகும். பதினைந்து ஒன்றியக் குடியரசுகளிலும் தனித்தனிய கல்வி அமைச்சகம் உண்டு. தன்னாட்சி உரிமைக் குடியரசுகளில் தனித்தனி கல்வி அமைச்சகம் இருக்கிறது. சோவியத் ஒன்றியக் கல்வி அமைச்சகம், குடியரசுகள், தன்னாட்சிக் குடியரசுகள் முதலியவற்றின் கல்வி அமைச்சகத்தின் வழியாகச் செயல்படுகின்றது. ஒவ்வொரு குடியரசிலும் தனித்தனி கல்வி அமைச்சகம் இருப்பதால், அந்தந்தப் பகுதியின் மரபுகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, போக்கு ஆகியவற்றிற்கு முடிந்த அளவு இடம் கொடுத்து, அந்தந்த தேசியக் கலை வளர்ச்சிக்கு மிகப் பொருத்தமான சூழலை உருவாக்க முடிகிறது.

கல்வி, அதன் உள்ளடக்கம், கல்வி நிலைய வகைகள், அமைப்புகள், பயிற்றுவிக்கும் முறைகள் பற்றிய பெரிய முடிவுகள், சோவியத் ஒன்றிய, தலைமைச் சோவியத்தின் சட்டங்களாகவோ, அமைச்சரவையின் ஆணைகளாகவோ வெளியாகும். கல்வி அமைச்சகம் கூறும் ஆலோசனைகள் அல்லது சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மையக் குழுவின் ஆலோசனைகள், மேற்படிச் சட்டங்களுக்கு வித்துகள் ஆகும்.

சோவியத் ஒன்றிய அரசியல் அமைப்புச் சட்டப்படி நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சி, 'கம்யூனிஸ்டு சமுதாயத்தை அமைக்கப் போராடும் பாட்டாளிகளின் முன்னணியாகும். எல்லாம் பொது நிறுவனங்கள், ஆட்சி நிறுவனங்களில் செயல்படும் தொழிலாளர் அமைப்புகளுக்கு மையமாகும்.' கம்யூனிஸ்டுக் கட்சியின் மையக்குழு, கல்வி பற்றிய உட்குழு ஒன்றைக் கொண்டிருக்கிறது. உட்குழுவின் ஆலோசனையின் பேரில், மையக் குழு கல்விச் சட்டங்களுக்கு அடிப்

படையான பெரும் கல்விக் கொள்கை பற்றி ஆய்ந்து, உருவமைக்கிறது. மையக் குழுவின் நகல் ஆலோசனைகள், நாடு முழுவதும் விவாதிப்பதற்காக வெளியிடப்படுகிறது. இது கட்சிக் காங்கிரஸ் நடப்பதற்கு முன்பு நடக்கும். வளர்ச்சியின் முக்கியக் குறிகள் என்ன என்பது நகலில் சொல்லப்படும். கல்வி பற்றி அது 'வருங்காலத் திட்டமாகும். விவாதிப்பதற்காக, வெளியிடுவது வெறும் சடங்கல்ல. நகல் ஆலோசனைகளைப் பரிசீலிப்பதில், பொது மக்கள் மிக்க ஆர்வம் காட்டுகிறார்கள். அது பற்றிய விவாதங்கள், பொது மக்கள் அதில் அடைந்துள்ள பெருமளவு புரிதலைக் காட்டுகிறது. அவ்விவாதங்கள், குறியுடையவை. இறுதி உருவம். முறைகள் அவற்றால் பாதிக்கப்படுகின்றன.

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் (நாடாளுமன்றம்) சம்பந்தப்பட்ட சட்டங்களை நிறைவேற்றிய பிறகு, குடியரசுகள், தன்னாட்சிக் குடியரசுகள், இவற்றின் சுப்ரீம் சோவியத்துகள் (சட்ட மன்றங்கள்), அந்நெறிகளுக்கும், கொள்கைகளுக்கும் செயல் உருவம் கொடுக்கும் பொருட்டு, சட்டங்கள் இயற்றுகின்றன. நாடு முழுவதற்கும் கல்வியின் எல்லாவற்றிற்கும் சோவியத் ஒன்றியக் கல்வி அமைச்சகம் பொறுப்பாயிருக்கையில், குடியரசின் கல்வி அமைச்சகங்கள் மேற்படி சட்டங்களுக்கும் ஆணைகளுக்கும் உட்பட்டு கல்வி நிலையங்களை நிறுவி, பராமரிக்கும் பொறுப்பில் உள்ளன.

பொதுக் கல்வி நிலையங்களையும், பயிற்சி நிலையங்களையும் நெறிப்படுத்துவதும், கண்காணிப்பதும் குடியரசின் கல்வி அமைச்சகத்தின் பொறுப்பாகும். இப்பொறுப்பை நிறைவேற்ற, பல படி நிர்வாக அமைப்புகள் உள்ளன. ஒவ்வொரு குடியரசும் பல பிராந்தியங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிராந்தியமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மட்டத்திலும் கல்வித்துறையோ கல்வி ஆணைக் குழுவோ இருப்பதோடு அந்த மட்டத்தில் உழைப்போர் பிரதிநிதிகளின் சோவியத்தினுடைய கல்விக் குழுவும் இயங்குகிறது. மாஸ்கோ, லெனின்கிராட் போன்ற மாபெரும் நகரங்களின் தனி

லைகளுக்கு ஏற்றாற்போல், பிராந்திய நிர்வாக அமைப்பில், வேண்டிய மாற்றங்களைச் செய்துள்ளார்கள். பொதுவாக, ின் வருமாறு ஆட்சி செலுத்தப்படும்:

**சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்**

↓

**சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவை**

| | |
|---|---|
| **ன்றியக்குடியரசுகள் சுப்ரீம் சோவியத்துகள்** | **தன்னாட்சிக் குடியரசுகளின சுப்ரீம் சோவியத்துகள்** |

↓

**கல்வி அமைச்சகங்கள்**

| | |
|---|---|
| **ராந்திய கல்வி ஆணைக்குழு** | **மாநகரக் கல்வி ஆணைக்குழு** |
| **ாவட்டக் கல்வி ஆணைக்குழு** | **மாவட்டக் கல்வி ஆணைக்குழு** |
| **பள்ளி பள்ளி பள்ளி** | **பள்ளி பள்ளி பள்ளி** |

கிண்டர்கார்டன்கள், தொடக்கப் பள்ளிகள், உயர் லைப் பள்ளிகள், இளந் தொழிலாளிகள், விவசாயிகளுக் ான பள்ளிகள், ஆசிரியர்களுக்கும் பிற கல்வி அலுவலர் ளுக்குமான பயிற்சி நிலையங்கள் ஆகிய சிறப்புப் பயிற்சி காடாத எல்லா பொதுக் கல்வி நிலையங்களையும் குடியர ன் கல்வி அமைச்சகம் நிர்வகிக்கிறது.

ஒன்றியக் குடியரசின் கல்வி அமைச்சகம் ஆற்றும் ணிகள் மிக விரிந்தவை. அதுவே, பாடத் திட்டங்களை ஆணையிடுகிறது. பாட நூல்களையும், பிற படிப்புச் சாதனை யையும் அங்கீகரித்தலும் வெளியிடலும் அதன் பொறுப்பு. ன்ன நிலையை எட்ட வேண்டும்? எட்டியதை எப்படி அள

விடுவது? இரண்டைப் பற்றியும் ஆணையிடுவது கல்வி அமைச்சகத்தின் பொறுப்பு. புதுச் சோதனைகளை நடத்திப் பார்ப்பதும் பிற அமைச்சகங்களோடும் அமைப்புகளோடும் இணைந்து செயல்படுவதும் அதன் கடமை. போதனை முறை வழிகாட்டிகளைத் தொகுத்து வெளியிடுதல், காட்சி கேள்விக் கல்விக்கான துணைக் கருவிகளை உருவாக்குதல், வேண்டிய வகை ஆசிரியர்களை, போதிய எண்ணிக்கையில் நியமித்தல், பள்ளிகளின் வேலையினை ஒழுங்காகக் கண்காணித்தல் ஆகியவை கல்வி அமைச்சகத்தின் கடமைகளாகும்.

'ஒருவர் பொறுப்பு' என்னும் கொள்கையின் அடிப்படையில் நிர்வாகம் நடக்கிறது: எல்லாப் பிரச்சினைகளையும் கூட்டாக ஆலோசித்தல் நடைமுறையாகும். எவருக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவருக்கு அதைச் சரியாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரமும் கொடுக்கும் வகையில் செயல்முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்வேறு கல்வி நிலையங்களை நெறிப்படுத்திக் கண்காணிக்கும் பொறுப்பை, கல்வி அமைச்சகங்கள், பிராந்திய, மாநகர, மாவட்டக் கல்வித் துறைகள் மூலம் நிறைவேற்றுகின்றன. கல்வி பற்றிய எல்லாவற்றிலும், கல்வி அமைச்சகத்தின் நெறிப்பாடுக்கும் கண்காணிப்பிற்கும் கட்டுப்பட்டு, பிராந்திய, மாநகர, மாவட்டக் கல்வித் துறைகள் செயல்படுகின்றன; இவை, நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில், சம்பந்தப்பட்ட சோவியத்தின் நெறிக்கும் கண்காணிப்பிற்கும் கட்டுப்பட்டவை.

பிராந்திய, மாநகர கல்வித்துறையின் பணிகள் வருமாறு:

(1) சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தோ, குடியரசின் சுப்ரீம் சோவியத்தோ, தன்னாட்சிக் குடியரசின் சுப்ரீம் சோவியத்தோ இட்ட ஆணைகளை நிறைவேற்றுதல்; கல்வி நிலையங்களின் வேலைகளைப் பற்றி அடுத்த மேல் மட்டத்தில் உள்ள ஆட்சியோ அதற்கும் மேற்பட்ட அமைப்போ மேற்கொள்ளும் முடிவுகளையும் இடும் ஆணைகளையும் நிறைவேற்றுதல்;

(2) ஆசிரியர்களையும் உயர்மட்ட அதிகாரிகளையும் பயிற்றுவித்தல், நியமித்தல், ஆய்தல்;

(3) மாவட்டக் கல்வித் துறைகளின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்; பள்ளிகள், ஆசிரியர்கள், பிற கல்வி நிலைய வேலைகளை மேற் பார்வையிடல்;

(4) கல்வி முறை, பாட முறை பற்றிய தகவல்களைக் கொடுத்தல்;

(5) பாட நூல்களையும் பிற நூல்களையும் எழுத வைத்து வெளியிடல்;

(6) சிறந்த பள்ளிகள், கல்வி நிலையங்கள், ஆசிரியர்கள் பெறும் சிறந்த அனுபவத்தை எல்லார்க்கும் தெரியப் படுத்தி பொதுவாக்குதல் ஆகும்.

கல்வி நிர்வாகத்தில் மாவட்டக் கல்வித் துறைகள், அடிப்படை அமைப்புகளும், இணைப்புகளும் ஆகும். அவை, கிண்டர்கார்டன்கள், பள்ளிகள், சிறுவர்களுக்கான பிற கல்வி நிலையங்கள், ஆகியவற்றின் வேலைகளை நெறிப்படுத்து கின்றன.

மாவட்டக் கல்வித் துறைகளின் அலுவல்களுக்கு அம் மட்டத்தில், உழைப்போர் பிரதிநிதிகளின் சோவியத்தும் அதன் செயற்குழுவும் வழி காட்டுகின்றன.

மாவட்டக் கல்வித் துறைகளின் வேலைகளில் கீழ் வருவன அடங்கும்:-

(1) கல்வி நடவடிக்கைகள் பற்றியும், கல்வி நிலை யங்களை நடத்துவது நிர்வகிப்பது பற்றியும் நிறைவேற்றப் படும் சட்டங்கள், இடப்படும் ஆணைகள், கட்டளைகள் ஆகியவற்றைச் செயல்படுத்தல்;

(2) ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், நியமித்தல், ஆய்தல்;

(3) சிறுவர்களுக்கான பள்ளிகளையும் கல்வி நிலையங் களையும் ஒழுங்குபடுத்தல்;

(4) போதனை முறை வழிகாட்டல்;

ஒவ்வொரு பள்ளியிலும் நடக்கும் கல்விப் பணியின் தரத்தைத் தெரிந்து கொள்ளுதல், கடினமும் சிக்கலுமான

பிரச்சினைகளைத் தீர்க்க, ஆசிரியர்களுக்கு உருப்படியான உதவி செய்தல், பள்ளி வேலைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவை மாவட்டக் கல்வித்துறையின் பெரும் பணிகள் ஆகும்.

ஒவ்வொரு மட்டத்திலும் செயல்படும் நிர்வாக அமைப்பிற்கு ஆய்வாளர்கள் உண்டு. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நடைமுறைகளைப் பின்பற்றும்படியும் தரம் முடிந்த அளவு உயர்ந்த நிலையில் இருக்கும்படியும் பார்த்துக் கொள்ளுவது ஆய்வாளர்கள் பணி ஆகும். ஆய்வாளர்கள், ஆசிரியர்களுக்கும் பிற, கல்விப் பணியாளர்களுக்கும் நண்பர்களாக, ஞானிகளாக, வழிகாட்டிகளாகச் செயல்படுகிறார்கள். பள்ளிக்கூட நடவடிக்கைகளின் எல்லாக் கூறுகளின் மேலும், ஆய்வாளர்கள், முறையான நாட்டம் செலுத்துகிறார்கள். கூறப்பட்ட ஆலோசனைகளை நடைமுறைப் படுத்தியுள்ளார்களா என்பதை அடுத்தடுத்து கண்காணிக்கிறார்கள். கண்ட நிலையை அலசிப் பார்த்து, பொதுத் தன்மைகளைக் காணவும் பாடங் கற்பித்தலில், புதுமையான வளர்ச்சிகளை மற்று ஆசிரியர்களுக்கு எடுத்துக் காட்டி, புதிய சாதனைகளைப் பொதுச் சொத்தாக்கவும், ஆய்வாளர்கள் திறமை பெற்றிருக்க வேண்டும்.

கல்வியாண்டு தோறும் ஒரு முறையாகிலும் ஒவ்வொரு பள்ளியையும் தணிக்கை செய்யும் வகையில், பள்ளித் தணிக்கை திட்டமிடப்படுகிறது.

நிலப்பரப்பு, பள்ளிகளின் வகை ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கு முந்திய நிலையங்களுக்குத் தனி ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். பள்ளிகளைத் தணிக்கை செய்யும் பொருட்டு ஆய்வாளர்கள், தங்களுக்கு உதவியாக, ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள், கழகங்கள், கல்விக் கழகங்கள், ஆகியவற்றில் வேலை செய்யும் ஆசிரியர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

பள்ளி இயக்குனர்கள் (தலைமையாசிரியர்கள்), ஆசிரியர்கள் இவர்களை உயர்ந்த தரமான தகுதி அடிப்படையில் ஆய்வாளர்களாக நியமிப்பார்கள். அவர்களுக்குக் குறை

தது ஐந்தாண்டு பள்ளி அனுபவமாவது வேண்டும்; அதோடு கல்விக் கழகத்திலோ, பல்கலைக் கழகத்திலோ உயர் பட்டம் பெற்றிருக்க வேண்டும். சாதாரணமாக ஆய்வாளர் அனுபவம் பெற்றவர்களில் இருந்து உயர் நிர்வாகப் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பார்கள். ஆசிரியர்களுக்கு இருப்பது போல, ஆய்வாளர்களுக்கும் ஒரே சீரான காலங்களில், பணியிடைப் பயிற்சி உண்டு. ஆய்வாளர்களுக்கான பயிற்சி, கல்வி அலுவலர்களைப் பயிற்றும் கழகங்களில் நடக்கும்.

தொட்டில் முதல் தள்ளாத வயது வரையில் உள்ள, மிக எண்ணற்றவர்களுக்குப் பயன்படும் ஒரு மலை போன்ற கல்வித் திட்டத்திற்கு, பெரு நிதி தேவைப்படுவது இயற்கை. நல்ல கல்வி மலிவாகக் கிடைக்காது; அதற்கு நிறையப் பிடிக்கும். இதை சோவியத் அரசு உணர்ந்துள்ளது; எவ்விதத் தடையும் இல்லாமல், தாராளமாக வேண்டிய நிதியை ஒதுக்குகிறது.

சோவியத் அரசு, கல்விக்கும், கலைக்கும் மலையளவு நிதி உதவி அளிப்பது, சோவியத் கல்வி முறையில் ஒளி விடும் கூறாகும். நாட்டு வளர்ச்சியில் கல்விக்குரிய முக்கிய பங்கினை அரசு உணர்ந்திருப்பதற்கு அடையாளம் அப்பெரு நிதி. பத்தாண்டுக்குப் பத்தாண்டு கல்வி விரைந்து வளர்ந்து கொண்டிருப்பதோடு, தரத்திலும் உயர்ந்து கொண்டிருப்பது, இத்தாராளக் கொள்கை இடையறாது மேற் கொள்ளப்பட்டிருப்பதற்குச் சான்றாக விளங்குகிறது.

கல்வியை, மிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்த முதலீடாக, சோவியத் அரசும், சமுதாயமும் கருதுகின்றன. அதற்கு எவ்வளவு முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள் என்பதை, கல்விக்காக ஒதுக்கும் பெருநிதியும், ஆண்டுக்கு ஆண்டு அது பெருகும் வீதமும் காட்டுகின்றன. நாட்டின் பொருளியலில், கல்வி, முன்னடத்தும் துறைகளில் ஒன்று என்று சோவியத் அரசு கருதுகிறது. கல்விக்காக ஒதுக்கும் நிதியையும் ஆட்பெருக்கத்தையும் கொண்டு இதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை அறியலாம்.

கல்விக்கான நிதி, முக்கியமாக இரு வழிகளில் கிடைக்கிறது. அரசின் வரவு செலவுத் திட்டங்களில் கல்விக்காக

ஒதுக்கப்படும் பணம் முதல் வழியாகும். கூட்டுப் பண்ணைகள், தொழிற் கூடங்கள், கூட்டுறவு சங்கங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவை கல்விப் பணிக்காகக் கொடுக்கும் நன்கொடைகள், இரண்டாவது வருவாயாகும். அரசுப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் ஏராளமான பள்ளிக் கட்டடங்களைக் கட்டி, அவற்றிற்கான தளவாடங்களையும் கொடுத்து உதவியுள்ளன. 1946-க்கும் 1960-க்கும் இடையில், கூட்டுப் பண்ணைகள் மட்டும் 32,000 பள்ளிக் கட்டடங்கள், கிண்டர்கார்டன்கள், கிரெச்சுகள் அமைப்பதற்குக் காரணமாக இருந்துள்ளன. அதனால் இருபது இலட்சம் சிறுவர் சிறுமியருக்கு இட வசதி கிடைத்தது. அதைப் போலவே தொழிற்சாலைகளும் கிண்டர்கார்டன்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டடங்கள் கட்டித்தருகின்றன; அவற்றிற்கான தளவாடங்களையும் கொடுக்கின்றன.

சோவியத் ஆட்சிக் காலத்தில், 3 கோடியே 70 இலட்சம் மாணவர்களுக்குப் புதிய கட்டடங்களில் இடவசதி செய்யப்பட்டது என்பதைக் கணக்கில் கொண்டால், எவ்வளவு பெரிய அளவில் கல்வி நிலையங்கள் கட்டப்பட்டன என்பது தெளிவாகப் புலப்படும்.

குடியரசுகள் ஆண்டுதோறும் செலவிடும் மொத்த நிதியில் 30 முதல் 40 விழுக்காடு வரை சமூகப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது. மாநகர சோவியத்துகள் தங்கள் செலவில் 60 விழுக்காட்டை சமூகப் பணிகளுக்கு ஒதுக்குகின்றன. இந்த ஒதுக்கீடுகளில் பெரும் பங்கு கல்விக்கு ஆகிறது. கல்விக்கு ஒதுக்கும் மொத்த செலவில் நூற்றுக்கு 85 விழுக்காடு அரசின் நிதியிலிருந்தும், மற்ற 15 விழுக்காடு கூட்டுப் பண்ணைகள், தொழிற் கூடங்கள் முதலியன கொடுக்கும் உதவியாலும் கிடைக்கின்றது.

சோவியத் தத்துவம் என்ன? ''எல்லாம் மனிதனுக்கே; அவனுடைய நன்மைக்காகவே.'' இதுவே சோவியத் நாட்டின் தத்துவம். இதற்கு ஏற்ப, கல்வி எல்லோருடைய பொறுப்புமாகும். சோவியத் ஆட்சிக்காலம் முழுவதிலும் கல்விக்குத் தாராளமாக நிதியும், ஆட்களும் கொடுத்து ஆதரிப்பதைக் காணலாம்.

# நம்பிக்கையோடு முன்னே

ஒரு நாட்டின் வரலாற்றில், அறுபது ஆண்டுக்காலம் என்பது மெய்யாகவே குறுகிய அளவையாகும். உலகத்தின் முதல் சமதர்ம நாடாகிய சோவியத் ஒன்றியம் அந்தக் குறுகிய காலத்தில் சாதித்துள்ள 'அற்புத'ங்கள் பலவாகும். தொழில்கள் பல இல்லாத, வறுமைமிக்க நாடு என்னும் நிலையிலிருந்து, தொழில் மயமான நாடுகளின் முன்னணிக்கு இது விரைந்து வந்துள்ளது. பலிக்குமோ பலிக்காதோ என்று ஐயப்படக் கூடிய ஏழ்மையான தொழிலாக வேளாண்மை இல்லை. நிறைபயன் உடைய, விஞ்ஞான அடிப்படையில் நடக்கும் நடவடிக்கையாக, சோவியத் நாட்டுப் பயிர்த் தொழில் விளங்குகிறது. இது, இயந்திரங்களின் உதவியால் நடக்கிறது; தொழில் நிர்வாகக் கோட்பாடுகளைச் செயல்படுத்தும் முறையில் இத்தொழில் நடக்கிறது. இது, இனியும் எழுத்தறிவு இல்லாத குடியானவர்களின் வேலையாக இல்லை. வேளாண்மை ஆயிரக்கணக்கான தகுதிமிகுந்த விஞ்ஞானிகளை ஈடுபடுத்தும் பெருந் தொழிலாக நடக்கிறது.

சோவியத் ஒன்றியம் கட்டி முடித்துள்ள மாபெரும் நீர்மின் நிலையங்கள், ஒளிவிடும் தொழிற் பேட்டைகள், மாபெரிய பாய்ச்சல் கால்வாய்கள், போக்குவரத்துக் கால்வாய்கள் ஆகியவை சோவியத் குடிமக்கள் அடைந்துள்ள பன்முக அறிவு வளர்ச்சிக்கும், சோவியத் தொழிலாளர்கள் எட்டிப் பிடித்துள்ள உயர் மட்ட நுட்பப் பயிற்சிக்கும், திறனுக்கும் அவர்கள் அனைவரும் உழைப்பில் காட்டும் ஆர்வத்திற்கும் நோன்பிற்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

எல்லாவித நடவடிக்கைகளிலும் பெற்றுள்ள முன்னேற்றத்திற்கு வேராக அமைந்திருப்பது சோவியத் கல்வி

முறையே ஆகும். குறுகிய காலமாகிய பதினைந்து ஆண்டுகளுக்குள், சோவியத் கல்வித் திட்டம் 12 கோடி ஆண்களுக்கும் பெண்களுக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தது. இதுவே முன்னறியாத அளவு மாபெரும் சாதனையாகும்; இது பெரும் விளைவாற்றலுடைய சாதனையாகும். சோவியத் கல்வி, அந்நிலையிலிருந்து நெடுந்தூரம் முன்னேறி விட்டது. சோவியத் ஒன்றியம் என்னும் பரந்த அந்நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் வீடுதோறும் கல்விப் புரட்சி தொடர்ந்து நடக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு, பல பத்து இலட்ச மக்கள் கல்வியிலும், பயிற்சியிலும் அடுத்தடுத்த நிலைகளுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சோவியத் கல்வி, வாழ்நாள் முழுவதற்கும் கல்வியாகும்; அக்கல்வியைக் கொடுக்கும் சமுதாயத்தோடு அது இணைக்கப்பட்டிருக்கிறது. அச்சமுதாயத்தின் நலனுக்காகவே அது வளர்க்கப்படுகிறது; உயர்த்தப்படுகிறது.

சோவியத் கல்வித் திட்டம், தன்னுடைய பணிகளை நிறைவேற்றுவதில் வெற்றி பெற்றுள்ளது. உலகப் புகழ் பெற்ற அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும் உருவாக்குவதில் அது வெற்றி பெற்றுள்ளது. வானவெளி ஆராய்ச்சிக்கு மனிதனை அனுப்புவதில், முதல் நாடாக இருந்ததன் மூலம், சோவியத் சமுதாயம், அக்கல்வி முறையின்பால் வைத்துள்ள நம்பிக்கைக்கு உரியது, சோவியத் கல்வி முறை என்பதைக் காட்டிவிட்டது. அது நாட்டின் பொருளியல் துறையிலும் அரசியல் துறையிலும் தலைகாட்டும் பல்வேறு சிக்கல்களைச் சரியாகச் சமாளிக்கக்கூடிய ஆற்றல் பெற்ற பொறியாளர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள், நிபுணர்கள், நிர்வாகிகள் ஆகியோரை உருவாக்கி நாட்டுக்குக் கொடுத்துள்ளது. அளவிலோ, வகைகளிலோ, தரத்திலோ சோவியத் கல்வி முறை வேறெந்தக் கல்வி முறைக்கும் பின்னடையவில்லை.

ஆயினும் சோவியத் கல்வியாளர்களோ, நிர்வாகிகளோ இதுவே போதுமென்று ஓய்ந்திருக்கவில்லை. முன்னேற்றம், தர உயர்வு ஆகிய பாதையில் அவர்கள் சளைக்காது விரைந்து நடைபோடுகிறார்கள். பல்வேறு கல்வி முறைகளில், மற்ற நாட்டவர்கள் எட்டிப் பிடிக்காத, புதிய, சிறந்த

உயர்சிகரங்களை சோவியத் கல்வியாளர்கள் தொடர்ந்து எட்டிப் பிடிப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. எல்லாச் சிறுவர்களையும் பிடிக்கும் வகையில், தங்கள் வலைகளைப் பரவலாக வீசுகிறார்கள்; இளமையிலேயே பிடித்துக் கொள்ளுகிறார்கள். எல்லார்க்கும் கல்வி உரிமை உறுதிப்படுத்தப் பட்டிருப்பதோடு, அதற்கான வசதிகளை முழுமையாகக் கிடைக்கச் செய்துள்ளார்கள். இத்தகைய நிலையில், சோவியத் மக்கள், சமுதாய இயல், கலையியல், மானிட இயல், அனைத்துலக இயல்களில் புதுப் புது உறவுகளுக்கு வளர்வது இயற்கை.

சோவியத் ஒன்றியம், வளர்முக நாடுகளுக்குக் கற்பிக்கும் பாடம் ஏதாகிலும் உண்டா? ஆம். அது நமக்குக் கற்பிக்கும் பாடங்கள் பலவாகும். 'மனமுண்டானால் இடம் உண்டு.' இதுவே, சோவியத் ஒன்றியத்திடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முதல் பாடமாகும். ஒரு நாட்டின் பொருளியல், சமுதாய நிலைகள் எப்படியிருப்பினும், அந்த நாட்டில் ஒருமித்த போதிய வலிமையுள்ள மனம் உண்டாயின், அது தனது பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியைக் காண முடியும்.

மக்கள் முன்னேற்றம், வேளாண்மை வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி ஆகிய எல்லா முன்னேற்றங்களுக்கும் வேர், கல்வியே என்பதை சோவியத் வரலாறு தெள்ளத் தெளியக் காட்டுகிறது. வளர்முக நாடுகள், நாட்டின், மக்களின், வளர்ச்சிக்கு வழி, கல்வி என்னும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'பொறுக்கி யெடுக்கப்பட்ட சிலருக்கே உயர் அறிவு நாட்டமும், கல்வி ஈடுபாடும் கைவரும்; பொது மக்களைப் பொறுத்தமட்டில், எண்ணையும், எழுத்தையும் கற்பதிற்காவிட்டாலும், ஓரளவு பொது அறிவோடு நிறைவு கொள்ள வேண்டும்' என்னும் பாசி படர்ந்த மூட நம்பிக்கையை வளரும் சமுதாயம், காலந் தாழ்த்தாது கைவிட வேண்டும். மாறாக மனிதர்களுடைய கற்கும் ஆற்றலுக்கு வரம்பே இல்லை என்னும் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொள்ள வேண்டும். நாம், அக்கோட்பாட்டினைத்

தொடர்ந்து, பல்வேறு கல்வி அனுபவங்களைக் கொடுக்கும் வாய்ப்புக்களையும், வசதிகளையும் இடையறாது வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

அநேக வளர்முக நாடுகள், மக்கள் தற்குறித் தன்மை என்னும் நீங்காத நோயால் வாடுகின்றன. பள்ளிக்குப் போக வேண்டிய வயதில் உள்ள சிறுவர் சிறுமிகளிலே குறிப்பிடத்தக்க விழுக்காட்டினர், பள்ளியில் சேராதிருத்தல், வளர்முக நாடுகளில் பரவியுள்ள, மற்றொரு நோயாகும்.

வளர்முக நாடுகள், தங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ள, உண்மையாகவே விரும்பினால், பரவலாக உள்ள பொது மக்கள் தற்குறித் தன்மையின் பேரிலும், பள்ளிக்கூடத்திற்கு வராமை பரவியுள்ளதன் பேரிலும் இருமுனைத் தாக்குதல்களைத் தொடங்க வேண்டும். ஒரே நேரத்தில், நாடு தழுவிய முதியோர் எழுத்தறிவு இயக்கத்தையும், நூற்றுக்கு நூறு சிறுவர் சிறுமிகளைப் பள்ளியில் சேர்க்கும் பெரு முயற்சியையும் பேரார்வத்தோடு தொடங்க வேண்டும். இவற்றில் ஒன்று, மற்றொன்றின் வளர்ச்சிக்குத் தடை என்று கருதக் கூடாது. எல்லா முதியோர்களும் பள்ளிக்குச் செல்லும்படி செய்துவிட்டால், அச்சூழலில் எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது எளிதாகி விடும். மக்கள் எழுத்தறிவிப்புப் பேரியக்கமானது, ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்லும்படி உந்தும் சரியான சூழ்நிலையை உருவாக்கிவிடும். எனவே, முதியோர் எழுத்தறிவிப்பு, குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல் என்னும் இரண்டிற்கும் ஒரு சேர, முன்னுரிமை கொடுக்க வேண்டும். முதியோர்க்கான எழுத்தறிவுப் பாடங்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியோரின் அன்றாட வேலைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட வேண்டும். அப்பாடங்களில், முதியவர்கள், மிக அடிக்கடி பயன்படுத்தும் சொற்களையும், சொற்றொடர்களையும் பெரும்பாலும் பயன்படுத்த வேண்டும். கணக்குப் பயிற்சிகள், அம்முதியவர்களின் வாழ்க்கை நடவடிக்கைகளையொட்டி அமைய வேண்டும்.

நாடு தழுவிய முதியோர் எழுத்தறிவு இயக்கத்தில், இலட்சக் கணக்கான தொண்டர்களைச் சேர்த்தல் வேண்டும். எழுத்தறிவிக்கும் வகுப்புகள், நாளைக்கு இரண்டு மணிகளுக்கு மேல் நடக்கக் கூடாது. படிக்க வரும் முதியோர்களின் வசதிப்படி வகுப்பு நேரம் அமைய வேண்டும். வகுப்பு நேரம், பருவத்திற்கு பருவம் மாறுபடலாம். முதியோர் எழுத்தறிவுப் பள்ளிகளுக்கு வரும் முதியவர்களிடம் எவ்விதக் கட்டணமும் வாங்கக் கூடாது. முதியவர்களுக்கு பாட நூல்களையும், எழுது பொருள்களையும் இலவசமாகக் கொடுக்க வேண்டும். தக்க சூழ்நிலையையும், ஊக்கத்தையும் உருவாக்கவும் முடிந்த அளவு பொருள் உதவிகளைப் பெறவும் பொது மக்கள் அமைப்புகளின் ஆதரவைப் பெற வேண்டும். தனியார், பொது அறக் கட்டளைகள், தொழில் நிறுவனங்கள், வாணிக நிலையங்கள் ஆகியவை கற்க வரும் முதியோர்களுக்குத் தேவையான நூல்களையும், எழுது பொருள்களையும் வாங்கி, இலவசமாகத் தந்து உதவலாம்.

முதலில் தொடக்கக் கல்வியாவது எல்லோர்க்கும் எட்டுவதற்கு அடிப்படையாக, நாடு முழுவதிலும் போதிய தொடக்கப் பள்ளிகள் நிறுவப்பட வேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் நடக்கும் தூரத்தில் தொடக்கப் பள்ளி கிட்டும் வகையில் அவற்றை அமைக்க வேண்டும். எது நடக்கும் தூரம் என்பது அப்பக்கத்து நில அமைப்பினைப் பொறுத்ததாகும். எல்லார்க்கும் எட்டுதல் என்பதைக் கருத்தில் கொண்டு போதிய எண்ணிக்கையில் தொடக்கப் பள்ளிகளை, அரசே நிறுவி பராமரிக்க வேண்டும்.

முதலில் தொடக்கக் கல்வியை எல்லார்க்கும் இலவசமாக்க வேண்டும். படிப்படியாக, அடுத்த உயர் மட்டக் கல்விக்கு இலவசம் விரிவாக்கப்பட வேண்டும்.

எல்லோரும் தொடக்கக் கல்வி பெறும் வரை, அடுத்த மட்டக் கல்வி வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ஒத்தி வைக்கக் கூடாது. அவற்றின் சாதாரண சராசரி வளர்ச்சியாவது காப்பாற்றப்படுவதற்கு வேண்டிய நிதியும் ஆட்களும் கொடுக்க வேண்டும். ஏனென்றால், எல்லோரும் பள்ளிக்குச் செல்லும் அளவு தொடக்கக் கல்வியை விரிவு

படுத்தவும் உயர் மட்டக் கல்வியைப் பெற்ற இளைஞர்கள் மேலும் மேலும் தேவைப்படுவார்கள்.

நாம், நெடுங்காலமாகக் கையாண்டு வரும் ஒரே வாய்க்காலாகிய முழு நேர வாய்க்காலை மட்டுமே நம்பி இருத்தல் ஆகாது. இந்த ஒரே வாய்க்காலை மிக நெடுங் காலம், அநேக நாடுகள் நம்பியிருந்து நலிந்து விட்டன. இந்நம்பிக்கையால் சிறு வயதிலேயே உழைத்துப் பிழைக்க வேண்டிய பல பத்து இலட்சக்கணக்கான இளைஞர்கள் உயர் நிலைப் பள்ளிகளில் படிக்கும் வாய்ப்புகளையே இழந்து விட்டார்கள்.

கல்வி வேண்டுமென்றால் முழு நேரம் படித்தாக வேண்டுமென்று வற்புறுத்துவதன் மூலம் பல பத்து இலட்சக் கணக்கான இளம் பையன்களையும் பெண்களையும் நாட்டின் பொருளியல் நடவடிக்கைகளுக்கு அப்பால் வைத்திருப்பது தேவையல்ல; நல்லதும் அல்ல. பதின்மூன்று பதினைந்து வயதைத் தாண்டியவர்களுக்காக, மாலைக் கல்வித் திட்டங்களையும் அஞ்சல் வழிக் கல்வியையும் பெரிய அளவில் அமைத்து, அவ்விளைஞர்களுக்கும் கல்வி பெறும் மற்றொரு வாய்ப்பினைத் தர வேண்டும்.

கல்வியை வளர்க்கும் குறிப்பிட்ட சமுதாயத்தின் வாழ்க்கை உண்மைகளிலிருந்து கல்வியைப் பிரித்து வைக்கும் தவறை வளர்முக நாடுகள், மீண்டும் செய்யக் கூடாது. கல்வி, தனி மனிதர்களை வளர்க்கும் சாதனம் மட்டுமல்லாது, சமுதாயத்தின் பல்வகைத் தேவைகளையும் நிறைவு செய்யும் வழி என்பதைக் கருத்தில் கொண்டு, கல்வி நடவடிக்கைகளைச் சீரமைக்க வேண்டும். அவை, சமுதாயத்தோடும் அவற்றின் நடவடிக்கைகளோடும் தொடர்புபடுத்தப்பட வேண்டும். இத்தொடர்பு இன்றைய சமுதாயத்தோடு மட்டுமல்ல; வருங்கால சமுதாய நடவடிக்கைகளோடும் ஆகும்.

தொடக்க வகுப்புக்களில் கைவினைகளுக்கு மாணவர்களை அறிமுகப்படுத்த முயல வேண்டும். கல்வியின் முறையான கூறாக, பணியனுபவம் அமைதல் வேண்டும். உயர் நிலைப் பள்ளியின் கடைசி வகுப்புகளில் தொழிற் பயிற்சியைக்

கொடுப்பது நம் நோக்கமாகட்டும். உயர்நிலைப் பள்ளியில் கடைசி இரண்டு அல்லது மூன்று ஆண்டு காலத்தில் வேலை நேரத்தில் மூன்றில் ஒரு பகுதியை சமுதாயத்திற்குப் பயன் படும் உற்பத்தி நடவடிக்கைகளில் செலவிட வேண்டும். இது, சிலருக்கல்ல, எல்லார்க்கும், கல்வியின் இன்றியமை யாத பகுதியாக அமைய வேண்டும்.

பொது மக்களின் பண்பாட்டு நிலையை உயர்த்துவதில் துணையாக இருக்கக் கூடியது, நாடு தழுவிய பொது நூலக அமைப்பாகும். தொடக்கப் பள்ளி உட்பட ஒவ்வொரு பள்ளியிலும் நல்ல நூலகத்தை நிறுவுவதோடு, பொது நூலகங்களை நிறுவ வேண்டும்.

கல்விக்குச் சாவி, ஆசிரியரே ஆவார். அவருடைய திறமையின் தரத்தையொட்டி, மக்கள் பெறும் கல்வியின் தரம் அமையும். எனவே, பணிக்கு முந்தியும் பணியிடை யும் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கேற்ற பணிப் பயிற்சித் திட்டம் தேவைப்படுகிறது. ஆசிரியர் கள், தங்கள் பொதுக் கல்வி அல்லது தொழிற் கல்வித் தகு திகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் இல்லாது போனால், அவற்றை ஏற்படுத்த வேண்டும்; இருந்தால், முடிந்த அளவு மிக அதிகமானவர்களுக்குப் போதுமான அளவிற்கு அவ்வாய்ப்புக்களை விரிவுபடுத்த வேண்டும்.

வகுப்பு நடவடிக்கைகளுக்கு வலிவூட்டும் புற பாட நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் குறைந்தது ஒரு புற பாட நடவடிக்கையிலா வது பங்கு கொள்ளும்படி ஊக்கப்படுத்த வேண்டும்.

பொது மக்களுடைய அக்கறையும், ஈடுபாடும் இல் லாமல் நாடு தழுவிய, பெரும் கல்வி வளர்ச்சியையோ, உயர்வையோ காண இயலாது. பொது மக்களுடைய மன தைப் பண்படுத்தி, 'எல்லார்க்கும் கல்வி' என்னும் கோட் பாட்டில் அக்கறை கொள்ளச் செய்து, இலட்சியங்களை நடைமுறைகளாக்குவதில் ஈடுபடும்படி செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஒவ் வொரு பள்ளியிலும் பெற்றோர் சங்கங்களை நிறுவுவதும் அவற்றைச் சுறுசுறுப்பாக செயல்பட வைத்தலும் கல்வி

பற்றிய பொது சொற்பொழிவுகளுக்கும், உரைகளுக்கும் ஏற்பாடு செய்தலும் நாடு தழுவிய கல்வி முயற்சிகளில் பொது மக்கள் பங்கு கொள்ள வழிவகை செய்யும்.

அடுத்த சில பத்தாண்டுகளுக்காவது ஒவ்வொரு வளர்முக நாடும் லெனின் கூறிய அறிவுரையாகிய 'படியுங்கள்; படியுங்கள்; மேலும் படியுங்கள்' என்பதைப் பிறழாமல், பின்பற்றுதல் நல்லது. நிகழ்கால சமுதாயத்தின் சிக்கல்கள் உட்பட பலவற்றைப் பற்றி, கற்பதிலேயே கவனம் முழுவதையும் செலுத்துமாறு, வளர்முக நாடுகளின் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவ சமுதாயத்திடை, கல்வியின்பால் உள்ள கருத்தைச் சிதைப்பதில், அரசியல் கட்சிகள் போட்டியிடுவதற்குப் பதில், மாணவர்களை தீவிர அரசியல் நடவடிக்கைகளில் தள்ளுவதில்லை என்னும் 'பெரிய மனித' உடன்படிக்கைக்கு வருமானல், ஆழ்ந்து கற்பதற்கும் விரைந்த கல்வி வளர்ச்சிக்கும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி, மெய்யாகவே மதிப்புள்ள, நிலையான, தொண்டினைச் செய்தவை ஆகும்.

வளர்முக நாடுகளுக்கு முன்னர் உள்ள பிரச்சினைகளோ மலை போன்றவை. சோவியத் ஒன்றியத்திலும் 1917-ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சியின்போது, நிலைமை இப்படித்தான்—ஏன் இன்னும் மோசமாக—இருந்தது. இன்று, நாமே இருட்டில் தடுமாறத் தேவையில்லை என்பதையும் நினைவுபடுத்திக் கொள்வோமாக. நாம் சோவியத் பொருளியல் முறையைப் பின்பற்றினலும் பற்றுவிட்டாலும், கல்வி பற்றி அது கற்பிக்கும் பாடங்கள் விலை மதிப்பில்லாதவை; அவற்றை சாதுர்யத்தைப் பின்பற்றாத நாடுகளும் பின்பற்றலாம். நம் முன்னே உள்ள பிரச்சினைகள் பலவாயினும், நம்முடைய வினைவாற்றலும் மிக உயர்ந்தது. எனவே, எல்லோர்க்கும் நல்ல கல்வி கொடுப்பதற்காக, நம்பிமும் நம் எதிர்காலத்திடமும் நம்பிக்கை கொண்டு முன்னேறுவோமாக.

4 - JUL 1978